பிஸ்மில்லாஹி.

இருஜஹானுக்கும் சர்தாராகிய நமது நாயகம்
முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
அவர்களின் திருப்புதல்வியாராகிய ஹஸரத்

# பாத்திமா நாயகி ஜீவிய சரித்திரம்.

இஃது

மொ. அ. ஷாஹுல் ஹமீது லெப்பை
அவர்கள் முயற்சியால்

உருது பாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு
தமது சொந்தப் பொருளினால்

திருவல்லிக்கேணி
தமது
ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

முதற் பதிப்பு.

…ஹிஜ்ரி 1346-…

…ed Copy Right. [ரூ. 1—0—0

Q7:31
N28
178844

பிஸ்மில்லாஹி.

இருஜஹானுக்கும் சர்தாராகிய நமது நாயகம்
முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
அவர்களின் திருப்புதல்வியாராகிய ஹஸரத்

# பாத்திமா நாயகி ஜீவிய சரித்திரம்.

இஃது
மொ. அ. ஷாஹுல் ஹமீது லெப்பை
அவர்கள் முயற்சியால்
உருது பாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு
தமது சொந்தப் பொருளினால்

திருவல்லிக்கேணி
தமது
ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

முதற் பதிப்பு.

1927-௵ ஹிஜ்ரி 1346-௵

விலை] Registered Copy Right. [ரூ. 1 0 0

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம்

ஹஸரத் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களின்

# ஜீவிய சரித்திரம்

## 1-வது அத்தியாயம்

### உலக மாதாவாகிய ஹஸரத் கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்களின் வமிச பரம்பரை

இந்நாயகியின் திருநாமம் கதீஜா என்பதாம். தாஹிரா என்றொருபட்டப்பெயரு முண்டு. இவர்களுடைய தந்தை குவைலித் என்பவர். இவர் குரைஷியர்களில் பிரசித்திபெற்ற ஓர் அதிகாரி. இவர் ஆண்டவனுடைய கிருபையால் திரண்ட செல்வமும், கீர்த்தியும் செல்வாக்கு முடையவராகவிருந்தார். இவருக்களிக்கப்பட்ட செல்வங்களனைத்திலும் கதீஜா (றலி) அவர்களே பிரதானமான உயர்ந்த செல்வமாக விளங்கினார்கள். அந்நாயகியார் பின்னால் நமது றஸூலாகிய நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய மனைவிகளில் ஒருவராகிப் பெரும் பேறு பெற்றதே இதற்குப்போதிய அத்தாட்சியாம்.

கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்களின் தந்தையாகிய குவைலித் என்பவர் அஸத் என்பவருடைய புத்திரர். அஸத் என்பவர் அப்துல் உஸாவின்புத்திரர், அப்துல் உஸாவின் தந்தை குஸயீ என்பவர். இவரிலிருந்தே ஹஸரத் நபிநாயகம் அவர்கள் பிறந்த பரம்பரை பிரிகிறது. கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹஸரத் அவர்களுடைய பரம்பரையில் ஒரு தீபம்போன்றவர்கள்.

**கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்களின் மாதாவமிசம்**

கதீஜா(றலி)அவர்கள் தாயாரின் பெயர்பாத்மா. அவர்கள் தாயார் ஸாஇதா, அவர்களுடைய தாயார் அஸ்அம், அவர்களின்தாயார் ஹிலம், அவர்களின்தாயார் ரவாஜா அவர்கள் தாயார் முஜீர், அவர்கள் தாயார் அப்த், அவர்கள் தாயார் மயீஸ், அவர்கள் தாயார் ஆமிர். கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்களின் தந்தை பரம்பரை

யைப் போல் தாயார் பரம்பரையும் சிரேஷ்டமான தாகவே யிருந்தது. இவர்களுடைய பரம்பரை ஹஸரத் அவர்களுடைய பத்தாவது பரம்பரையில் சேர்கிறது. இவற்ருல் கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் தாய்தந்தையர் இரண்டு வகையிலும் சிறந்த பரம்பரையைச் சேர்ந்தவர்களாகவே யிருந்தார்கள்.

## கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்களின் பிறப்பு

கதீஜா றலியல்லாகு அன்ஹா அவர்கள் கி. பி. 555-வது வருடத்தில் பிறந்தார்கள். இவர்கள் பிறந்தது முதல் நல்லொழுக்கம், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, பொறுமை, இரக்கம் ஆகிய சகல நற்குணங்களும் பொருந்தியவர்களாக விளங்கினுர்கள். அப்படிப்பட்ட இருளடைந்தகாலத்திலும் அவர்கள் பரிசுத்தமானவர்களென்றே பெயரடைந்திருந்தார்கள். இதனுல் அவர்கள் ஸ்திரீகளுக்குள் நாயகம் என்று குரைஷியர்களால் பட்டமளிக்கப் பட்டிருந்தார்கள். அவர்களுடைய தந்தையாகிய குவைலித் ஒரு வர்த்தகராய் இருந்தார். அத்தொழிலாலேயே அவர் சிறந்த செல்வச் சீமானுய் விட்டார்.

உலகில் இஸ்லாம் மார்க்கம் பரவுவதற்கு முன்பு கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஸாரா எதீமி என்பவருடைய புத்திரர் நயாஷ் என்பவரை முதல்முறையாக மணம் புரிந்திருந்தார்கள். நயாஷுக்கு அபூஹாலா என்ற இன்னெரு நாமமுமுண்டு. அவருக்கு ஹாலா, ஹிந்த் என்ற இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். முதல் புத்திரன் அக்காலத்திலேயே மரணமடைந்தான். இரண்டாவது புத்திரன் ஹஸரத் அவர்கள் காலத்தில் அவர்களது தோழர்கள்கூட்டத்தில் ஒருவனுயிருந்தான். கதீஜா (றலி) அவர்கள் இரண்டாம் முறை ஆயித் உடைய புத்திரர் அதீக் என்பவரை மணந்தார்கள். அவருக்கு ஒரு புத்திரியைப் பெற்ருர்கள்; அதீக் மரணமடைந்தபின் கொஞ்ச காலம் வரையில் கைப்பெண்ணுகவே யிருந்தார்கள். ஏனெனில் அவர்களுடைய தந்தையாகிய குவைலித் விருத்தாப்பிய தசையையடைந்து விட்டபடியால் அவருடையவர்த்தக விவகாரவிஷயங்களனைத்தையும் கதீஜா (றலி) அவர்களே கவனித்து வரவேண்டியதாக விருந்தது. இவ்வாறு நேர்ந்ததால் தான் ஹஸரத் நாயகம் அவர்கள் உண்மையும் நம்பிக்கையு முடையவரென்று கதீ

ஜா நாயகி அறிந்து கொள்ளச் சந்தர்ப்பம் வாய்ந்தது. அப்போது அவர்கள் ஹஸரத் அவர்கள் மேல் கொண்ட நல்லெண்ணமே பின்னால் அவர்களை மணம் புரிந்து கொள்வதற்கு வழியுண்டாக்கியது.

கதீஜா (றலி) அவர்கள் தக்க ஒருவர் மூலமாக "தாங்கள் உயர்ந்த குலத்தில் பிறந்தவர்களாக விருக்கிறதோடு தங்களிடம் உண்மையும், நம்பிக்கையும், நல்லொழுக்கங்களும், நன்னடக்கைகளும் குடிகொண்டிருப்பதால் தங்களை மணம் செய்து கொள்ளும்படி என் மனம் என்னைத் தூண்டுகிறது. மேலும் நான் தங்கள் பரம்பரைக்கு விலகியவளல்ல. தங்கள் பாட்டனார் பரம்பரையிலும் பாட்டியார் பரம்பரையிலும் இருவழியிலும் நெருங்கிய சம்பந்த வழியுடையவளாகவே யிருக்றேன்" என்று அறிவித்தார்கள்.

இம்மொழிகளைக்கேட்ட ஹஸரத் நபிநாயகம் அவர்கள் தமது சிறியதந்தையாகிய அபுதாலிப் இடம் சென்று சங்கதியைக்கூறி, "கதீஜாபீவி நல்ல குலத்திற்பிறந்தவர்கள்; சகலநற்குணங்களும் பொருந்தியவர்கள்; நல்ல செல்வமும் செல்வாக்கு முடையவர்கள்; நல்ல அறிவாளி; உருவத்திலும் நல்ல வனப்புடையவர்கள்; குலம் அழகு குணம் செல்வம் யாவற்றிலும் உயர்வானவர்களே" என்று கூறி அவருடைய ஆலோசனையைக் கேட்டார்கள்.

இருவரும் இதைப்பற்றி ஆலோசனைசெய்த பின் அபுதாலிப் ஹஸரத் அவர்களை நோக்கி "நீ கதீஜாபீவியை மணம் புரிந்து கொண்டால் நமது குடும்பத்திற்கு அது சிறப்பேயாகும். உலகவிஷயத்தில் உனக்கு எல்லாவிஷயங்களிலும் நல்ல விருத்திக்கு இடமுண்டாகும். சகல உதவியும் கிடைக்கும். சகலவிதங்களிலும் இச்சம்பந்தத்தால் உனக்கு நன்மையும் மேன்மையுமே உண்டாகும். ஆகையால் கதீஜாபீவியை மணந்து கொள்வது மிக்கநலமாகும்" என்றார்.

அதன்பேரில் ஹஸரத் அவர்கள் அவ்வாறே மணம் செய்து கொள்ள இசைந்தார்கள் இவ்விஷயத்தைப்பற்றி ஸீரத்துன் நபவியாவில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது. கதீஜா (றலி) அவர்கள் தமது வெள்ளாட்டியொருத்தியை ஹஸரத் அவர்களிடம் அனுப்பித் தாம் அவரை மணம் புரியவிரும்பியிருக்கும் சங்கதியையறிவித்தார்கள். அவ்வெள்ளாட்டி கூறியசங்கதி யாவும் கேட்ட ஹஸரத் அவர்கள்

"கதீஜாபீபி மிக்க செல்வவதி. நானோ ஏழை. செல்வமில்லாத நான், எவ்வாறு அவர்களை மணம் செய்து கொள்ளுவது? மேலும் ஏழ்மை நிலைமையிலிருக்கும் என்னையவர்கள் மணம் செய்து கொண்டால் எனக்கு அடங்கிக் கீழ்ப்படிந்து நடக்க அவர்கள் மனம் இடங்கொடுக்குமோ?" என்றார்கள்.

அதற்கு அந்த வெள்ளாட்டி:—"தாங்கள் அந்த விஷயத்தில் சற்றும் சந்தேகம் கொள்ள வேண்டாம். இத்தகைய விஷயங்களுக்கெல்லாம் நான் பொறுப்பாளி. தாங்கள் நான் கூறுவதில் பூரண நம்பிக்கை வையுங்கள்" என்று கூறிவிட்டுக் கதீஜா றலியல்லாஹு அன்ஹா, அவர்களிடம் சென்று நடந்த சங்கதியைக் கூறினார்கள்.

அவற்றைக் கேட்ட கதீஜா நாயகி யவர்கள் ஹஸரத் அவர்களைத்தம்மிடம் அழைத்து வரும்படி கூறினார்கள். அந்த வேலைக்காரி அவ்வாறே சென்று ஹஸரத் அவர்களை யழைத்து வந்தபோது கதிஜா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹஸரத் அவர்களை நோக்கி "தங்களுடைய உண்மையும், சாந்தம், தயை, நேர்மை முதலிய உயர்வான நற்குணங்களும் நல்லொழுக்கங்களுமே தங்களைமணம் செய்து கொள்ளவேண்டு மென்ற விருப்பத்தை யெனக்குண்டாக்கின. தாங்கள் பரிசுத்தவான்களுக்கெல்லாம் நாயகமாக விருக்கிறீர்கள். தங்களுடைய குணவிசேடங்கள் என்னைத் தங்களுக்கடிமையாக்கி விட்டன" என்று கூறினார்கள். ஹஸரத் அவர்கள் தமது சிறிய தந்தையிடம் சென்று நடந்த சங்கதிகளை பியம்பிய போது அவர் மிக்க சந்தோஷ மடைந்தார்.

அதன்பின் அபுதாலிப் அவர்கள் கதீஜாபீபியின் சிறியதந்தையும் அஸத்தின் புத்திரராகிய உம்ரூ என்பவரிடம் சென்று கதீஜாபீபி ஹஸரத் அவர்களை மணம் செய்து கொள்வதற்கு அனுமதியளிக்கும்படி கேட்டபோது அவர் அவ்வாறே சம்மதித்தார். இருபது ஒட்டகங்கள் மகர் கொடுக்க வேண்டு மென்று ஏற்பாடாகி அபுதாலிப் அவர்கள் குத்பா ஓதினார்கள். அதன்பின் கதீஜா பீபியின் சிறியதந்தை புதல்வனாகிய காபின் நௌபில் என்பவர் ஆசீர்வாத பத்திரத்தை வாசித்தார். பிறகு ஈஜாப் கபூல் நடந்து நிகாஹ் நிரப்பமாய்நிறைவேறிற்று. அச்சமயம் கதீஜா றலியல்லாஹு அன்ஹா, அவர்களுக்கு வயது நாற்பது. ஹஸரத் நபி நாயகம் அவர்களுடைய வயதோ இருபத்தைந்துக்கு அதிகமாகவில்லை

ஹஸரத் அவர்களின் வாலிபத்தின் முதல் அன்பைப் பெற்றவர்கள் கதீஜா றலியல்லாஹு அன்ஹா, அவர்களே. இதனால் ஹஸரத் அவர்களுடைய பத்தினிமார்களில் இவர்களே முதன்மையான கௌரவத்தையும் முமீன்களுக்கு மாதாவாகிய பெருமையையும் பெற்றார்கள்..

கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய கர்ப்பத்திலிருந்து ஹஸரத் அவர்களுக்கு மூன்று புத்திரர்களும் நான்கு புத்திரிகளும் ஜனித்தார்கள். அவர்களுடைய விவரம் பின் வருமாறு:—

புத்திரிகளின் பெயர். 1- ஜெயநப் றலியல்லாஹு அன்ஹா 2- ரொகையா றலியல்லாஹு அன்ஹா, 3- உம்மு குல்ஸூம் றலியல்லாஹு அன்ஹா, 4- பாதிமது ஸஹறா றலியல்லாஹு. அன்ஹா.

புத்திரர்கள்:— 1- காஸீம் றலியல்லாஹு அன்ஹு, 2-டாஹர் றலியல்லாஹு அன்ஹு, 3- அப்துல்லா றலியல்லஹு அன்ஹு புத்திரிகளில் ஜைனப் றலியல்லாஹு அன்ஹாவும், புத்திரர்களில் காஸிம் றலியல்லாகுஅன்ஹூம் மூத்தவர்கள். இந்த எழுபேரும்ஹஸரத் அவர்கள் நபி பட்டம் பெறுவதற்கு முன்பே பிறந்தவர்கள். இந்த மூன்றுபுத்திரர்களும் அக்காலத்திலேயேமரணமடைந்து விட்டார்கள். புத்திரிகள், தீர்க்கதரிசன காலத்தையடைந்து திரு இஸ்லாத்தையும் தழுவலாயினர். மூத்தபுத்திரி ஹஸரத் அவர்கள் கதீஜா றலியல்லாஹு அன்ஹாஅவர்களைமணம்புரிந்தஐந்தாவதுவருடம்பிறந்தார்கள். அதாவது ஹஸரத் அவர்களுடைய முப்பதாவது வயதில். இந்தமூத்த குமாரத்தி, கதீஜா றலியல்லாஹு அன்ஹா வுடைய தமக்கை புத்திராகிய அபுல் அஸாஸ்பினுர்ரபா, என்பவருக்கு மணம்புரியப் பட்டார்கள். இவர்களுக்கு அலி என்ற ஒருபுத்திரனும் அமாமா என்ற ஒருபுத்திரியும் பிறந்தார்கள். அலி என்ற இப்புத்திரர் வாலிப தசைக்கு வருவதற்கு முன்பே இறந்துபோனார். புத்திரியாகிய அமாமா வாலிபதசையடைந்து பாத்மாநாயகி காலஞ்சென்றபிறகு அலிகர்ரமல்லாஹு வஜ்ஹு அவர்களுக்கு இரண்டாவது தாரமாக வாழ்க்கைப்பட்டார்கள். அலிகர்ரமல்லாஹு வஜ்ஹு வீரசொர்க்கமடைந்தபின் அமாமா அவர்கள் முகைராபின், நௌபில்பின், ஹாரிஸ் என்பவரை இரண்டாம் முறை மணம்புரிந்தார்கள். இவர்களுக்கு யஹ்யா

என்ற ஒரு புத்திரர் பிறந்தார். கதீஜாபீபி யவர்களுடைய இரண்டாவது புத்திரியாகிய ரொகையா றலியல்லாஹு அன்ஹா என்பவர்களையும், 3-வது புத்திரி உம்முகுல்ஸூம் அவர்களையும் ஹஸரத் அவர்களது சிறியதந்தையான அபீலஹப் என்பவர் புத்திரர்களாகிய உத்துபாவுக்கும், அதீபாவுக்கும் மணம்புரிவதாய் நிச்சயம் செய்யப்பட்டிருந்தது. இது நடந்தது நபூவத்துக்கு முன்பு. ஆனால் இஸ்லாம் மார்க்கம் ஏற்பட்டபின் அந்த ஏற்பாடு இரத்து செய்யப்பட்டு அந்த இரண்டு புத்திரிகளும் உஸ்மான்றலியல்லாஹு அன்ஹு, என்பவருக்கு ஒருவர் இறந்த பின் ஒருவராக மணம் செய்விக்கப்பட்டார்கள். இவர்களில் பீபீ ரொகையாவுக்கு அப்துல்லா என்ற ஒருபுத்திரன் பிறந்து ஆறுவது வயதில் மரணமடைந்தார். பீபி உம்மேகுல்ஸூம் அவர்களுக்கு சந்தானமில்லை.

நபூவத்துக்குப் பத்து வருடங்களுக்குப்பின் அதாவது ஹிஜ்ரத்துக்குமூன்றுவருடங்களுக்கு முன் இரமலான் மாதத்தில் கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் சுவர்க்க மடைந்தார்கள். இன்னலில்லாஹி வஇன்னு இலைஹி ராஜிவூன்.

இப்போது கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய நான்காவது புத்திரியாகிய பாத்திமா றலியல்லாஹு அன்ஹா, அவர்களுடைய சரித்திரத்தைக் கூறுவதற்காக மேற்கண்ட விவரங்களையெல்லாம் கூறவேண்டியிருந்ததால் கதீஜா நாயகியின்சரித்திரத்தை இங்கனம் சுருக்கிக்கூறினோம். இவர்களின் ஜீவியசரித்திரத்தை சிறத்துல் குப்ராவென்னும் கதீஜா நாயகியின் ஜீவியசரித்திரத்தில் விரிவாய்க் காணலாம்.

## 2-வது அத்தியாயம்

## ஹஸரத் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களின் பிறப்பு

கிருஸ்து பிறந்த 574-வது ஜுமாதியுல் ஆகர்மீ 20வ வெள்ளிக்கிழமை, இளஞ்சூரியன் தனது பொன்கிரணங்களைப் பரப்பிக்கிழக்கேஉதயமாகும் சமயம், ஞானோதயம்போல்பாத்திமாறலியல்லாஹு அன்ஹா, அவர்கள் தாயார் கர்ப்பத்தினின்றும் உதயமானார்கள். அப்போது ஹஸரத் அவர்களுக்கு வயது நாற்பதுக்குமேல் ஆயிற்று.

அச்சமயம் உலகில் அஞ்ஞான இருள் நீங்கி இஸ்லாமின் ஞான ஒளிபரவும் காலமாகவிருந்தது. ஒருபுறம் மக்காவிலுள்ள பரி

சுத்த ஆலயமாகிய கஃபாவைப்புதிப்பிக்கும்வேலைநடந்து கொண்டிருக்கிறது. சிற்பிகள் அதை அழகுபடுத்தச் சுறுசுறுப்போடு வேலைசெய்து கொண்டிருக்கிறார்கள். அதே சமயம் இந்த அண்ட சராசரங்களை யெல்லாம் அதியற்புதமாக நிர்மாணம்செய்யும் ஆதிசிற்பியாகிய ஆண்டவன் ஞானமே உருவாகத்திரண்ட பாத்திமா நாயகத்தின் அரிய குணங்களாகிய சித்திர வேலைகளை நிர்மாணித்தான். பாத்திமா நாயகத்தின் பிறப்பு விசேடத்தைப்பற்றி யதாரிஜில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:—

நபுவத்திற்குப்பிறகு ஹஸரத் அவர்களது நாற்பத்தோராவது வயதில் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஜனித்தார்கள். அதுசம்பந்தமாய் ஹஸரத் அவர்கள் ''நான் மிராஜீக்குச் சென்ற இரவில் அங்கு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் எனக்கு ஒரு இலந்தைப்பழம் அளித்தார்கள். நான் அதைப் புசித்து விட்டுத் திரும்பிவந்த அதே இரவில் என்புத்திரியாகிய பாத்திமா தன்தாயாருடைய கர்ப்பத்தில் உற்பத்தியானாள். எனக்கு சொர்க்கத்தின் நாட்டம் உண்டாகும் போது நான் என் புத்திரியாகிய பாத்திமாவின் தேகத்தை முகருவேன்'' என்று கூறியிருப்பதாக ஸாத்பின் அபீவக்காஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

பாத்திமா நாயகம் அவர்களுக்குப் பலசிறப்புப் பெயர்களுண்டு. அவை, அல்பதூல், ஸையிதுன்னிஸா, அப்ஸலுன்னிஸா, கைருன்னிஸா, ஸித்தீகா, ஸஹ்ரா முதலியவைகளாம். ஆயினும் இந்நாயகியார் சுக்கிரன் ஒளிபோல் பிரகாசம்பொருந்திய அழகிற் சிறந்தவர்களாக இருந்தது பற்றி, சுக்கிரன்என்ற நட்சத்திரத்தின் பெயராகிய ஸஹ்ரா என்ற நாமத்தாலேயே ஹஸரத் அவர்கள் பெரும்பாலும் அழைத்து வந்தார்கள்.

பாத்திமாநாயகமேகதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்குப் பிறந்த கடைசிக் குழந்தை. தாயார் காலமானபோது பாத்திமாநாயகம் அவர்களுக்கு ஐந்து வயது. அந்தோ இந்தவயதில் தாயாரையிழந்துவிடுவதால் உண்டாகும் துயரம் இத்தகையதென்று கூறமுடியுமா? குழந்தைகளுக்குத்தந்தையின் ஆதரணையைவிடத் தாயின்ஆதரணையே மிகச்சிறந்தது. தாயே குழந்தைக்கு ஆகாரமூட்டிச்சீராட்டிக்கண்ணுங் கருத்துமாய்ப்பராமறிக்கிறவள்; அத்தகைய சிறுவயதில்தாயின் ஆதா

வையிழந்து விடுவது மிக்கபரிதாபகரமானது. அத்துயரமும் ஏக்கமும் அவ்வாறு தாயையிழந்தவர்களுக்கே தெரியுமன்றி ஏனையோர்க்குப் புலப்படாது. அத்தகைய துக்க சம்பவம் நமது பாத்திமா நாயகம் அவர்களுக்கு அவ்வயதில் நேர்ந்தது.

ஆண்டவன் ஒருபோதும் தவறுசெய்வதில்லை. ஏனெனில் அவன் பரிசுத்தன், சர்வஞ்ஞன். மேலும் அவன் கருணையே யுருவானவனாதலின் எப்போதும் ஆன்மாக்களின் நன்மையைக் கோரியே எதையும் செய்பவன். நோயாளியின் தேகத்திலுள்ள பிளவையை இரணவைத்தியன் சத்திரமிடும்போது, நோயாளிக்கு அது, அச்சமயம் துன்பமாகத்தோன்றியபோதிலும் அது அவனுடைய நன்மைக்காகவே செய்யப்படுகிறதென்பதைஅவன்அறிவான். அதுபோலவே, ஆண்டவனது செயல் ஒருசமயம் அப்போது நமக்கு வருத்தமளிப்பதாயிருப்பினும், ஆண்டவன் நமது நன்மைக்காகவே செய்கிறானென்று அறிவாளிகளுணர்வார்கள்.

அவ்வாறே பாத்திமா நாயகம் அவர்களுக்கும் ஆண்டவன் இத்துன்ப அனுபவத்தை யுண்டாக்கியது பெரும்பலனையே விளைவித்தது. அவர்களுடைய உள்ளத்தில் பல அரிய உயர் குணங்கள் நிலைத்தோங்குவதற்கு இது காரணமாயிற்று. எப்போது இன்பநிலையையே யனுபவித்துக் கொண்டிருப்பவன் பிறருடைய துன்பம் எத்தன்மையதென்பதையுணரவே மாட்டான். பிறவிச்செல்வமுடைய ஒருவனுக்கு ஏழையின்கஷ்டம்தெரியாதன்றோ? இரண்டுகண்களுமுடையவனுக்குக்குருடனுடையகஷ்டம் என்ன தெரியும்? பாத்திமா நாயகத்திற்கு ஆண்டவன் அளித்த அத்துயரத்தால் அவர்கள் பிற்காலம் தங்கள் ஆயுள் முழுமையும் பிறர் துன்பத்தைத்தமது துன்பம் போல் எண்ணி உதவிசெய்யும் குணமுடையவர்களாகவும் இரக்க முடைவர்களாகவும், ஏழைகளிடம் அன்பும் கருணையுமுடையவர்களாகவும் இருந்தார்கள்; ஏழை, தனவந்தர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வித்தியாசமின்றி யாவரிடமும் அன்புகாட்டும் உயர்ந்தகுணமுடையவர்களாக விருந்தார்கள். பாத்திமா நாயகி அவர்கள் ஹஸரத் அவர்களுடைய இருதயத்தின் ஓர் அம்சமாகவிருந்தார்கள். அவருடைய அருளாகிய நிழல் பாத்திமா நாயகியின் மேல் பூரணமாயிருந்தது. இஸ்லாமானவர்களுடைய துயரத்திற்கு அவர்கள் ஒருதேறுதலாயிருந்தார்கள். ஆயினும் மாதாவையிழந்த

துயரத்தையவர்கள் அனுபவிக்க வேண்டியதாகவிருந்தது. அத்துயரம் அவர்கள் முகத்தில் இருந்து கொண்டேயிருந்தது.

பாத்திமாநாயகத்தின் முகத்தில் மிக்க அன்பார்ந்தபார்வையோடும் ஆவலோடும்ஒருவித ஏக்கத்தோடும் யாரையோ தேடுவதுபோன்றநாட்டம்இருந்துகொண்டேயிருந்தது. அதனாலுண்டாகும்துயரம் அதிகமாகும்போது அவர்கள் மௌனமாய் விடுவார்கள். அந்தோ! தன் தாயார் போயிருக்கும் இடம் ஒருவர்கண்களுக்கும் புலப்படாத இடமென்று அவர்கள் அறியார்கள். தமது தாயாரைப்பற்றிச் சகிக்கொணாத மனோவேதனையுண்டாகும்போது தமது தந்தையிடம் சென்று "தந்தையே என் தாயார் எங்கே? எப்போது வருவார்கள்?" என்று கேட்பார்கள். தன்தாயார் சென்றிருக்கும் இடம் மறுபடிதிரும்பிவாராத இடம் என்று அவ்வயதில் அவர்களுக்கு எப்படித்தெரியும்?

ஆனால் ஹஸரத் அவர்களோ "அம்மா உன் தாயார் மறுபடி திரும்பி வரமாட்டார்கள். யார்சென்றாலும் திரும்பிவாராத இடத்திற்கு உன்தாயார் சென்றிருக்கிறார்கள்" என்று கூறினார்கள். ஹஸரத் அவர்கள் வாக்கினின்றும் எந்தச்சமயத்திலும் பொய்வருவதில்லை யென்பதற்கு இது ஓர் அத்தாட்சியாகும். தமது குழந்தையின் துயரத்தைச் சாந்திசெய்வதற்குக்கூட அவர்குற்றமற்ற ஓர் அற்பப்பொய் கூட கூறக் கருதவில்லை.

இத்தகைய சத்தியமும் சாந்தமும் நன்னெறியும் தெய்வ நம்பிக்கையும் உள்ளவருடைய மக்கள் எத்தகைய நற்குணங்களும் நன்னடக்கைகளும் உடையவர்களாய் வளர்வார்களென்பதையும் பிற்காலத்தில் எத்தகைய மகிமையுடையவர்களாகப் பிரகாசிப்பார்களென்பதையும் நாம் கூறவேண்டியதில்லை. ஆனால் இக்காலத்திலோ தம்மக்களுக்குப் பொய், சூது, கபடம் முதலியவைகளைப் போதிப்பதையே பெற்றோர்கள் ஒரு சட்டமாய் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஹஸரத் அவர்கள் தமது புத்திரிக்குத்தக்க உபசாரம் செய்யவும் கிட்டவிருந்து பராமரிக்கவும் ஸௌதா றலியல்லாஹு அன்ஹாவை நிக்காஹ்செய்து கொண்டார்கள். பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் மற்றக்குழந்தைகளைப் போல் அண்டை அயலிலுள்ள குழந்தைகளோடு விளையாடுவதில்லை. அப்படி விளையாடினால் தன்மூத்த

சகோதரிகள் கூடத்தான் விளையாடுவார்கள். மூத்த சகோதரிகள் மட்டும் அக்கம் பக்கத்தில் தங்களுக்கு மிக்க சிநேகமாக விருக்கும் பெண்களுடைய வீடுகளுக்குச் சென்று வருவார்கள். ஆனால் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களோ வீட்டை விட்டு வெளியே செல்வதேயில்லை. அண்டையிலுள்ள பெண்கள் யாரேனும் தம்மிடம் வந்தால் கொஞ்சமாய் அவர்களிடம் சம்பாஷிப்பார்கள். ஆனால் எப்போதும் ஏகாந்தமாய் இருப்பதிலும் பேசாமல் மௌனமாக இருப்பதிலுமே அவர்களுக்கு மிக்க விருப்பம். இவ்வாறு தனியே மௌனமாக இருப்பதே அவர்களுக்கு அபூர்வமான ஒரு சக்தியை யுண்டாக்கி விட்டது.

ஹஸரத் அவர்களுக்கு இஸ்லாம் மார்க்கத்தைப் பரவச்செய்வதையன்றி வேறெந்த விஷயத்திற்கும் அவகாசமேயில்லை. அவருடைய அன்புமுழுமையும் அந்த ஒன்றிலேயே யிருந்தது. அவருடைய வாழ்நாளின் தொழில் இஸ்லாம் மார்க்கத்தின் விருத்தியிலேயே ஆரம்பமாயிற்று; விழிப்பிலும், நித்திரையிலும், உட்கார்ந்தாலும், நின்றாலும் எப்போதும் இஸ்லாம் மார்க்கத்தின் அபிவிருத்தியையே அவர்கள் மனம் நாடியிருந்தது. அதன் அன்பில் முழுகி வேறெல்லாவற்றையும் அவர்கள் மறந்திருந்தார்கள்.

இவ்வாறிருந்தும் தமது மார்க்கத்திற்கு விரோதிகளாக இருக்கப்பட்டவர்களின் செய்கைகளையும் ஒருபக்கம் கவனிக்கவேண்டியதாயிருந்தது. இவ்வாறிருக்க அவர்கள் தமதுஅருமைப்புத்திரியின் விஷயத்தில்அதிகமாகக்கவனத்தை யெப்படிச்செலுத்துவார்கள். அம்மகளைத் தமது இருதயத்தின் ஒரு பாகமாகவும் கண்ணுக்குக் கண்ணாகவும் விசுவாசித்திருந்தாலும், தமக்கு எப்போதேனும் அவகாசம் இருக்கும்போது தன் குழந்தைக்குச் சந்தோஷ வார்த்தைகளால் தேறுதல் கூறுவார்கள். அவர்கள் மார்க்க வேலையாக வெளியிற் செல்லும்போது பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் தம்மையும் கூட அழைத்துச் செல்லும்படி தொந்தரவு செய்வதுண்டு. அந்தோ வெளியில் கொண்டு போகத்தக்க தாகவுமில்லை! வீட்டிலோ தாய் இல்லை! தக்க ஆதரவுமில்லை! செல்வமுமில்லை! விளக்கிருந்தால் எண்ணெயில்லை! தோண்டியிருந்தால் தாம்பில்லை! இன்றைக்கு உணவிருந்தால் நாளைக்கு உபவாசம்! இவ்வாறு வறுமையோ பூரணமாக விருக்கிறது. இந்தநிலை

மையில் தாயாருமில்லையெனில் அவர்கள் நிலைமையெப்படியிருந்திருக்கும். எத்தகைய கஷ்டம் நேரினும் ஹஸரத் அவர்கள் அவற்றைப் பொறுமையோடு சகித்துக் கொள்ளும் தன்மையுடையவர்களாய்ப் பொறுமைக்கோர் உறைவிடமாக இருந்தார்கள். அதைப்போலவே பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களும் எந்தக்கஷ்டத்தையும் சகித்துக்கொள்ளும் பொறுமை யுடையவர்களாய்ப் பழகி விட்டார்கள்.

இவர்கள் இருவரும் செல்வமில்லாமல், அழகுபடுத்தும் விலையுள்ள ஆபரணங்கள் இல்லாமலிருந்தாலும், பொறுமையும் ஆண்டவனிடத்தில் எல்லாப் பொறுப்பையும் வைத்திருக்கும் பூரணமான திடநம்பிக்கையும் அவர்களுக்குப் பெரிய பொக்கிஷமாக இருந்தன. இவர்கள் மனம் சஞ்சலமாவது வியாகூலமாவது இன்றி எப்போதும் நிம்மதியும் சந்தோஷமும் உடையதாகவே யிருந்தது. அபஜெயமாவது துயரமாவது இவர்களிடம் எட்டிப்பார்ப்பதேயில்லை. பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களிடம் இளமைப்பருவத்திலிருந்தே உண்மை, இரக்கம், கற்பாசிகளுக்குரிய குணங்கள் யாவும் கூடவே வளர்ந்தோங்கிவந்தன. இதனால் ஹஸரத் அவர்களுடைய போதனைகளை மிக்க பக்தியோடேற்று அவற்றில் உறுதியுடையவர்களானார்கள், தந்தையின் மொழிக்கு ஒருபோதும் மறுத்துக் கூறுவதேயில்லை.

பாத்திமா பின்தே அஸத் றலியல்லாஹு அன்ஹு, பாத்திமா பின்தே ஸுபைர் றலியல்லாஹு அன்ஹு, அஸ்மாவ- ஆயிஷா பின்தே அபிபகர், ரலியல்லாஹு அன்ஹு, ஹப்ஸா பின்தே உமர் றலியல்லாஹு அன்ஹு, ஆகிய இவர்கள் வாசஸ்தலங்கள் சமீபத்திலேயே யிருந்தமையால் பாத்திமா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவர்கள் வீடுகளுக்கு ஒவ்வொரு சமயம் சென்று அவர்களுடைய அன்பார்ந்த இனிய மொழிகளால் ஆறுதலடைவார்கள். இவர்களைத் தவிர வேறு ஆதரவுகிடையாது. வறுமையும் துயரமும் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களை உலக விஷய ஆசையும் நான் என்ற அகங்காரமும் இல்லாத பரிசுத்தமானவர்களாக ஆக்கிவிட்டன. அதோடு மௌனமாகவே இருப்பதால் அவர்கள் ஆண்டவன் சிந்தனையிலேயே மனத் திருப்தியுடையவர்களாயிருந்தார்கள்.

ஹஸரத் அவர்களுக்குத் தமது புத்திரியின் குணங்கள் நன்றாய் விளங்கி விட்டபடியால் உலகபோகத்தை வெறுத்தவர்கள் என்று பொருள்படும் பதூல் என்ற நாமத்தை அவர்களுக்குச் சூட்டினார்கள்.

# 3-வது அத்தியாயம்

## பாலிய அறிவு

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் பாலியப்பருவத்தைக்கடந்து சற்று அறிவுவிளங்கும் பருவமடைந்தபோது மகிமை பொருந்திய பரிசுத்தராகிய தமது தந்தைக்குப் பொய்யாகிய இவ்வுலகம் விரோதியாக இருக்கிறதென்பதை உணர்ந்தார்கள்.

இஸ்லாத்திற்கு விரோதிகளாயிருந்தவர்கள் ஹஸரத் அவர்களின் கௌரவத்திற்கு இடையூறுகள் உண்டாக்க எண்ணங்கொண்டிருந்தார்கள். ஒரு நாள் ஹஸரத் அவர்கள் கஃபாவில் தொழுதுகொண்டிருந்தார்கள். விரோதிகளின் தலைவர்களான உதுபா, ஷைபா என்ற இருவர்கள் சமயம்பார்த்துக்கொண்டிருந்து, அப்போதுதான் கொல்லப்பட்ட ஓர் ஒட்டகத்தின் தீனிப்பையை அப்படியே கொண்டுவந்து சுஜூதில் இருக்கும் ஹஸரத் அவர்களுடைய பிடறியின்மேல்வைத்துவிட்டார்கள், அதனால் அவர்களுக்குத் தமது சிரசைத்தூக்க முடியவில்லை.

அதைக்கண்ட பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் மனம் பதைத்து ஓடிப்போய் அந்த இரைப்பையைஅப்புறம் இழுத்துவிட்டார்கள். சற்றுதூரத்தில் நின்றும் அதைப்பார்த்துக்கொண்டிருந்த கூட்டமான அந்த விரோதிகள் கேலியாக நகைத்தார்கள். பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களை நோக்கி "ஆண்டவன் உங்களை நரகத்தில் வீழ்த்துவார்" என்று சபித்தார்கள். அக்கூட்டத்தார் அவ்வாறே உகத்யுத்தத்தில் மடிந்து நரகம் புகுந்தார்கள்.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா பிறகு இந்த பாலியவயதிலேயே இஸ்லாம் மார்க்கத்திற்கும் காபிர்களின் கொள்கைகளுக்கும் உள்ள உயர்வு தாழ்வான உண்மையையறிந்துகொள்ளும் அறிவுடையவர்களாக விருந்தார்கள். அதுவுமன்றி உலகம் உண்மைக்கு விரோதமாயிருக்கிறதென்பதையும், உண்மையை ஏற்றுக்கொள்ளச்செய்வதிலும் சத்தியத்தைப்பரவச் செய்வதிலும் எத்தகைய கஷ்டமும் ஆபத்துமிருக்கிறதென்பதையும், மகிமை பொருந்திய தமது தந்தை எவ்வளவு கஷ்டமான தொழிலையேற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்துகொண்டார்கள்.

மனிதன் சத்தியத்தையும் நேர்வழியையும் பரவச்செய்வதையே தன் முக்கியமான நோக்கமாகக்கொள்ளவேண்டும். ஏனெனில் அதை

விட மேன்மையான பயனளிக்கக்கூடிய தொழில் வேறொன்றுமில்லை. தமது பிதா ஆண்டவனுடைய நாட்டத்திலேயே பூரணமாக முழுகிய வராய், புத்திரியைப்பற்றிக்கூடக் கவலை யெடுத்துக்கொள்ளாமல் சதா ஆண்டவனது உண்மையைப்பரவச்செய்வதிலேயே கண்ணும்கருத்தும் செலுத்துவதைப் பிரத்தியட்சமாகக் கண்ட பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள், எடுத்துக்கொண்ட எந்தக் காரியத்திலும் ஊக்க மும், சிரத்தையும், பூரணமாக வைக்காவிடின் எந்தக் காரியமும் நிறை வேறுது என்பதையுணர்ந்துகொண்டார்கள்.

அப்போதிருந்த காலத்தை விவரித்துக்கூறவேண்டுமாயின் எழுதும் காமும், கூறும் வாயும், நடுக்கங்கொள்ளும். சத்தி யமும், பொய்யும் வேறு பிறித்தரியக்கூடாத நிலைமையிலிருந் தன. உண்மையைப் பரவச் செய்ய ஹஸரத் அவர்களு க்கு நேர்ந்த இடையூறுகளுக்கு அளவேயில்லை. அவரு டைய சுற்றத்தார்கள் அவருக்கு விரோதிகளாய் விட்டார்கள். அவரு டைய பரிசுத்த மார்க்கத்தின் அபிவிர்த்திக்கு விரோதியாகியவர்கள் அவருக்குப்பலவித இடையூறுகளைச்செய்யமுயன்றுர்கள். அவருடைய இரத்தத்தை அருந்த ஆவலுள்ளவர்களாயிருந்தவர் அனேகர். எத்திக் கில் அவர் நோக்கினும் அவருக்குத் தேறுதலாவது உதவியாவது கிடையா; எங்கும் பரிதாபமான தோற்றமாகவே பிருந்தது. அத்த கைய காலத்தில் அவர் உள்ளத்தில் மிக்க அபூர்வமான ஒரு பொக் கிஷம் இருந்தது. அதாவது-சத்தியமும் ஆண்டவனிடம் கொண்ட பூரண நம்பிக்கையும் அவனது உண்மையடியார்களுக்குச் சகல வல் லமையுமா மென்பதேயாம்.

அத்தகைய உண்மையான நம்பிக்கையில் ஹஸரத் அவர்கள் பின் கண்டபடி உண்மையான உறுதியுடையவர்களானுர்கள்:— "எல்லா வற்றிலும் பெரிதும் மகிமைபொருந்தியிருப்பதுமான வஸ்து ஒன்றே யிருக்கிறது. அத்தகைய பரம்பொருளின் சித்தமே என்கடமைத் தொழிலானது; அவன் எச்செய்கையில் சந்தோஷ மடைவானே அதையே நான் செய்து கொண்டிருக்கிறேன். அவன் எதை விரும்ப வில்லையோ அதைநான் ஒருபோதும் செய்யேன்; அவனுடைய விதி நிஷேதங்களே நான் செய்யவேண்டிய கடமைகள்; என் உடல் பொருள் ஆவி மூன்றையும் அவனுக்கே ஒப்படைத்து விட்டா லன்றி என் உருவம் அவன்மேல் வைத்த அன்புருவமா

காது- என் உடல் அவனுடையதே; அதனுல் அதன் சுதந்தரம் எனக்கில்லை; அதிலிருந்து இரத்த வெள்ளங்களோடினும் எனக்கக்கரையில்லை. இவ்வாறே கேட்போர்களுக்கும் என் பொருள்கள் சொந்தமே. எனக்கென்று ஒன்றுமேயில்லை. நான் என்ற அகங்காரத்தையே நான் அழித்துவிடுவேன். அப்போதுதான் அவனது பூரண அருளாகிய ஆனந்தவெள்ளம் எனக்குள் நிரம்பும். அவனுடைய கடைக்கண் அருட்பார்வை என்மேல் விழுமாயின் என்னைக்கொலை செய்யவரும்கரங்களையும் நான் முத்தமிட்டுக்கொள்வேன். அத்தகைய அருள் மயமாகிய அப்பரிசுத்தவானுக்கு 'எப்போதும் நம்முடைய தோத்திரங்களும் வாழ்த்தும் சென்று கொண்டேயிருக்கும்.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களின் தந்தையோ இவ்வாறு ஆண்டவனுடைய சிந்தனையில் மூழ்கியிருந்தார்கள். தாயாரோ இல்லை, அப்படியிருக்க பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களின் சீர்திருத்தம் ஒழுக்கம் முதலியவைகளைப்பற்றிச் கவனிக்க ஆண்டவனையன்றி வேறொருவருமில்லை. அதனுல் அந்நாயகியாருக்கு அமைப்பிலேயே அவசியமான சகல குணங்களும் உண்டாயிருந்ததோடு ஆண்டவனருளாலும் அவனுடைய பரிசுத்தவேதத்தின் பிரகாசத்தாலும் அவர்களின் உள்ளத்தில் உலகத்தைப்பற்றிய அசுத்தமான பற்றுக்கள் ஒன்றுமின்றிப் பரிசுத்தமான ஆண்டவன் பக்தியும் நல்ல அறிவு விளக்கமும் வளர்ந்து கொண்டேயிருந்தன. ஹஸரத் அவர்களோ ஓதாமலே சகலமும் உணர்ந்தவர்களாக (உம்மியாக) விருந்தார்கள். கல்வியில் தேர்ச்சியடைந்து பல நூல்களை வாசித்தவர்கள் கண் தெரியாதவர்கள் போலிருக்க ஹஸரத் அவர்கள் ஒன்றும் கற்காமலே அகக்கண், புறக்கண் இரண்டிலும் பூரணப்பிரகாசமுடையவர்களாக விருந்தார்கள். அவர்களுடைய உள்ளத்தில் சகல கலைஞானங்களும் பதிந்திருந்தன. அவருடைய ஆத்ம சக்தியின் பிரகாசம் அவர்கள் புத்திரியாகிய பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவின் உள்ளத்தில் தாக்கியதால் அவ்வம்மையார் சகல ஞானங்களையும் உடையவர்களானார்கள். அவர்களுக்குத்தம்தந்தையின் காலடிகளே பாடசாலையாகவும் அவர்கள் சகவாசமே சகல ஞானங்களையும் போதிக்கும் சர்வகலாசாலையாகவுமிருந்தன. ஹஸரத் அவர்களுடைய உதிரம் அந்நாயகியின் தேகத்தில் ஓடுவதாலும் ஆண்டவனருளால் அமைக்கப்பட்ட இயற்கை

யாலும் அந்நாயகி கவனசக்தியும் நல்ல அறிவின் பிரகாசமுமுடைய வர்களாகவிருந்தார்கள். அத்தகைய குணங்களைப்பெற நமது மாதர்கள் தங்கள் வாழ்நாள் முழுமையும் விருதாவாய்ப் பாடுபட்டாலும் அது கைகூடுவது அரிதாகவேயிருக்கிறது. அப்படி நமது மாதர்கள் புத்தகங்களிலுள்ள பூச்சிகள்போல் அவற்றிலுள்ளவற்றைக் கற்றாலும் கடைசியில் அவர்கள் பரீட்சித்துப்பார்க்கப்படும்போது ஒரு பயனுமடைந்தவர்களாகக் காணப்படுவதில்லை. பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களோ, எந்தப்பாடசாலையிலும் வாசிக்கவில்லை. அவர்கள் தந்தைக்கும் எழுதப்படிக்கத்தெரியாது. அப்படியிருந்தாலும் அவர்கள் ஞானம் பூரணப்பிரகாசமுடைய சூரியனைப்போல் பிரகாசித்தது.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய தாயாராகிய ஹஸரத் கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஜிவித்திருந்தபோது ஒரு சுற்றத்தார் வீட்டில் கலியாணம் நடைபெற்றது. அப்போது கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் தமது மற்ற பெண்களுக்கெல்லாம் விலையுயர்ந்த ஆடையாபரணங்களையளித்து அக்கலியாணத்திற் கனுப்பினார்கள். ஆனால் அவ்வாறே பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கும் அளிக்க முயன்றபோது அவர்கள் தமக்கு அத்தகைய ஆடையாபரணங்கள் வேண்டாமென்று கலியாணத்தைக் காணச்செல்லவும் தமக்கு விருப்பமில்லையென்றும் கூறிவிட்டார்கள். ஹஸரத் அவர்களுடைய பரிசுத்தமான உள்ளத்தின் பிரகாசம் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களின் உள்ளத்தில் அப்படியே பிரதிபலித்திருந்தது. அப்போது அவர்களுக்கு ஐந்து வயது.

அந்த அம்மையாருக்கு நாலரை வயதிருக்கும்போது அவர்கள் தங்கள் தாயாரைநோக்கி "ஆண்டவனுடைய அற்புதமாகிய வல்லமைகள் அப்போதைக்கப்போது புலப்படுகின்றன; ஆயினும் அத்தகைய மகிமை பொருந்திய அந்த ஆண்டவன் நமக்குப் புலப்படமாட்டானா?" என்று வினவினார்கள். அதற்கு மூமின்களின் மாதாவாகிய கதீஜா நாயகியார் "நாம்பரிசுத்த உள்ளமுடையவர்களாகவும், ஆண்டவனிடம் நம்பிக்கை வைத்து அவர்கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்களாகவும் எல்லோரிடமும் விசுவாசமும் கருணையும் பரோபகாரமும் உடையவர்களாகவும் நடந்துகொண்டால் ஆண்டவன் சந்தோஷம

டைவான். அப்போது நாம் அவனைத் தரிசிக்கப் பாத்திரமுடையவர்களாவோம்'' என்று கூறினார்கள்.

ஹஸரத் கதீஜா றலியல்லாஹுஅன்ஹா, அவர்களுக்குப் பின் ஹஸரத் அவர்கள் ஹஸரத் ஸௌதா றலியல்லாஹுஅன்ஹா அவர்களை மணம்புரிந்து கொண்டது முதல் தம்புத்திரிகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஹஸரத் அவர்கள் அந்த அம்மையாரிடமே விட்டு விட்டார்கள். ஹஸரத் கதீஜா றலியல்லாஹுஅன்ஹா அவர்கள் ஜீவித்திருந்தாலும் தம்மக்களுக்கு அதற்கு மேல் செய்யத்தக்கது ஒன்றுமிராது.

## 4-வது அத்தியாயம்

## பரஸ்பர அன்பு

பாத்திமா றலியல்லாஹுஅன்ஹா அவர்கள் தம் தந்தையிடம் பூரண அன்பு வைத்திருந்தார்கள். அவ்வம்மையார் தமது தந்தை சாதாரணமான மனிதர் அல்லவென்றும், தாம்பெற்ற எல்லா நன்மைகளுக்கும் அவர் இருப்பிடமாகிய பொக்கிஷமாக விருந்தாரென்றும் அறிந்து கொண்டார்கள். ஹஸரத்தவர்களும் பாத்திமா நாயகம் தமது இருதயத்தின் ஒருபாகம் என்று கூறிக்கொண்டிருந்தார்கள். தம் தந்தை ஆண்டவனாலனுப்பப்பட்ட றசூலென்றும், ஆண்டவன் தன் பூரணமான அருளையும் வல்லமையையும் அவருக்கு அளித்திருக்கிறானென்றும் உணர்ந்திருந்தார்கள். இதனால் றசூல் அவர்களுக்கிருந்த அன்பினும் பாத்திமா நாயகம் அவர்களுக்கு அதிக அன்பு அவர்கள் மேலிருந்ததென்று கூறலாம். அந்த அம்மையாருடைய எல்லா நடவடிக்கைகளும் உண்பது உடுப்பது நடையுடையபாவனையாவும் தந்தையின் நடவடிக்கை முதலியவற்றை யொத்தவைகளாகவேயிருந்தன.

ஆயிஷா றலியல்லாஹுஅன்ஹாவும், உம்முஸல்மா றலியல்லாஹுஅன்ஹாவும் இருவரும் பாத்திமாநாயகம் அவர்களிடம் ஹஸரத் அவர்களுடைய நடையுடை ஜாடை முதலிய எல்லாவற்றையும் கண்டதாகக்கூறுகிறார்கள்.

ஹஸரத் அவர்கள் வெளியூர்களுக்கு மதத்தைப்பாவச்செய்வதற்கேனும் யுத்தத்திற்கேனும் சென்றிருந்து திரும்பிவந்தால் முன்னே மஜீதுச்குச்சென்று தொழுகையை நிறைவேற்றிவிட்டு நேரே தன்புத்திரியாகிய பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களிடம்தான் செல்வார்கள்; பிறகு தமது மனைவியரைக் காணச் செல்வார்கள். வீட்டிலிருந்து வெளியேசெல்லும் போது முன்னேமற்ற பேர்களுக்கெல்லாம் கூறிவிட்டுக் கடைசியில் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவிடம் கூறி அங்கிருந்துதான் புறப்படுவார்கள். பாத்திமா றலியல்லாஹு அன்ஹா ஹஸரத்தின் வளவிற்குச்சென்றால் ஹஸரத் அவர்கள் எழுந்து எதிர்கொண்டுசென்று உச்சி மோந்து அன்போடு அழைத்து வருவார்கள். ஹஸரத்தவர்கள் தங்கள் மகளார் வீட்டிற்கு வந்தால் தங்கள் மகளாரும் அவ்வாறே தமது தந்தையை மிக்க அன்போடு வரவேற்று உபசரிப்பார்கள்.

இச்சரித்திரம் மக்களுக்கும் பெற்றோர்க்கும் நற்புத்தி யளிக்கத்தக்கது. எவ்வாறெனின் பெற்றோரிடம் அன்பின்றிப் பக்தியின்றி நடந்து கொள்ளும் மக்களுக்கும், தம்மக்களிடம் பாரபட்சமின்றி யன்பின்றி நடக்கும் பெற்றோர்க்கும் நற்புத்தி யளிக்கத்தக்கது. ஹஸரத் அவர்கள் தம்மக்களென்றும் அன்னியர் மக்களென்றும் பாரபட்சமின்றி எதிலும் நியாயமாகநடந்துகொள்பவர்கள். ஒருசமயம் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கும் அவர்கள் கணவருக்கும் ஏதோ சச்சரவு நேர்ந்தது. அச்சமயம் அங்குசென்ற ஹஸரத் அவர்கள் தமது புத்திரிக்கே புத்திகூறினார்களன்றித் தமது மருமகன்மேல் சற்றும் குற்றம் கூறினாரில்லை.

மற்றொரு சமயத்தில் மக்ஜூம் என்ற கூட்டத்திலிருந்த ஒரு பெண் களவுசெய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டாள். அப்போது குறைஷியர் ஹஸரத் அவர்களுக்கு மிக்க வேண்டியவரான அஸாமாபின் ஸைத் றலியல்லாஹு அன்ஹு அவர்களை ஹஸரத் அவர்களிடம் அனுப்பி அப்பெண்ணைமன்னிக்கும்படி சிபாரிசுசெய்யச்சொன்னார்கள். அவர் அவ்வாறே ஹஸரத் அவர்களிடம் வந்து கூறிய போது ஹஸரத் அவர்கள் ஜனங்களைக் கூட்டிப் பின்வருமாறு கூறினார்கள். அதாவது:—

"ஓ ஜனங்களே! உங்களுடைய முன்னோர்கள் இத்தகைய நீதி குறைவான காரியங்களினாலேயே க்ஷீணதசையடைந்தார்கள். அவர்

களில் செல்வாக்குடையவர்களில் ஒருவர் களவாடினுல் அப்படிப்பட்ட வர்களைத் தண்டிக்காமல் விட்டுவிடுவதும், சாதாரணமனிதர் அல்லது ஏழைகளில ஒருவர் களவாடினுல் குரூரமாகத் தண்டிப்பதுமாக விருந் தார்கள். இப்போது இத்தகைய களவு குற்றத்தை என் புத்திரியே செய்திருந்தாலும் நான் அவளுடையகரத்தைத் துண்டித்துவிடுவேன்'' என்று கூறினுர்கள்.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய நடக்கை மற்ற எல்லாமக்களுக்கும் நற்புத்திபுகட்டக்கூடியதாகவிருந்தது. ஹஸரத் அவர்கள் பின்வருமாறு கூறியிருக்கிறுர்கள்:—

''யார் தம்மக்களை யன்போடுநடத்தி அவர்களுக்குநன்னடக்கைகளை யும் நல்வழிகளையும் கற்பிக்கவில்லையோ அப்படிப்பட்டவர்களைப் புண்ணிய சாலிகளாகிய பெற்றேர்கள் என்று கருதாதீர்கள். அவ்வாறே தம்தாய் தந்தையர்களிடம் அன்போடும் பக்தியோடும் அவர்களுக்குச் சந்தோஷம் உண்டாகும் வண்ணம் நடந்துகொள்ளாத மக்களும் புண்ணியசாலிகளாக மாட்டார்கள்''.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் தம் தந்தை மேல் பூரண அன்பும் பக்தியும் உடையவர்களாக விருந்தார்களென்றும், ஹஸரத் அவர்களும் தம்புத்திரி மேல் அவ்வாறே யன்புடையவர் களாகவிருந்தார்கள் என்றும் முன்னமே கூறினேம். ஹஸரத்தைப் போலவேஅவருடையபத்தினிமாரும்பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் மேல் பூரண அன்புடையவர் களாகவேயிருந்தார்கள். அவர்கள் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் மேல் வைத்திருந்த அன்பால் காண்போர் அவர்கள் ஒவ்வொருவரும் பாத்திமா நாயகத்தின் சொந்தத்தாயாரேயென்று கருதத் தக்கதாக விருந்தது.

ஹஸரத் அவர்களின் மனைவியரில் ஒருவராகிய ஹஸரத் பீபீ ஸபீயா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் கைபரிலிருந்து மதீனுவுக்கு வந்தபோது பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்குத்தம் செவிகளில் அணிந்திருந்த நவரத்னங்கள் இழைக்கப்பெற்ற விலையுயர்ந்த ஜிமிக்கைகளைப் பரிசாக அளித்ததோடு, அவர்கள் கூடவிருந்த பெண்பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆபரணம் பரிசாக அளித்தார்கள்.

ஆயிஷா றலியல்லாஹு அன்ஹாவுக்கும் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவுக்கும் கொஞ்சம் மனவருத்தம் இருந்ததாகச் சிலர் கூறுகிறார்கள். இது அறியாமையாற் கூறும் தவறேயன்றி சற்றும் உண்மையான விஷயமல்ல. ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா, அவர்கள் "ஹஸரத் அவர்களுக்குப்பின் என்கண்களுக்கு பாத்திமாவினும் அருமையானது வேறொன்றும் புலப்படவில்லை" என்று கூறிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு மனவருத்தம் இருந்திருக்குமாயின் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவை யவ்வாறு ஒருபோதும் புகழ்ந்திருக்கமாட்டார்கள். ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு இயற்கையில் ஹஸரத் அவர்களின் மற்றமனைவியர்களாகிய தமது சககளத்திகளின் மேலேயே எள்ளளவும் பொறாமை யென்பது கிடையாது. அப்படி யிருக்க ஹஸரத் அவர்களுக்கு மிக்க அன்பான புத்திரியாகிய பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவின்மேல் எங்கேனும் மனவருத்தமிருக்குமோ? ஒருபோது மிராது.

ஒருகாலத்தில் அமீரே மாபியா என்பவர் இஜிப்ட் தேசத்திலிருந்து மதினாவிற்கு வந்துமிக்க ஆடம்பரமான ஒரு தர்பார் நடத்தி அதில் அலிறலியல்லாஹு அன்ஹுவின் புத்திரராகிய இமாம்ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுவை யழைத்துத் தம்மைக் குருவாக ஏற்றுக் கொள்ளும்படி அவரைக்கேட்டார். அவர் அதற்கு மறுத்துவிட்டார். இச்சங்கதியை யறிந்ததும் அமீரினுடைய சேனைவீரர்கள் ஏககாலத்தில் யுத்தசன்னத்தராக வாளையுருவிக்கொண்டார்கள்.

இச்சங்கதியை ஆயிஷாறலியால்லாஹு அன்ஹாகேட்டு உள்ளம் பதைத்து அடக்கவொண்ணாக் கோபத்தால் தேகம் நடுங்க மஸ்ஜிதே நபவியிற்சென்று அமீரே மாபியாவை வரவழைத்து,"நீர்ஹஸரத்அவர்களின்பேரப்பிள்ளையாகிய இமாம்ஹுஸைனிடம் மரியாதையீனமும் அடாதவையுமாகிய மொழிகளைக் கூறியதாகக் கேள்விப்பட்டு இங்கு வந்தேன். நீர் உடனே அக்காரியத்தைவிட்டுவிட்டு மன்னிப்புக் கேட்டுக்கொள்ளா விடின் நான் உன் அகங்காரத்தையழித்து உனக்கு ஆதாரமாக விருக்கும் பலத்தை யொழித்து உன் மாடமாளிகையாவற்றையும் தரைமட்டமாக்கி விடுவேன். ஏனெனில் இமாம் ஹுஸைனுக்குப் பாட்டனாராவது தாய் தந்தையராவது இல்லாவிடினும் அவர்களுடைய ஸ்தானத்தில் நான் இருக்கிறேன்" என்றுகூறினார்கள்.

அவ்வம்மையாருக்குப்பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் மேல் மனவருத்தம் இருந்திருந்தால் அவர்கள் புத்திரன் விஷயத்தில் இத்தகைய அன்புபாராட்டுவார்களோ?

ஹஸரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய புத்திரியாகிய அப்ஸா றலியல்லாஹு அன்ஹா பாத்திமா நாயகத்தோடு சரியான வயதுடையவர்; இருவரும் சிநேகிகளாக விளையாடிக்கொண்டிருந்தார்கள். இந்தம்மையாரோடும் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா சினேக பாவமாகவே யிருந்தார்கள். ஆனால் அந்தஅம்மையார் ஹஸரத் அவர்களை மணம்புரிந்துகொண்டது முதல் பாத்திமாநாயகி அந்த அம்மையாரிடம் முன்போலிராமல் தாயாரிடம் காட்டவேண்டிய மரியாதையோடும் பக்தியோடுமே நடந்துகொண்டார்கள்.

ஒரு காலத்தில் அபூராபியாவுடைய மனைவியாகிய ஸல்மா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் உம்முஸல்மா றலியல்லாஹு அன்ஹா விடத்திற்கு வந்தார்கள். அச்சமயம் ஹஸரத் அவர்களின் மனைவியரில் ஒருவராகிய மேற்படி உம்முஸல்மா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் அழுதுகொண்டிருந்தார்கள். அதைக் கண்டு அங்குவந்த ஸல்மா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் "தாங்கள் ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு ஹஸரத் அவர்கள் மனைவி, "நான் இப்போது ஹஸரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கனவில் கண்டேன். அவர்கள் முகம் சலிப்புற்றிருந்தது. அவருடைய தாடியிலும், மீசையிலும், இரணகளத்திற புரண்டவர்களுக்கு இருப்பது போல் இரத்தக் கறைகள் பட்டிருந்தன. நான் மிக்க பீதியும் துயரமுமடைந்து 'அந்தோ! தங்களுக்கு இத்தகைய சம்பவம் நேர்ந்த காரணமென்ன?' என்று கேட்டேன். அதற்கவர்கள் 'அந்தோ! நான் இப்போதுதான் என் பேரப்பிள்ளைகளாகிய ஹஸேன் ஹுஸேன் இவர்கள் மடிந்த இரணகளத்திலிருந்துவருகிறேன், என்று கூறினார்கள்" என்றார்கள்.

இதனால் உம்முஸல்மா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய மக்கள் மேல் எவ்வளவு அன்பிருந்ததென்பது நன்கு விளங்குகிறது. பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கும் அவர்கள் மாற்றாந்தாய்மார்களுக்கும் மனஸ்தாபமிருந்திருக்குமாயின் இவ்வண்ணம் அன்புகாட்டி

யிரார்கள். இதனாலும் அது அறிவிலிகள் கூறும்பொய்க் கூற்றேயெ ன்று நன்கு விளங்குகிறது.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவின் மக்கள்மேல் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களின்மாற்றுந்தாய்மார்கள்காட்டியிருந்த அன்பு பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களின் சொந்தத் தாயாரும் அம்மக்களின் சொந்தப்பாட்டியாருமாகிய ஹஸரத் கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் காட்டக்கூடிய அன்பிற்கு எவ்வற்றாலும் குறைந்ததென்று கூற வொண்ணாதென்பதே உண்மையாய் நிகழ்ந்த சம்பவமாகும்.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் இப்பூலோக மாதர்களுக்கெல்லாம் மேலானவர்களாக இருந்தார்கள் என்ற புகழ்ச்சிமட்டும் போதாது. ஹஸரத் அவர்களுடைய உதிரம் அந்நாயகியுடைய தேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது. அவர்கள் ஹஸரத் அவர்களுடைய இருதயத்தின் ஒருபாகமாக விருந்தார்கள். பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் தேவலோக மாதர்களுக் கெல்லாம் அரசியென்று ஹஸரத் கூறியிருந்தார்கள்.

அத்தகைய மகிமை வாய்ந்தவர்களின் கர்ப்பத்தில்உதித்த இமாம் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள்சுத்த வீரத்தன்மையும் சிங்கம் போன்ற தைரியமும் பொறுமையும் உடையவர்கள். அவர்மரணம் இஸ்லாம் மார்க்கத்தவரனைவருக்குப் நெஞ்சு துடிக்கும் பெருந் துயரையளித்தது. அவர் இஸ்லாம் மார்க்கத்திற்கே ஒரு மகிமையாக விருந்தார்கள். இவர்களுடைய பாம்பரையிலிருந்து தான் ஸையத்மார்கள் வமிசம் உலகில் பரவிக்கொண்டிருக்கிறது.

ஸஹீமுஸ்லிமில் பின்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது:— "ஹஸரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஹஸரத் அலிறலியல்லாஹு அன்ஹு, ஹஸரத் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா, இமாம் ஹஸன் றலியல்லாஹு அன்ஹு, இமாம்ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு, ஆகிய நால்வரையும் தம்மருகிலழைத்து "ஆண்டவனே! இவர்கள் என்குடும்பத்தார்கள்"

என்று கூறியதாக ஹஸரத் ஸாத்பின் அபிவக்காஸ் * றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியுள்ளார்கள்.

## ஆயதே தத்ஹீர்

ஹஸரத் அவர்கள் ஒருநாள் ஹஸரத் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் வீட்டில் பூவேலைசெய்த ஒரு பெரிய துப்பட்டியைப் போர்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்ததாகவும், அச்சமயம் இமாம் ஹஸன் றலியல்லாஹு அன்ஹு அங்கு வந்தபோது ஹஸரத் அவர்கள் அவரையழைத்துத் தமது துப்பட்டிப் போர்வைக்குள் சேர்த்துக் கொண்டதாகவும், பிறகு இமாம்ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுவும், பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவும், ஹஸரத் அலி றலியல்லாஹு அன்ஹுவும் ஒருவர் பின் ஒருவராக வர அவர்களையும் அவ்வாறே துப்பட்டிக்குள் சேர்த்துக்கொண்டு இன்னமா யுரீதுல்லாஹு என்னும் ஆயத்தை ஓதினார்கள் என்று ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா சொன்னார்கள்.

அதாவது "ஆண்டவனே! இவர்கள் என் குடும்பத்தாராயிருக்கிறார்கள். நீ இவர்களின் வெளிமாசையும் உள்மாசையும் நீக்கி இவர்களைப் பரிசுத்தமாக்கிவை" என்ற ஆயதே.

மேலும் ஹஸரத் அவர்கள், "ஆண்டவனே! கியாமத் நாளில் உலகிலுள்ள சந்ததிகளனைத்தும்பயனின்றிப் போகும்போது என் சந்ததியாரால் பயன் கிடைக்கட்டும்; ஒவ்வொரு நபியின் பெண் வயிற்றில்

* ஹஸரத்பின் அபிவக்காஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அஷ்ரதேமுபஷ்ஷரா (பத்துஸஹாபிகள்)வில் சேர்ந்தவர்கள். இவர் அந்தப்பத்துப் பேரில்மூன்றாவதானவர். இவர் தமது பதினேழாமாண்டில் இஸ்லாம்மார்க்கத்தைத் தழுவிக்கொண்டார். ஆண்டவனுக்காக அவன் மார்க்கத்தைப் பரவச்செய்வதில் எதிரிகளாகத்தோன்றியவர்கள்பேல் முதல் முதல் அம்பெய்தவர் இவரே. இஸ்லாம்மார்க்கத்தின் பொருட்டு நடந்த எல்லா யுத்தங்களிலும் இவர் சேர்ந்திருக்கிறார். அவர் வாக்கால் கூறியது பலிக்காமற் போவதில்லை. இக்காரணத்தால் ஜனங்களுக்கு அவர் விஷயத்தில் மிக்க பிரீதியுண்டாயிருந்தது. அவர் எய்யும் அம்பு குறி தவறாமல் தாக்கவேண்டுமென்றும் அவருடைய வேண்டுகோள் எதுவாயினும் அதையளிக்கவேண்டுமென்றும் அவர் வாக்குப்பலிக்கவேண்டுமென்றும் ஹஸரத் அவர்கள் அவருக்கு ஆசி கூறியிருந்தார்கள். ஹஸரத்பின் அபிவக்காஸ்றலியல்லாஹு அன்ஹு அவர்கள் குட்டையும்பருத்ததுமான தேகமுடையவர்கள். உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் காலத்தில் கூபாவுக்குப்பிரதம அதிகாரி (கவர்னர்) யாக அமர்த்தப்பட்டார். அவர் ஹிஜ்ரி 55-ம் ஆண்டு மதினாவில் தமது மாளிகையில் மரணமடைந்து ஜன்னதுல் பகீயாவில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

பிறந்தபிள்ளைகள் தங்கள் தங்கள் தந்தை வழியிற்செல்லும்; ஆனால் பாத்திமாவின் பிள்ளைகளோ என் வழியில் எனக்குடந்தையாகச் சேர்வார்கள்; என் பிள்ளைகளாக மதிக்கப்படுவார்கள்" என்று அருளியதாக ஹஸரத் உமரே பாரூக்றலியல்லாஹுஅன்ஹு அவர்கள்கூறினார்கள்.

ஸஹீபுகாரியில் ஹஸரத் மஸூர்பின் மக்ரிமா *(றலி)பின் காணுமாறு கூறுகிறார்:—

"பாத்திமா என்னுடைய இருதயத்தின் ஒரு பாகமாகும். யாராவது ஒருவர் பாத்திமாவுக்குக் கோபமூட்டினாலும் அல்லது மனவருத்தமுண்டாக்கினாலும் அவர் எனக்குக் கோபமூட்டியவர்களாகவும் என் மனதிற்கு விபாகூலத்தை யுண்டாக்கியவர்களாகவும் ஆவார்கள்" என்று ஹஸ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்.

ஸைத்பின் அர்கம்(றலி) பின்வருமாறு கூறுகிறார்:—

"பாத்திமா றலியல்லாஹு, அலிரலியல்லாஹு, ஹஸன் றலியல்லாஹு, ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹும் இவர்களோடு யாரேனும் சண்டை செய்தால் அவர்களோடு நானும் சண்டைசெய்வேன். இவர்களோடு யாரேனும் சமாதானம் செய்து கொண்டால் அவர்களோடு நானும் சமாதானம் செய்து கொள்வேன்" என்று ஹஸரத் அவர்கள் திருவுளமானார்கள்.

### பத்ஹுல்பாரி என்ற நூலில்
### பின் வருமாறு கூறப்பட்டிருக்கிறது.

"அஸ்ஹாபிகளுடைய வீடுகள் பெரும்பாலும் மஸ்ஜிதுக்கருகாமையில் இருந்தன. அவற்றின் வாயிற்படிகள் அனைத்தும் மஸ்ஜி

* மஸூர்பின் மக்ரிமா றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பூர்வநாமதேயம் அபூ அப்துர் றஹிமான் ஸஹீர் குரேஷியென்பதாம். இவர் அப்துர் றஹிமான் பின் அவுப் என்பவருடைய சகோதரி புத்திரர். இவர் ஹிஜ்ரீ 2-வது வருடத்தில் மக்காவில் பிறந்தார். ஹிஜ்ரீ 8-வது வருடம் வில்ஹஜ்மாதம் மதினாவிற்கு வந்தார். ஹஸரத் அவர்கள் வபாத் ஆனபோது இவருக்கு வயது 8. இவர் ஹஸரத் அவர்கள் சொன்ன ஹதீதுகளைக்கேட்டு கவனத்தில் வைத்திருந்தார், ஹஸரத் உஸ்மான் றலியல்லாகு அன்ஹு அவர்கள் யுத்தத்தில் மடியும் வரையில் மதீனாவிலிருந்து பிறகு மக்காவிற்குத் திரும்பினார். எஸீதிடத்தில் பையத் செய்யமறுத்து விட்டார்; பிறகு மக்காவில் நடந்த யுத்தத்தில் கல்லால் காயமடைந்து ஹிஜ்ரி 64 ம் வருடம் ரபியுல் அவ்வல் மீ மரணமடைந்தார்.

தின் உட்பக்கம் இருந்தன. பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் வீடுதவிர மற்ற அஸ்ஹாபிமார்களின் வீட்டு வாயில்களை யெல்லாம் ஹஸரத் அவர்கள் அடைத்து விடச்செய்தார்கள். அஸ் ஹாபிமார்கள் இதைப்பற்றி கேட்டபோது "நான் என் இஷ்டப்படி ஒன்றையும் செய்யவில்லை. ஆண்டவன் எனக்குக் கட்டளையிட்ட படியால் அவன் கட்டளையை நான் நிறைவேற்ற வேண்டியவனாக விருக்கிறேன்" என்று ஹஸரத் அவர்கள் விடையளித்தார்கள்.

ஹஸரத் இப்னு அப்பாஸ் பின்வருமாறு கூறுகிறார்:—"நான் உங் களிடம் எவ்விதபிரதிபலனையும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் என்சுற்றத் தார்கள் மேல் மட்டும் அன்பாயிருங்கள் என்று ரிவாயத்துவந்திருக்கி றது. இதில் சுற்றத்தார் என்றது யாரையென்று ஹஸரத் அவர்களைக் கேட்டபோது அவர்கள் "பாத்திமா, அலி, ஹஸன், ஹுஸைன்" என்று கூறியருளினார்கள்.

அபூஸயீத் ஹஸ்ரீ (ரலி) பின்வருமாறு கூறுகிறார்.—ஹஸரத் அவர்கள் ஒருநாள் பாத்திமா (றலி) அவர்கள் வீட்டிற்குச் சென்ற போது "எ! மா நீபாத்திமா, நான், அலி, இமாம் ஹஸேன், இமாம் ஹுஸேன் வரும் கியாமத் நாளில் ஒரே இடத்திலிருப்போம் என்று திருவுளமானார்கள்.

ஹஸரத் இமாம் மாலிக் ரஹிமஹுல்லா பின்வருமாறு கூறுகிறார்கள்:—ஹஸரத் அவர்களுடைய இருதயத்தின் ஒரு பாகமாகிய பாத்திமா (றலி) வுக்குச் சமானமான பெருமையையும் உயர்வையையும் ஒருவரும் அடையமுடியாது. ஆண்டவன் தன் பரிசுத்தமான குர் ஆனில்திருவுளமாகிறான்:—"நீங்கள் உங்களுக்குப் பிரியமான பெண்களை ஒன்று, இரண்டு, மூன்று. நான்குவரையில் மணம்புரிந்து கொள்ளுங்கள்."

இந்தக் கட்டளையின்படி அலிரலியல்லாஹு அன்ஹு அவர் களுக்கு வேறு பெண்களைமணந்துகொள்ள அனுமதியிருந்தது. ஆயி னும் ஹஸரத் அவர்கள் அப்படிச்செய்ய வொட்டாமல் அவர்களைத் தடுத்துவிட்டார்கள்.

இமாம்மாலிக் ரஹிமஹுல்லா கூறுகிறார்கள்:-நான்கு மனைவியர் களுக்குமேல் மணந்துகொள்ளும் சுதந்தரம் ஹஸரத் அவர்களுக்கு

மட்டுமே யிருந்தது. அதைப்போலவே பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் உயிரோடிருக்கும் வரை அலிறலியல்லாஹு அன்ஹு அவர்களை வேறு மணஞ்செய்து கொள்ளாமல் தடுப்பதற்கு ஹஸரத் அவர்களுக்குமட்டுமே தகுதியிருந்தது. ஏனெனில் அவர்கள் ஆண்டவனுடைய கட்டளைகளை நிறை வேற்றுகிறவர்களாகவிருந்தார்கள்; வேறு எந்த மாதர்களுக்காவது ஆடவர்களுக்காவது இந்த அதிகாரமில்லை.

ஒருவன் தன் மருமகனை அவன் ஒரு நிக்காஹுக்கு மேற்பட்டு நிக்காஹ் செய்யக்கூடாதெனத்தடுக்க இஸ்லாம் மார்க்கச்சட்டம் இடங்கொடாது. ஆனால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் 4 நிக்காஹுக்கு மேற்பட்டு நிக்காஹ் செய்துகொள்ளலாம் என்பதற்கும் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய கணவர் ஹஸரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு நிக்காஹுக்கு மேற்பட்டு நிக்காஹ் செய்யக்கூடாது என்பதற்கும் ஒரு பிரத்தியேகச்சட்டம் ஆண்டவனால் அவர்களுக்காக ஏற்பட்டிருந்தது. இதிலிருந்து நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பதவிக்கும் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் பதவிக்கும் எந்த ஆடவர்களுடைய பதவியோ அல்லது எந்த மாதர்களுடைய பதவியோ முறையே ஈடாகமாட்டாதென்பது வெளிப்படை.

ஹதீது:- ஹாகிம் றலியல்லாஹு அன்ஹு அவர்களால் அறிவிக்கப்படுகிறது—றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் "பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஸ்வர்க்க மாதர்களுக்கெல்லாம் தலைமையாவர். மர்யம் பிந்தே இம்ரான் இவருக்குச் சமமாகமாட்டார்" என்று திருவுளம் பற்றினார்கள்.

ஹதீது:-ஹஜரத் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களால் அறிவிக்கப்படுகிறது—ஹஸரத் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் தங்கள் அசௌக்கிய நிலைமையில் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களை நோக்கி "நீர் என்னுடைய உம்மத்திலுள்ள ஸ்திரீகளுக்கும் உலகத்திலுள்ள ஸ்திரீகளுக்கும் தலைமையாயிருக்கச் சம்மதிக்கிறீரா?" எனக்கேட்டார்கள்.

ஹதீது:—ஹுஸைபா றலியல்லாஹு அன்ஹு அவர்களால் அறிவிக்கப்படுகிறது—றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்

"ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் என்பால் வந்து அருளினார்கள் ஹஸரத் ஹஸன் ஹஸரத் ஹுஸைன் இவ்விருவரும் ஸ்வர்க்கலோகவாஸிபர்கட்கெல்லாம் சர்தாராவர்" என்று எனத் திருவுளம் பற்றினார்கள்.

ஹதீது:—ஹாரிஸ்பின் அலி உஸாமா றலியல்லாஹு அன்ஹு அவர்களால் அறிவிக்கப்படுகிறது:- ஹஸரத் ஹஸன் றலியல்லாஹு அன்ஹு ஹஸரத் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு இவ்விருவரும் ஹஸரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு முன் குஸ்தி (மல்யுத்தம்) செய்தனர். அப்போது ஹஸரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், ஹஸன் றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி "ஓ ஹஸனே! துரிதப்படுத்தும்" என்றார்கள்.

இதைக்கேட்ட பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் முறையிடுகிறார்கள். "ஓ அல்லாவுடைய ரசூலே! தாங்கள் ஹஸனை ஆதரிக்கிறீர்கள். ஹுஸைனைவிட ஹஸனே தங்களுக்குப் பிரியமானவர்போலும் விளங்குகிறதே" என்றார்கள். அதற்கு ஹஸரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், "ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் ஹுஸைனை ஆதரிக்கிறார். ஆகையால் நான் ஹசனை ஆதரிக்கின்றேன்" என்று மொழிந்தார்கள்.

ஹஸரத் பாத்திமா றலியல்லாஹுஅன்ஹா கூறுகிறார்கள் "ஒரு நாள் ஹஸரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உட்கார்ந்திருக்கையில் வேலைக்காரி ஒருத்தி வந்து ஹஸரத் அவர்களிடம் முறையிட்டதாவது:-

"என் எஜமானன் வியாபாரத்திற்காக வெளியூர் போயிருக்கிறார். என் எஜமானி வீட்டு மெத்தையின்மேல் தனியே இருந்து வருகிறார். கீழ் வீட்டில் அவரது வயது சென்ற பெற்றோர் வசித்துவருகிறார்கள். எஜமான் பயணம் புறப்படுகையில் தன் பெண்ஜாதியிடம் "நான் திரும்பி வரும் வரையில் நீ மெத்தையை விட்டுக் கீழே இறங்கிவிடவேண்டாம்" எனக்கண்டித்துப் போயிருக்கிறார். இப்போதோவெனில், அவரது தகப்பனருக்குக் கொடிய நோய் ஏற்பட்டு விட்டது. அவருடைய தாயாரும் வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறார். அவர்களைக் கவனிப்பார் ஒருவருமில்லை. ஆனதுபற்றி, தாங்கள் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அனுமதியளிக்கும்பட்சத்தில் என்எஜமானி மெத்

தை வீட்டைவிட்டும் கீழிறங்கி வந்து நோயுள்ள தம் பெற்றோரைப் பராமரித்து அவர்களுக்கு அவசியமான சிகிச்சை செய்துவைக்கவிரும்புகிறார். இப்போது அதற்காகவே அவர் என்னைத் தங்களிடம் கேட்டுத் தெரிந்துவரும்படி அனுப்பியிருக்கிறார்.'' ஹஸரத் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் சொல்லுகிறார்கள்:-ஹஸரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அந்த வேலைக்காரிக்குச் சொன்னதாவது:-''நீ உன்னுடைய எஜமானிக்குப்போய்ச் சொல் ஜாக்கிரதை! உன்னுடைய கணவன் திரும்பிவருமளவும் நீ மெத்தை வீட்டைவிட்டும் கீழே அடியெடுத்து வைக்கக்கூடாது.'' இதைக்கேட்ட அந்த வேலைக்காரி, தன் எஜமானியின் பிடத்திற்குப்போய் அறிவித்தாள். பின்னர் இரண்டு மணிநேரத்திற்குள் அந்த வேலைக்காரி மீண்டும் ஹஸரத் அவர்களிடம்வந்துசொல்லுகிறாள்:- ''நபிகள்நாயகமே! எஜமானியுடைய தகப்பனார் உயிர் துறக்குந்தருவாயிலாயிருக்கிறார். எங்கள் எஜமானி தன் தகப்பனாரைக்கண்டுகொள்ள தவிக்கிறார், இப்போதாகிலும் அனுமதியளிக்கலாமா?'' என்றுமுறையிட்டாள்.

ஹஸரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்:—''நீ உன்னுடைய எஜமானிக்குத் தெரிவித்துவிடு-நீ ஆண்டவனுடையதும் அவருடைய திர்க்க தரிசியினுடையதும் சந்தோஷ காத்தை விரும்புவாயாகில் உன்னுடைய தகப்பன் இறந்து போனாலும் சரியே, உன் கணவனுடைய அனுமதியின்றிக் கீழே அடியெடுத்து வைக்காதே'' என்று. வேலைக்காரி இதைக் கேட்டுப் போனதும், திரும்பி வந்து சொல்லுகிறாள்:-''நபியே! எஜமானியுடைய தகப்பனார் இறந்துவிட்டார். தாயாரும் மரணத்தருவாயிலாயிருக்கிறார். எஜமானி மனம் சகியாது அழுகிறார்; பெற்றோர் உலகத்தைவிட்டுச் செல்லும் வேளையிலாவது அவர் தன் பெற்றோரைப் பார்க்க வேண்டாமா?'' என்றாள்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்:- மகளே! செவ்வையாகக்கேட்டுத் தெரிந்துகொள். எதுவரையில் உன் எஜமானன் நேரில்வந்து உன் எஜமானிக்கு அனுமதியளிக்க மாட்டாரோ அதுவரை அவர்கீழே இறங்கிவருவதும் கிரமமன்று. நீ இன்னமும் போய் சொல்லிவிடு! அவர் ஆண்டவனுக்கும் அவனுடைய ரசூலுக்கும் வழிபட்டுநடந்ததால் ஆண்டவன் அவருக்கு இதற்குரிய நற்கூலி

யைத்தருவான். பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிருர்கள்:-சுமார் பத்து தினங்களுக்குப்பின் அந்த வேலைக்காரி என்னிடம் வந்தபோது நான் "உன்னுடைய எஜமானியின் பெற்ருேர் சங்கதி எப்படி? என்று வினவினேன்.

வேலைக்காரி:- அந்தோ! என் எஜமானியின்பெற்ருேர் அன்றைய தினமே இறந்துபோயினர். இரண்டுநாள் சென்றபின் எஜமானன் வந்தார், அவர் நடந்ததைக் கேள்வியுற்று வருந்தியபோதிலும் தன் மனைவியின் பொறுமையைக்கேட்டுப் பெரும் மகிழ்ச்சி யடைந்தார். அதே இரவு என் எஜமானிகண்ட கனவைக்கேளுங்கள்: அவருடைய பெற்ருேர் ஸ்வர்க்கலோகத்தின் மாளிகைகளில் முத்துக்களினுல் அலங்கரிக்கப் பட்டுள்ள சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கின்றனராம். அவர்களுடைய தலையின்பேரில் கிரீடம் இலங்கிக் கொண்டிருக்கவும் ஹூறுல்ஈன் என்னும் தேவலோக கன்னிகள் அவர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டு இருக்கிருர்களாம். எஜமானி தன் பெற்ருேரைநோக்கி "நீங்கள் இத்தகையை உயர்தர அந்தஸ்தை அடைவதற்கு உலகத்தில் என்ன அரியநற்கருமங்களைச் செய்தீர்கள்?" என்று கேட்டதற்கு அவரது பெற்ருேர் "மகளே! நீ உன்கணவனுக்கும், ஆண்டவனுக்கும், அவன் றசூலுக்கும் வழிபட்டு நடந்து கொண்டாயல்லவா? அதன்பொருட்டே இறைவன் எங்களுக்கு இத்தகைய அந்தஸ்தை அருளிச்செய்தான்" என்றனராம்.

சுப்ஹானல்லா! அல்லா றசூலுடைய கட்டளைகளுக்கிணங்கக் கணவனுக்கு வழிபட்டு நடக்கவேண்டும் என்ற பயம் அப்புண்ணியவதியின் இருதயங்களில் எம்மட்டில் ஏற்பட்டிருந்தது. நேயர்கள் இப்புண்ணியவதியின் பக்திவிசுவாசத்தை யூகித்தறிவார்களாக.

ஒரே கட்டிடந்தான்-மெத்தையின் கீழ் வசித்துவரும் பெற்ருேர் மரணஸ்திதியிலா யிருக்கின்றனர். இச்சந்தர்ப்பத்திலும் றசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அனுமதியின்றிப் பெற்ருேர்களைப் பார்ப்பதற்காக மெத்தையை விட்டும் கீழே அடியெடுத்து வைக்கவும் முடியவில்லை.

அந்தோ!பெற்ருேர் அன்பு பெற்ருேர் தம்பிள்ளையை எதுமட்டில் நினைத்திருப்பார்கள்? பிள்ளையாகிய அம்மாது தன்பற்றில் கிஞ்சித்தும் குறைநேரவிடவில்லை. அவர் பிறருக்கு படிப்பிக்கும் யோக்யதை

அடைந்துவிட்டார்; மனம் புண்ணடைந்திருந்தது. ஆயினும் தன் பற்றுக்கு நிகரில் பெற்றோர்களையும் கவனிக்கமுடியாமற்போயிற்று; உலகத்தில் பெற்றோர் அன்பைக்காட்டிலும் மேலானதுவேறொன்று மில்லை.

அவ்வம்மையாரின் நிலைமைக்கு நிகரில் நாம்தற்காலம் நம்முடைய ஸ்திரீகளின்நிலைமையைக் கவனிப்போம்; இவர்களில் பெரும்பான்மையோர் அற்பகாரியத்திலும் கணவன் தங்களை கண்டித்தாலோ பல்லைக்கடித்துக் கொண்டு அவர்கள் வார்த்தைகளை அனுசரியாமலும் எதிர்த்து நிற்கின்றனர்.

வெட்கம், ரோஷம், அல்லாரசூலின் பயம், கணவரின்சேவை முதலியவற்றின் நாமதேயமே அவர்களில் கிடையாது.

இவர்கள் யதேச்சைபெற்றவர்களாக மூக்கணாங்கயிறற்ற ஒட்டகத்தைப்போல் நடந்து திரிகின்றனர்.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் விவரிக்கிறார்கள்:- ஒருநாள் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உல்லாசமாக ஒருதோப்புக்குள் சென்றபோது அங்குமேய்ந்துகொண்டிருந்த சில ஆடுகள் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு ஸஜதா (சாஷ்ட்டாங்கம்) செய்தன. இதைக்கண்ட ஸஹாபாக்கள் ஹஜ்ரத் அவர்கள் சமுகத்தில் "அல்லாவுடைய ரசூலே! பகுத்தறிவு இல்லாத பிராணிகள் தங்களை இம்மட்டும் கண்ணியப்படுத்துகையில் பகுத்தறிவுள்ள மனிதர்களான நாங்கள் ஏன் தங்களுக்கு ஸஜதா (சாஷ்ட்டாங்கம்) செய்யக்கூடாது?" எனக்கேட்டனர்.

நபிகள் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்:— "அன்பார்ந்தவர்களே! அல்லா ஒருவனைத்தவிர மற்றெவருக்கும் ஸஜதா செய்தல்தகுமாயின் நான் ஆண்டவன்மீது சத்தியமாகச் சொல்லுகிறேன் உலகத்திலுள்ள சகல ஸ்திரீகளும் முறையே தத்தம் கணவர்களுக்கு ஸஜதா செய்யலாம் என நான் கட்டளையிட்டிருப்பேன்" என்றார்கள்.

ஒரு ஸ்திரி தன் கணவனுக்கு எம்மட்டில் வழிபட்டு நடக்கவேண்டும் என்பதும் கணவனுடைய பதவி எத்தகையது என்பதும் இதனால் நன்கு விளங்குகின்றது.

கணவன் தன்பெண்ஜாதிக்கு ஒரு கிரீடத்திற்கொப்பாகின்றான். அவனே அவளுடைய அதிகாரியும் எஜமானனுமாவான்; அல்லாவும் ரசூலும் கணவனுடைய பதவியை சிலாகித்திருக்கும்போது கணவனைமதியாது வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசி அவனோடு சதா சண்டை சச்சரவு செய்துக்கொண்டிருக்கும் மூடத்தனமுள்ள ஸ்திரீகளை என்னவென்று சொல்வது?

## 5-வது அத்தியாயம்.

### ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாத்தைத் தழுவுதல்.

ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அபுதாலிப் அவர்களுடைய குமாரர், ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்குச் சிறிய தகப்பனாருடைய பிள்ளை (சகோதரர்) ஆவர். இளைஞர்களுக்குள் முதன் முதலாக இஸ்லாமார்க்கத்தைத் தழுவியவர் இவரே. இவர்கள் இஸ்லாத்தில் சேர்ந்தபோது இவர்கள் வயதுபத்து. இதைக் கவனிக்குமிடத்து இறைவன் ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு இளமைப் பருவத்திலேயே இஸ்லாத்தின் அரிய பாக்கியத்தை அருள்புரிந்திருந்தான் எனக்கூறத் தகும்.

ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாத்தில் சேர்ந்தபோது காபிர்களின் கொடுமைகள் அளவு கடந்திருந்தன. இவர்கள் நம்நபிகள்நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்அவர்களை எல்லாவிதத்திலும் நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கிக் கொண்டிருந்தனர்.

ஒருநாள் குரைஷி சமூகத்தோர் கூடியிருந்த ஒரு மகாஜனக்கூட்டத்திற்கிடை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவுளமாகிறார்கள்:-

"உங்களினின்றும் சிலராயினும் என்னுடன் சேர்ந்து விடுவீராகில் இறைவனது உண்மை மார்க்கத்தின் பிரசாரம் எதுமட்டில் விரைவாய்ப் பரவும் என்பதை நான் உங்களுக்குப் பகிரங்கமாய் எடுத்துக் காட்டுவேன்".

தக்ஷணமே, ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுந்திருந்து கூறுகிறார்கள்:- "ஓ இறைவனின் உண்மையான (நபி

யே!) தீர்க்கதரிசியே! நான் மனப்பூர்த்தியாகத் தங்களை ஆதரிக்கின்றேன்.'' சுப்ஹானல்லா! பத்தே பிராயமுள்ள ஒருசிறுவர் (உலகவிஷயங்களை அறியாதவர்) யதார்த்தத்திற்காக இவ்வாறு துணிந்து விடுதல் எம்மட்டில் ஆச்சரியப்படத்தக்கதும் புகழத்தக்கது மாகும்.

உண்மையிலோ வெனில், ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் இம்மொழிகள் இறைவன் தத்துவத்தைக் கொண்டு அவர்கள் வாயிலாய் வெளியாயின என்றே கூறவேண்டும். குரைஷி சமூகத்தார், ஒரு சிறுவன், (ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள்) இப்படிச் சொல்வதைக்கேட்டதும் பரிகாசம் செய்ய ஆரம்பித்தனர். ஆனால் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், உடனே ஹஜ்ரத் அலி அவர்களைத் தம்மார்போடு கட்டியணைந்து அவர்களுடைய வீரதீரத்திற்குப் பாராட்டி அவரை வாழ்த்தினார்கள்; இஸ்லாத்தின் போதனைகளைப் புகட்டினார்கள்.

குரைஷி சமூகத்தாரால் பரிகாசம் செய்யப்பட்டுள்ள இச்சிறுவர் பிற்காலத்தில் தனது வீரத் தன்மைக்கும் மார்க்க உபதேசங்களுக்கும் உலகின்கண் துலங்குகிறார். கியாமநாள்வரையில் உலகவாசிகளால் போற்றப்படுகிறார். உலகத்தார் தமக்குள் ஏற்படும் விவகாரங்களில் ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் தைரியமும், உறுதியையும் முன்னிட்டு இவர்கள்பேரில் சத்தியம் சொல்லுதல், ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய அருமைப் புதல்வியார் இவர்களுடைய மனைவியாராகுதல் சில காலத்திற்குள் தூய்மையான கிலாபத் பதவி இவர்களுக்கு வாய்ந்துபோதல், முதலிய அரிய விஷயங்கள் யாருக்குத்தான் தெரிந்திருந்தன?

ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு இஸ்லாத்திற்கு வந்தவுடன் குரைஷிகள் இவர்களின் பிராணசத்துருக்களாய் விட்டனர். ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சத்துருக்கள், இவர்களைச் சமயம்பார்த்துக் கொன்றுவிடத் தீர்மானித்திருக்கிறார்கள் என்பதையும் செவியுற்றார்கள். எனவே, ஹஜ்ரத் அலி அவர்களை போதியவாறு பாதுகாக்கவேண்டும் என்ற கவலை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு ஏற்பட்டது. எச்சமயத்திலும், ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தம்முடனேயே இருந்துவரும்

படி செய்தார்கள். அவர்கள் விஷயத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார்கள். ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் பிதா, சிறுபிராயத்தில் தன்னை போஷித்து வந்தார்களே இப்போது தாம் அவர்களது திக்கற்றபிள்ளையை போஷிக்கவேண்டாமா என்ற கவலையும் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மனதிற்கு சிறிதேனும் வருத்தம் உண்டாகும்படி எச்சமயத்திலும் கடிந்து பேசுகிறதில்லை.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மதப்பற்றை நிரம்பவும் பாராட்டிவருவார்கள். அவர்களிடத்து ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு விசேஷப்பிரியம் இருந்து வந்தது; வெளியில் போகும்போதெல்லாம் அநேகமாய் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தம்முடன் அழைத்துக்கொண்டே செல்வார்கள்.

குறைஷிகள், இதைக்கண்டு மேன்மேலும் பொறாமையும் ஆத்திரமும் கொள்ளுவார்கள்.

ஏற்கனவே ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பால் குறைஷி சமூகத்தாருக்கு விசேஷப்பகையுண்டு. அதிக்கிரமம் அவர்களது பிரதானக்கொள்கையாயும் துரோகம், மோசம், அநீதம் அவர்களுடைய முக்கிய அம்சங்களாயுமிருந்தன.

இந்நிலைமையில், அவர்கள் தங்கள் கொள்கைக்கு மாறாய், யதார்த்த வசனங்களைக்கூறிப் புதியதோர் கொள்கையை ஸ்திரப்படுத்த முயலும் நபிகள்நாயகம்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய கொள்கையை யெவ்வாறு அங்கீகரிப்பர்? எந்தவிதத்திலும் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய இயக்கத்தை வேருடன் பிடுங்கி எறிந்துவிடவேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கமாயிருந்து வந்தது.

அங்ஙனமின்றி அப்துல்லாவுடையபுதல்வரான(முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) வர் பலமடைந்துபோனால் குறைஷிசமூகத்தாராகிய தாங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்துபோக நேரிடுமே

என்ற திகிலும் அவர்களுக்கு அதிகமுண்டு. இதற்கு அவசியமான பரிகாரங்களைத் தேடுவதில் அவர்கள் அல்லும் பகலும் முயற்சி எடுத்து வருவார்கள். ஆண்டவன் செயல்! அவர்களுடைய எத்தகைய முயற்சியும் பயன்பெறுதுபோகும். ஏகோபித்துள்ள அவர்களது அபிப்பிராயங்களும் பிரயத்தனங்களும் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எள்ளளவும் தீங்குவிளைவிக்க முடியாதவைகளாயின. மேலும் அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு கஷ்டநஷ்டங்களை விளைவிக்க முயற்சித்தனரோ அவ்வளவுக்கவ்வளவு இஸ்லாம் மதப்பிரசாரமும் அதன் உண்மை ஊக்கமும் பலங்கொள்ளாலயின.

குறைஷி சமூகத்தோர்களுக்கிடை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அளவுகடந்து பிரசாரம் செய்துவருவார்கள். வழி தடுமாறிய குறைஷிகள் எவ்விதத்திலாவது சன்மார்க்கத்தை அடைந்துபோகட்டும் என்பதே ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய நோக்கம். "நீங்கள் தவறான உங்கள் விக்கிரக பூசையினின்றும் ஒதுங்கிக்கொண்டு ஏகமான இறைவனை வணங்கி நரகவேதனையினின்றும் தப்பித்துக்கொள்ளுங்கள்" என்று ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறைஷி சமூகத்தாருக்கு எவ்வளவோ சமாதானம் கூறுவார்கள். அவர்களோ அவற்றை ஒருவாறு புறக்கணித்துவிடுவர். ஏன்? அவர்களுடைய இருதயங்களில் அஞ்ஞான இருள் அடையப் பெற்றிருந்தது. அவர்கள் மூளைகள் அப்புனித உபதேசங்களைக் கிரகித்துக்கொள்ள முடியாதவைகளாயிருந்தன. இந்த துரதிஷ்டர்கள் தம் சிருஷ்டிக்கர்த்தனுடைய உண்மையான கட்டளைக் கோட்பாடுகளை அங்கிகரியார். எவ்வளவோ சண்டை சச்சரவுகளும், கிளர்ச்சிகளும் படுகொலைச் சம்பவங்களும் நிகழ்கின்றன. பிடிவாதம் படைத்துள்ள அவர்கள் நேர்வழிக்கு வந்தபாடில்லை. இவர்கள் தங்கள் மூடத்தனங்களை உணரவில்லை. இவர்களுடைய கொடுமைச்செயல்களோ அளவு கடந்துபோகின்றன. ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இனி இவர்களைத் திருத்தமுடியாதென ஆசாபங்கமடைந்து ஹிஜ்ரத் (தங்கள் தேசத்தை விட்டு மறு தேசம் செல்லல்) செய்ய தீர்மானித்து விடுகிறார்கள்.

ஆனால் சங்கைபொருந்திய மக்கமாநகரத்தை விட்டு விடுதல் எளிதன்று. நம் நபிகத்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்

களுடைய முன்னோர்களின் ஞாபகச்சின்னங்களுடைய பூமியே மக்கா, ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்துவளர்ந்த பூமியே இது; மக்கத்து அபிமானம் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய இரத்தத்திலும் கலந்திருந்ததாகவே கூறத் தகும். இந்நிலையில் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மக்கத்தில் வசிக்கவேண்டுமாயின் இஸ்லாம் மதப்பிரசாரத்தை முற்றிலும் ஒழித்துவிடவேண்டியதாகிறது. ஆனால் தம் அருமை பந்துமித்திரர்களைக் காட்டிலும் அதிகப்பிரியமான சுத்தசத்திய இஸ்லாத்தைவிட்டும் விடுதல் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு சாத்தியமான காரியமோ? கடைசியாக ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவுக்கு பயணமாய் (ஹிஜ்ரத்) விடுவதே மேலானது என முடிவு செய்துகொள்ளுகிறார்கள். இதற்கிணங்க மதீனாவிலுள்ள ஒரு பெருங்கூட்டத்தார் (இஸ்லாந் தழுவியவர்கள்) ஹஜ்ரத் அவர்களைத் தம் தேசத்திற்கு வரும்படியாக வற்புறுத்திக்கேட்டுக்கொள்ளுகின்றனர்.

மதீனாவுக்குச்சென்ற ஹஜ்ரத் அவர்கள் ஜைத்பின் ஹாரிஸா, ராபிஃ றலியல்லாஹு அன்ஹு இவ்விருவர்களையும்மக்கத்துக்கனுப்பி ஹஜ்ரத் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா உம்மெகுல்ஸூம் ஸவ்தாபிந்தெ ஸம்ஆ, அஸாமாபின் ஸைத்இவர்களுடைய தாயார் உம்மு அய்மன் முதலியவர்களை மதீனாவுக்கு அழைத்துக்கொள்ளுகிறார்கள்.

அப்துல்லாபின் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் தம்முடன் பந்து ஜனங்களுடன் மதீனாவுக்குப்போன பிற்பாடு, ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் புதிய வீட்டில் வசிக்கலாயினர்.

---

## 6-வது அத்தியாயம்

---

## பாத்திமா நாயகியின் திருக்கல்யாணம்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மதீனாவுக்கு வந்த பின்னர் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் (ருதுவானார்கள்) பிராயத்திற் கெட்டினார்கள்.

அரேபியாவிலுள்ள பிரபல தலைவர்கள், பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களை நிக்காஹ் செய்வதற்கான விண்ணப்பங்களை

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய சமூகத்திற்கு அனுப்பிக்கொண்டனர். ஆனால் ஹஜ்ரத் அவர்கள், அவர்கள் எல்லோருக்கும் சம்மதமற்ற பதிலளித்து கூறிய காரணமாவது:-மானிடப்பிறப்புக்கு செல்வம், வித்தை, குறிபார்த்தல், கவிகளை கோர்வைசெய்தல் முதலியவற்றால் கண்ணியம் ஏற்படமாட்டாது. மனிதனுக்கு மனுஷத்தன்மை அவசியம்; மனுஷத்தன்மையிலேயே மானிடப் பெருமைக்குரிய அம்சங்கள் யாவும் பொருந்தியிருக்கின்றன. நற்குணங்கள் வாய்ந்த ஒருவன் காடு வனாந்தரங்களில் வாசம் பண்ணினும் தன் நற்குணங்களின் கீர்த்தியை அவன் அடையாமற் போகமாட்டான்.

நற்குணங்களற்றவனோ பொன் வெள்ளி பாத்திரங்களில் உண்டு குடிப்பினும், மகாசிறந்த மாளிகைகளில் வசிப்பினும், மிருகஜாதிகளுக்கே ஒப்பாவான். ஏனெனில் அவன் உலகிலுள்ள அழியும் பொருள்களே தனக்குக் கைகொடுப்பவைகள் எனஎண்ணங்கொண்டவன்; இத்தகைய எண்ணங்கள் இருந்தாற்போலிருந்து அவனை அபகீர்த்தியின் புறமாய் இழுத்துக்கொண்டு போகக் கூடியவைகளாகும்; இவை மானிடவர்க்கத்திற்கு எந்நேரமும் அழிவின் அச்சத்தையுண்டு பண்ணக்கூடியவை; உலகத்தின் செல்வ நிலையைக்கண்டு கர்வங்கொண்ட ஒருவன் கள்ளர், திருடர் அயோக்கியர்களால் பறிகொடுத்தவனாகி, சிறிது நேரத்திற்குள்ளாகவே தரித்திரவானாயும் விடக்கூடும்; பூகம்ப மேற்படுமாகில் அவனுடைய சிறந்த மாளிகைகளெல்லாம் கவிழ்ந்து போகக்கூடும். ஆனால் சற்குணங்களின் தனம்படைத்துள்ள மேதாவிகள் மேம்பாட்டடைந்தவர்கள். உலகில் அவர்கள் மேம்பாட்டிற்கு யாதொரு விரோதியின் அச்சமும்கிடையாது. அவர்கள்கஜானா முறிந்து போகக்கூடியதன்று. அவர்கள் ஆத்மசக்தியின் கட்டடங்களுக்கு சிறிதும் அதிர்ச்சி ஏற்படமுடியாது.

நம் நபிகத்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆத்ம சக்தியின் செல்வத்தால் நிறப்பப்பட்டிருந்தது போலவே தம் மருமகப் பிள்ளையும் சற்குணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என விருப்பங் கொண்டிருந்தார்கள். தனது அருமைப் புதல்வியை யாதொரு தக்க சீமானுக்கு மணஞ் செய்விக்கவேண்டும் என்ற எண்ணம் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கு

மாயின் அவர்கள் அச்சீமான்களுடைய விண்ணப்பங்களை நிராகரித்திருக்கமாட்டார்கள்.

கடைசியாக, இந்த நிக்காஹ் பாக்கியத்தை ஓர் எளியவரே அடைகிறார். அவர் யார்? அவரே ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள். நபிகள் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஏழையாகிய தன் பேரில் கிருபை கூர்வாரா? என்ற எண்ணம் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மனதில் உதயமாகிறது. அவர்கள் உலகத்தை முற்றிலும் லக்ஷியம் செய்யாதவர்கள். சற்குணங்கள், நல்ல அனுஷ்டானங்கள் இவையாவும் அவர்களது அரிய கொள்கையின் அம்சங்களாயிருந்து வந்தன. இறைவன்பேரில் நம்பிக்கைவைத்தல், அவன் பிரியத்திற்கிணங்க நடத்தல், கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைதல், இறைவன் வழியில் தன் உடல், பொருள், ஆவியைத் தத்தம்செய்யும் வீரதீரத்தைப் பாராட்டல் இவையாகும் அவர்கள் கொள்கைகள்.

ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அடிக்கடி தம்மில் சிந்திக்கலானார்கள்:—"நான் ஏழை, வறுமை படைத்தவன். ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய புதல்வியாருக்கு என்னால் கஷ்டம் நேரிடுமோ?" ஹஜ்ரத்அலிறலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களிடத்தில் விசுவாசமுண்டு; ஆனால் மரியாதையைப் பாராட்டி அவர்கள் தம்முடைய நோக்கத்தை வெளிப்படுத்த முடியாமலிருந்தார்கள். ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய கம்பீரமானது அவர்களுக்கு (அலிறலியல்லாஹு அன்ஹுக்கு) வாய்ப்பூட்டுக்குச்சமானமாயிருந்தது.

ஹஜ்ரத் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் ஹஜ்ரத் உமர்கத்தாப் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களை விவாகம் செய்துகொள்ள ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடத்து முறையிட்டுக் கொள்ளுகிறார்கள். இவர்களுடைய உன்னதபதவி நிகரற்றது. ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பதிலளிக்கிறார்கள்"பாத்திமாவுக்குச் சிறு பிராயம்; உங்கள் கோரிக்கை என் எண்ணத்திற்கு இசைந்ததாயில்லை."

ஒருநாள் ஜனுப் ஸித்தீக் றலியல்லாஹுு அன்ஹுு அவர்களும், உமர் றலியல்லாஹுு அன்ஹுு அவர்களும், ஸாத்பின்வகாஸ் றலியல்லாஹுு அன்ஹுு அவர்களும் நபவிபள்ளியிலிருந்துகொண்டு ஹஜ்ரத் பாத்திமா றலியல்லாஹுு அன்ஹா அவர்கள் விஷயமாய்ப் பேசிக்கொண்டிருந்ததாவது:—

"குரைஷி பிரமுகர்களும், அரபியத்தலைவர்களும், பரிசத்திற்குரிய விண்ணப்பங்கள் ஹஜ்ரத் ஸல்லல்லாஹுு அலைஹிவஸல்லம் அவர்கள் சந்நிதானத்தில் சமர்ப்பித்திருக்கின்றனர். ஹஜ்ரத் ஸல்லல்லாஹுு அலைஹிவஸல்லம் அவர்களோ, எவருடைய விண்ணப்பத்தையும் அங்கீகரிக்கவில்லை. இப்போது ஹஜ்ரத் அலி றலியல்லாஹுு அன்ஹுு அவர்கள் மாத்திரமே அனுப்பாதிருப்பார்கள்; ஒருகால் அவர்களுடைய வேண்டுகோள் அங்கீகரிக்கப்பட்டுப்போகும்". ஹஜ்ரத் அபூபக்கர் றலியல்லாஹுு அன்ஹுு அவர்கள் திருவுளமாகினூர்கள்—"ஹஜ்ரத் அலி வறுமையால் அதிகக்கஷ்டப்படுகிறூர்; இதனலேயே அவர் தடைபட்டு இருக்கிறூர். நான்நிச்சயமாய்க் கூறுவேன்: பாத்திமா றலியல்லாஹுு அன்ஹா அவர்களின் நிக்காஹ் அலி றலியல்லாஹுு அன்ஹுு அவர்களுடனேயே நடைபெறும். நாமெல்லோரும்போய் அலி றலியல்லாஹுு அன்ஹுு அவர்களிடம் 'நீங்கள்போய் பாத்திமா றலியல்லாஹுு அன்ஹா அவர்களை நிக்காஹ்செய்துகொள்வதற்குரிய வேண்டுகோளை ஹஜ்ரத் அவர்களிடம் செய்துகொள்ளுங்கள்' என்று சொல்லிப்பார்ப்போம். ஒருகால் அவர்கள் தங்கள் கஷ்டத்தைப்பற்றிப் பேசுவாராஞல் நம்மாலியன்றமட்டும் ஒவ்வொருவரும்அவருக்குஉதவிபுரியமுயற்சிப்போம்." மூவரும் இந்த ஆலோசனைசெய்துகொண்டு ஹஜ்ரத் அலி றலியல்லாஹுு அன்ஹுு அவர்களிடத்திற்குப்போகிறூர்கள். அப்போது அலி றலியல்லாஹுு அன்ஹுு அவர்கள் காட்டில் தம் ஒட்டகத்தை மேய்த்துக்கொண்டிருக்கின்றூர்கள். இவர்கள் அங்குப் போய்ச்சேர்ந்ததும் ஹஜ்ரத் உமர் றலியல்லாஹுு அன்ஹுு ஹஜ்ரத் அலி றலியல்லாஹுு அன்ஹுு அவர்களை நோக்கிச் சொல்லுகிறூர்கள். "ஓ அலி றலியல்லாஹுு அன்ஹுு அவர்களே! ஹஜ்ரத் ஸல்லல்லாஹுு அலைஹிவஸல்லம் அவர்களோடு உங்களுக்கிருந்து வரும் நெருங்கிய சம்பந்தத்தைப்போன்ற சம்பந்தம் எங்களில் வேறெவருக்கும் இல்லை. இறைவன் தங்களுக்கு அருளியிருக்கும் சற்குணங்களும் தங்களுக்கே பொருந்தியுள்ளன,

குரைஷி தலைவர்களில் எண்ணிறந்தோர் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களை நிக்காஹ் செய்துகொள்ளத் தக்கவளவில் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடத்து விண்ணப்பம் செய்துகொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்களுடைய விண்ணப்பங்களில் எந்த விண்ணப்பமும் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களால் அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் உங்கள் வீதத்திலுள்ளவர்கள் என்றும் நீங்கள் ஹஜ்ரத் அவர்களிடம் கேட்டுக்கொள்ளும் பட்சத்தில் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சம்மதித்துவிடுவார்கள் என்றும் நாம் நம்புகின்றோம்.''

ஜனுப் அபுதுராப் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்—"தங்களுக்கும் ஹஜ்ரத் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் கண்டிப்பான பதில் கிடைத்துவிட்டதென்றால் நான் எத்தகைய நம்பிக்கையின்பேரில் என் விருப்பத்திற்குரிய விண்ணப்பத்தை அனுப்பிக்கொள்ளுவேன்?''

ஒரு ரிவாயத்தில் வந்திருக்கிறது:—

ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் உமர் பாரூக் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வார்த்தைகளைக்கேட்டவுடன் ஒருவாறு சிந்தித்துச் சிறிதுநேரத்திற்குப்பின் கூறுகிறார்கள்,

"நான் நீண்டகாலமாய்க் கொண்டுள்ள இந்த ஆவல் நிறைவேறாதென ஆசாபங்கமடைந்திருந்தேன். தங்கள் ஊக்கம் என்னுடைய எண்ணத்திற்குப் புத்துயிர் உண்டாக்குவதாகும். நான் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய மருமகப்பிள்ளையாய் விடவேண்டும் என அத்தகையபிரியமும், ஆசையும் கொண்டுள்ளவன் என்பதை பிறர் அறிந்துகொள்ளல் சாத்தியமன்று. ஆனால், நான் ஏழை; அன்னவஸ்திரத்திற்குக் கஷ்டப்படுபவன்; என்னுடைய எளிமையே என்னுடைய ஆவலை வழிமறிப்பதாகும்.'' ஹஜ்ரத் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பதிலளிக்கிறார்கள்—"ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஐஸ்வரியத்தை லக்ஷியம் செய்பவர்களல்லர். அவர்கள் உலக செல்வத்தை வெறுப்பவர்கள்; ஆகையால் தாங்கள் தங்கள் ஏழ்மையைப் பற்றிச் சிறிதும் கவலையடையாது ஹஜ்ரத் அவர்கள் சமுகத்திற்குச்சென்று

தங்கள் விண்ணப்பத்தை முன்னிடுங்கள். என்மனச்சாட்சியாகக் கூறுகிறேன், தங்கள் விண்ணப்பத்தை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலை ஹிவஸல்லம் அவர்கள் கட்டாயம் அங்கீகரித்துக்கொள்வார்கள்.''

ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் தோழர்களின் ஆலோசனைகளுக்கிசைந்து ஒட்டகத்தின் மீதேறி ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய சமுகத்தில் ஆஜரானார்கள். அவர்கள் வந்த சமயம் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உம்மெஸல்மா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் வீட்டில் விஜயம் செய்துகொண்டிருந்தார்கள். இங்கு வந்ததும் ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மனம் மீண்டும் நடுக்கங்கொண்டது. எனினும் அவர்கள் தம் மனதிற்கு தேற்றம்செய்து வாயிற்படியில் நின்றவர்களாய் தஸ்தக்(கைக்கொட்டி அறிவிக்கும் சகினை) செய்யவே, கதவுகள் திறக்கப்பட்டு ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வீட்டிற்குள் அழைத்துக்கொள்ளப்பட்டார்கள். ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹுவெட்கமடைந்திருந்தமையால் அவர்கள் வீட்டின் ஒரு மூலையை யொட்டித் தலை சாய்ந்து உட்கார்ந்துகொண்டார்கள்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தம் அரிய பார்வையைக்கொண்டு தமக்கு முன்னிலையில் வருபவர்களின் நோக்கம் இன்னதென்று அறிந்து கொள்வதுண்டு. அவ்வாறே இச்சந்தர்ப்பத்தில் அவர்கள் ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் இரகசியபக்ஷத்தை அறிந்து கொள்ளாமலில்லை. மிக்க அன்போடும் பட்சத்தோடும் ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கிக் கேட்கிறார்கள்:—''அலியே! இன்று நீர் இவ்வளவு வெட்கமுள்ளவராக வந்திருக்கிறீரே, இதற்கு என்ன காரணம்? உம்முடைய முகத்தைப் பார்க்கையில் நீர் ஏதோ ஒருசொந்தக் காரியமாக வந்திருப்பதாகவும் அக்காரியத்தை நீர் வெட்கத்தின்பொருட்டு வெளியிடமுடியாமலிருப்பதாகவும் புலப்படுகின்றது. விஷயம் இன்னதென்பதைக்கூறும்.'' என்னசெய்வார் ஹஜ்ரத்அலி றலியல்லாஹு அன்ஹு. இனி தான் பதிலளியாமலிருந்தாலும் அது அவமரியாதையாகும் என்பதையுணர்ந்த அவர்கள் மிக்க தாழ்மையோடும் வெட்கத்தோடும் வெளியிடுகிறார்கள்:- ''ஓ அல்லாவுடைய ரசூலே! நான் சிறு

பிராயமுதல் தங்களால் போஷிக்கப் பட்டு வந்தவனும் பாதுகாக்கப் பட்டு வந்தவனுமாவேன்; அன்பான தாங்கள் ஆரம்பமுதல் என்னைப் பட்சமாய் பாராமரித்து வருகிறீர்கள். என்னுடைய தந்தையார் (அபூ தாலிப்) தாயார் (பாத்திமா பின் அஸத்) இவர்களைக்காட்டிலும் தாங்கள் என்பேரில் அதிகப்பிரியமுள்ளவர்கள் என்பதை நான் அறிவேன்; என்னுடைய மார்க்கத்தினதும் ஈமானினதும் இரட்சகர் தாங்களே; நான் தங்கள் அடைக்கலத்திற்குட்பட்டவன்; தங்கள் பட்சத்தின் ஆதரவில் நான் என்னுடைய தரித்திரத்தையும் லக்ஷியம் செய்யாமல் சந்தோஷத்துடன் வாழ்ந்துவருகின்றேன். அன்பான தாங்கள் ஆரம்பத்தில் என்னைத் தங்கள் பாதுகாப்பின் கீழ் எடுத்துக் கொண்டதுபோல் இது காறும் என்னை ஆதரித்துவருகிறீர்கள், நீண்டகாலமாக என் மனதில்ஓர் ஆவல் குடிகொண்டிருக்கின்றது; அது யாதெனில், தங்களிடத்தில் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவைப் பற்றிய (எனக்காக) நிக்காஹ் விண்ணப்பஞ்செய்து கொள்ளவேண்டும் என்பது. ஆனால் வெட்கம் இடங்கொடாததால் தடைபட்டிருந்தேன்; இன்று என் மனதிலுள்ள பதட்டமானது என்னுடைய எண்ணத்தைத் தங்களிடம் வெளியிடச்செய்தது. தங்கள் கடாக்ஷத்தின் ஆதரவில் நான் என்னுடைய இத்தகைய எண்ணத்தைத் தைரியத்துடன் வெளியிட்டேன். இல்லையேல் இதைப்பற்றித் தங்களிடம் வாய்த்திறந்து பேசவும் நான் தகுதியற்றவன். இப்போது நான் தங்கள் சமுகத்தில் நிரம்பவும் நயந்துகேட்டுக்கொள்வதாவது; தங்கள் சந்ததியானுகிய இந்த ஏழையின்பேரில் தாங்கள் தயைகூர்ந்து என்னைத் தங்கள் புத்திர அநுக்கிரகத்தின் சிறப்பை அருள் புரியுமாறு என் விண்ணப்பத்தை நிறைவேற்றிவைப்பீர்களாக."

இதைக்கேட்ட நபிகள் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் புன்னகைப்புகொண்டு ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி, திருவுளமாகிறார்கள், "சரி, சரி, நான் உம்முடைய நோக்கத்தை அறிந்துக்கொண்டேன். ஆனால் நிக்காஹுக்காக உம்மிடத்தில் எவ்வளவு பணம்சேர்ந்திருக்கிறது என்பதைச்சொல்வீராக" ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இந்தகைய ஆறுதலான மொழிகளைக் கேட்டதும் ஏற்கனவேயுள்ள தமது ஆசாபங்

கத்தை ஓரளவில் ஒதுக்கிவிட்டு சந்தோஷத்துடன் மிக்க தாழ்மை யோடும் சொல்லுவார்கள்,"என்னிடம் கனந்தங்கிய தங்களது அன்புவிசு வாசத்தின்செல்வமே நிறைந்திருக்கின்றது. தங்கள் கிருபாகடாக்ஷத்தி தின் அனுசரணை எனக்கு இருந்துவரும் பரியந்தம் நான் அழிந்துபோ கக்கூடிய செல்வத்திற்கு ஆசைப்படுவானேன்? என்னிடம் இருக்கப்ப ட்டசொத்து இன்னதென்று தங்களுக்குத்தெரியாததல்ல. அதாவது ஒருவாள், ஓர் ஒட்டகம், ஒருகவசம்; இவைகளே எனக்குரிய உலக செல்வம், நான் தங்களுடைய ஊழியன், இவ்வூழியத்தின் மகிமையே என்னிடத்திலுள்ள நிகரற்றதும் அழிவற்றதுமானசெல்வமாகும்.

எனக்கு பொருளாசை என்? பணத்தாசை எதற்கு? என்னிடத் தில் இறைவனுடைய தியானச் செல்வமே அரியசெல்வமாயும், நான் ஏழையாயினும் என்மனம் சீமானாயும், ஜிஹாதில் (யுத்தத்தில்) பய னளிக்கும் கருவியேஎன்னுடைய செல்வமாயுமிருக்கின்றது ஓ நபிகள் பெருமானே! உங்கள் அருமைப் புதல்வியைக் கொடுத்து என்னிடத்தி லுள்ள ஒருவாளையும் ஒரு ஒட்டகத்தையும் வாங்கிக்கொள்ளுங்கள். என்னுடையஅந்தஸ்து தங்கள் பால் வெளிரங்கமானது- நானோ முஹ ம்மத் என்னும் திருநாமமுள்ள தீர்க்கதரிசியின் ஊழியன்- எனக்கு கிடைத்திருக்கும் இச்சிறப்புக்கு எத்தகைய செல்வத்தின் சிறப்பும் ஈடு படுமோ? இன்னும் நான் உலகச் சிறப்பிற்கும் உலக ஐஸ்வரியத்திற் கும் லக்ஷியம்செய்யேன், என்னுடைய நாவிலும் உள்ளத்திலும் அல்லா ரசூலுடைய தியானமே குடிகொண்டிருக்கின்றது'' என்று பகர்ந்தார்கள்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அலி றலி யல்லாஹு அன்ஹு அவர்களுடைய வார்த்தைகளைக்கேட்டுத் திரு வுளமானதாவது:—

"தற்காலம் அடிக்கடி ஜிஹாதின் (யுத்தத்தின்) அவசியம் நேரிடு வதை முன்னிட்டு வாள் அவசியமான கருவியாகும். போக்கு வரத்துக் காக ஒட்டகமும் அவசியமானதே. மீதியாயிருப்பது கவசம். ஆனால் இஃதில்லாமலும் காரியம் நிறைவேறிவிடுமாதலால் இதை விலை க்குக் கொடுத்துவிடுங்கள்'' என்று அருளினார்கள். அலி றலியல் லாஹு அன்ஹு அவர்கள், "இதுவோ குறைந்தவிலையுள்ளது, 400- திர்ஹமும் விலை பெறமாட்டாதே'' என்றார்கள். அதற்கு ஹஜ்ரத்

ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், "எங்களுக்கு அதுவே போதும். நீர்போய் அதை விற்றுவிட்டுப் பணத்தைக்கொண்டு வாரும்" என மொழிந்தார்கள்.

எச்சரிக்கை:— நேயர்கள், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அரிய ஒழுக்கங்களைப்பற்றிச் சிந்திக்க வேண்டியதாவது:-

பெரிய சீமான்கள் பிரபல கனதனவான்கள் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களைக்கேட்டு ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய சமூகத்திற்கு வந்து விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள். ஹஜ்ரத் அவர்களோ அத்தகைய உயர்தரச் சீமான்களின் கோரிக்கைகளுக்கு உடன்படாது கடைசியாக ஓர் ஏழை தரித்திரவான் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கோரிக்கைக்கு இசைந்துகொண்டார்கள்.

சுப்ஹானல்லா! தனியே ஸபரும் கனுஅத்தும் (பொறுமை திருப்தி) வாய்ந்தவரே அங்கீகரிக்கப்பட்டார்.

இவ்வரிய ஒழுக்கங்கள் நம் திருநபி அவர்களின் உம்மத்தார்களாகிய நமக்குப் படிப்பினைகளாகும். இத்தகைய படிப்பினைகளை நாம் பொருட்படுத்தாது வருவதன் காரணமாகவே நம்முடைய குடும்ப காரியங்களில் சங்கடங்கள் நேர்ந்துபோகின்றன. தற்காலப் பெற்றோர்கள் மணமகனுடைய நற்குணங்களை கவனியாமல் அவனுடைய லக்ஷணத்தையும் செல்வநிலையையுமே பெரிதும்பாராட்டுகின்றனர், இதனின்றும் அநேகமாய் துர்க்குணமுள்ள மணமகனே அவர்களுக்குக் கிடைக்கிறான். அவனிடத்தில் வாழ்க்கை பெறுவதற்குச் செல்லும் மணமகள் தன்கணவனின் துர்க்குணங்களின் காரணமாய்ச் சகிக்கொணாத நிர்ப்பந்தங்களுக்குட்பட்டுத் தன் பெற்றோர்கள் அத்தகைய கொடியனுக்குத் தன்னைக்கட்டிக்கொடுத்தார்களே என்று நினைக்கும்போதெல்லாம் அவர்களுக்கு (பத்துவா) சாபமிடுகிறார்கள்.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய நிக்காஹின் முறையைக்கொண்டு புத்திசாலி தனமுள்ளவர்கள் அதன்படியே நடந்துகொள்வதற்குப் பாடுபடவேண்டும். மணமகனுடைய மேம்பாடுகளைக் கவனியாது அவனுடைய குணங்கள் எப்படிப்பட்டவை என ஆராய்ந்தறியவேண்டும். மானிடர்க்குரிய லக்ஷணங்களே அவரவர்

களின் நல்லொழுக்கங்களாகும். ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாத்திமா நாயகியை ஹஜ்ரத் அலி றலியல் லாஹு அன்ஹு அவர்களுக்குக் கட்டிக்கொடுத்ததானது தங்களு டைய உம்மத்தார்கள் அதன்படியே நடந்துகொள்ளவேண்டும் என்ப தற்கு ஒரு பிரகாசமுள்ள தீப கம்பத்தை நிலைநாட்டியது போலாகும்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கவசத்தை விற்கும் படி மொழிந்ததும், ஹஜ்ரத் அலிறலியல்லாஹு அன்ஹு அவர்கள் உடனே கவசத்தை யெடுத்துக்கொண்டு வெளியிற்சென்றார்கள். உண் மையில் அக்கவசம் வெகு திரமானது; வாள்வெட்டை அது எவ்விதத் திலும் சிதறடிப்பது என்வே, உஸ்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் 400 திர்ஹம்கொடுத்து அதனை வாங்கிக்கொண்டார்கள். (ஓர் ரிவாயத்தில் அக்கவசம் 480 திர்ஹமுகளுக்கு விற்கப்பட்டதாக வும் வந்திருக்கிறது).

பின்னர் உஸ்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹஜ்ரத் அலி அவர்களை நோக்கி வினவியதாவது:—"இப்போதோ நான் இந்தக் கவசத்தை விலைக்கு வாங்கிக்கொண்டேன். இனி நான் இதை எப்படி வேண்டுமாயினும் செய்துகொள்ளலாமல்லவா?" என்றார்கள்.

ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் "தடை யின்றி இது தங்கள் சொத்தாய்விட்டமையால் தாங்கள் நினைத்தபடி செய்துகொள்ளக் கடவீர்கள்" என்றார்கள். ஹஜ்ரத் உஸ்மான் றலி யல்லாஹு அன்ஹு அவர்கள் "தாங்களே என்னைக்காட்டிலும் அதிகமாய் இந்தக் கவசத்திற்கு உரிமையாளர்களாய் விட்டீர்கள். ஆன்தால் மார்க்க விதிகளுக்கிணங்க இதோ இக்கவசத்தை நான் தங்களுக்கு நன்கொடையாக அளித்துவிட்டேன். இது தங்களுக்கே பொருந்தியதாகும்" என்று மொழிந்து கொடுத்துவிட்டார்கள்.

ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹஜ்ரத் உஸ் மான் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய நன்கொடையால் நிரம்பவும் ஆதரிக்கப்பட்டார்கள். ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சமுகத்தில் வந்து நடந்த விஷயத்தைத் தெரிவித்த போது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உஸ் மான் றலியல்லாஹு அன்ஹு அவர்களை ஆசிர்வதித்தார்கள். உடனே ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஹஜ்

ரத் அனஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அவர்கள் பள்ளி வாசலுக்குச்சென்று அங்குள்ள முஹாஜிர், அன்ஸார், முதலிய ஸஹாபாக்களனைவர்களையும் அழைத்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தானே அங்கு போனார்கள். அச்சமயம் அவர்களுடைய முகமலர்ச்சி பிரகாசமுள்ள சந்திரனுக்கொப்பாயிருந்தது, ஹஜ்ரத் அனஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள்கூறுகிறார்கள்.

"நான் இச்சந்தர்ப்பத்தில் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய சமுகத்திலிருந்துவந்தேன். ஹஜ்ரத் அவர்களுடைய திருமுகத்தின்மீது வஹீயிறங்குதலின் அறிகுறிகள் தோன்றின. வஹீ இறங்கினவுடன் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் என்னிடம் "ஓ அனஸே! பாத்திமாவை அலியுடன் நிக்காஹ் செய்துகொடுக்கும்படி ஆண்டவன் எனக்குக் கட்டளை யிடுகிறான்" என்று திருவுளம் பற்றினார்கள். பின்னர் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வீட்டிற்குள் சென்று பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களை அழைத்து "பாத்திமாவே! அலி உன்னை நிக்காஹ்செய்துகொள்ள விரும்புகிறார்" என்று வினவினார்கள். இதைக்கேட்ட பாத்திமாநாயகி மௌனமாயிருந்துவிட்டார்கள். பிறகு ஹஜ்ரத் அவர்கள் பள்ளிவாசலுக்குப் போய்விட்டார்கள்."

இதினின்றுமே நிக்காவின்போது மணமகளுடைய மௌனமானது அவளுடைய சம்மதத்திற்கு ஒப்பாகுமென உலமாக்கள் திட்டம் செய்திருக்கிறார்கள். பள்ளியில் கூட வேண்டியவர்களெல்லோரும் கூடிவிட்டதற்குப்பின் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மிம்பர் மேடையிலேறி திருவுளமானார்கள், "ஓ முஹாஜிர் அன்ஸாரின் சபையோர்களே! சற்று முன் ஹஜ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் என்னிடத்திற்குவந்து அறிவித்துவிட்டுப்போனதாவது:-

'ஆண்டவன் நாலாவது வானலோகத்தின் பைத்துல் மஃமூர் என்ற சிங்காரப்பள்ளியில் மலாயிகத்துகளை கூடவைத்து முஹம்மதுடைய மகளாகிய பாத்திமாவை அபீதாலிபுடைய குமாரராகிய அலிக்கு நிக்காஹ் செய்துகொடுத்துவிட்டான் என்று' நான் சாட்சிகளுக்கு முன்பாக ஆரம்பமுதல் நிக்காவுடைய குத்பாவை ஓதி முடிக்கும்படி

கட்டளையிடப்பட்டிருக்கிறேன்'' என்றுகூறி குத்பாவை ஓதினார்கள். நிக்காஹ் முஹர்றம்மாதம் 21-ந் தேதியன்று நடைபெற்றது.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நிக்காவுடைய குத்பாவை ஓதத் தொடங்கியபோது ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஏதோ ஒருவேலையாகக் கடைத்தெருவுக்குச் சென்றிருந்தார்கள். ஆனால் குத்பா ஓதப்படுவதற்கு இடையிலேயேஅவர்கள் திரும்பி வந்ததைக்கண்ட ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்பார்த்து புன்னகையுடன் கேட்டதாவது:- நான் 400 மிஸ்கால் மஹர் (விவாகக்கட்டணம்) ஏற்படுத்தி பாத்திமாவைஉமக்கு நிக்காஹ் செய்து கொடுக்கிறேன். இது உமக்கு சம்மதமா? என்றார்கள்.

உடனே ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு ''நான் தங்கள் முடிவைசிரமேற்கொண்டு அங்கீகரிக்கிறேன்'' என பதிலளித்தார்கள்.

பின்னர் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்அவர்கள் துஆ ஓதினார்கள். மேலேகூறியபடி ஆண்டவன்கட்டளைக்கிணங்கஇந்தநிகாஹ் முதல் தடவையாக வானலோகத்தின்மேல் நடைபெற்றது. மீண்டும் ஹஜ்ரத் ஜிப்ரயீல் என்ற மலக்கு இறைவனுடைய உத்தரவை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடத்திற்கு கொண்டுவந்து சேர்ப்பித்ததும், ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஆண்டவனுடைய கட்டளையை நிறைவேற்றி வைப்பதில் தன்னுடைய புதல்வியை அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு விவாகஞ்செய்து கொடுத்து விட்டார்கள். இதற்குப்பிறகு ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தம்முடைய கைப்பிடியில் அடங்கக்கூடியஒருகுத்து திர்ஹம் நாணயங்களை எடுத்து அவற்றை ஹஜ்ரத் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கொடுத்து சொல்லியதாவது ''நீங்கள் போய் பாத்திமாவுடைய விவாக சீதனச் சாமான்களை விலைக்கு வாங்கிக்கொண்டு வாருங்கள்''. என்றார்கள்.

ஹஜ்ரத் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அந்த நாணயங்களை எண்ணிப்பார்த்தார்கள். அவை மொத்தம் 360 திர்ஹங்களாயிருந்தன.

ஹஜ்ரத் ஸல்மான் றலியல்லாஹு அன்ஹு ஹஜ்ரத் பிலால் றலியல்லாஹு அன்ஹு இவ்விருவர்களையும் ஹஜ்ரத் ஸல்லல்லா

ஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் சீதனச் சாமான்களைக் கொண்டு வருவதற்காக அனுப்பி வைத்தார்கள். பின்னர் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், பேரீத்தம் பழங்கள் நிறைந்த தாம்பள மொன்றை திருவித்து அதிலுள்ள பழங்களை தலைக்குக் கொஞ்சமாக எடுத்துக்கொள் ளும்படி சபையோர்களுக்குச் சொல்லவே, அவர்கள்தக்ஷணமே அவ் வாறெடுத்துக்கொண்டார்கள்.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்குக் கொடுக்கப் பட்ட சீதனச்சாமான்களின் விவரம் பின்வருமாறு:—(1) ஆட்டு ரோமங்க ளடைத்து தைக்கப்பட்ட எகிப்திய (நீலநிறம்) புடவையின் விரிப்பு ஒன்று. (2) தோல் விரிப்பு ஒன்று. (3) ஒன்றில் கஜூர் காயின் நார் அடைக்கப்பட்டதும், மற்றொன்றில் ஆட்டுரோமங்க ளடைக்கப்பட்டதுமான தலையணைகள்-2-(4) உரோமக் கம்பளம்—1 (5) தண்ணீர் வைப்பதற்குரிய மட்பாத்திரங்கள்—2 (6) துப்பட்டி கள் - 2 (7) பெரிய போர்வை - 1 (8) புயத்தில் கட்டும் கங்கணங்கள் - 2 (9) திருகை - 1 (10) நீர்துருத்தி - 1 (11) குவளை - 1 (12) கட்டில் - 1(13) முஸல்லா தொழுகை விரிப்பு 1 இந்த சீதன சாமான்களை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பார்வையிட்டு "நாயனே! இவற்றுள் விர்த்தியை யுண்டாக்கு வாயாக" என்று அருளினார்கள். சீதன சாமான்களை வாங்கியதற்குப் பின் மீதியாயிருந்த பணத்தை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்கள் உம்மெஸல்மா றலியல்லாஹு அன்ஹா (ஓர் ரிவா யத்தில் அனஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய தாயாராகிய உம்மெஸலீம்) இடத்தில் கொடுத்து அத்தர் முதலிய (மணமகளுக் குரிய) வாசனைத்திரவியங்களை வாங்கிக் கொள்ளும்படி சொன்னார்கள். நிக்காவின் போது ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்க ளின்வயது 21 பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர் களின் வயது 15. ஹிஜ்ரீ 2வது வருடக்கடைசியில் நிக்காஹ் முடிந் தது (அல்லாமா இப்னுஹஜ்ரு)

ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நிக்காஹ்வின் போது குதிரை ஏறவில்லை, பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர் கள் பல்லக்கு வாகனத்தை யடையவில்லை, மேளதாளமுங் கிடையாது, வேடிக்கை விநோதங்கள் முதலிய சேட்டைகளும் கிடையா.

ஹஸ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஹஸ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பேரீச்சம் பழமும் திராட்சையுங்கொண்டு வலீமாதாவது நடத்தினார்கள்.

ஹஸ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாற்கோது மையாற்செய்யப்பட்ட தல்யா என்ற தின்பண்டத்தையும் அத்துடன் தயாரித்து தம்முடைய தோழர்களுக்கு வழங்கினார்கள். எல்லோரும் வெகு சந்தோஷத்துடன் அவற்றைபுசித்தனர்.

தற்காலநடைபெறும் விவாக முறைகளை யனுசரித்து அப்புனித விவாகமும் நடத்தப்பட்டிருந்திருக்குமானல் பெண் மாப்பிள்ளை இரு தாத்தாருக்கும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவுசெய்ய நேரிட்டிருக்கும்; பாட்டுக் கச்சேரிகளும், தேவடியாளாட்டங்களும், வாண வேடிக்கைகளும், விகடதமாஷ்களும்,தாராளமாய்நடந்தேறியிருக்கும். ஆயிரக்கணக்கானரூபாய்கள்வீண்செலவிற்கு இரையாயிருக்கும். ஆனால் இருலோகத்திற்கும் பாதுஷாவாகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தம்முடைய உம்மத்தார் (கூட்டத்தார்) கலியாண காரியங்களில் வீண் செலவு செய்யவேண்டாம் என்பதை அவர்களுக்கு உணர்த்துவதற்காகவே தங்களுடைய புதல்வியின் நிக்காவை உள்ளதைக்கொண்டு முற்றிலும் சாதாரணவிதமாக நடத்தி வைத்தார்கள்.

சில சரிதாசிரியரால் எழுதப்படுகிறது:—நிக்காஹ் முடிந்த பிறகு ஹஸ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தங்களுடைய பரிசுத்த மனைவிமார்களுக்கு பாத்திமா றலியல் லாஹு அன்ஹா அவர்களின் விவாக கொண்டாட்டத்தின் பொருட்டாய் தப் என்னும் தப்பட்டத்தை (ஒரு பக்கமேளம்) கொட்டும்படி கட்டளையிட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பாத்திமா நாயகி அவர் களிடம் சென்று அவர்களைப் பார்த்தபோது பாத்திமா றலியல் லாஹு அன்ஹா அவர்கள் சஞ்சல முள்ளவர்களாகவும் சாதாரண துணிகளை அணிந்துக்கொண்டு மிக்க கூச்சமடைந்தவர்களாய் தலை குனிந்து உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களை இவ்வாறிருக்கக் கண்ட ஹஸ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மகள்பாத்

திமா ஒருக்கால் அலியாரின் எளிமையை சிந்தித்து தன்னால் துயரமடைகிறார்களோ என்றெண்ணி பாத்திமா நாயகியைப்பார்த்து திருவுளமானார்கள்:-

"கண்ணே! விசனப்படாதே நம்முடைய சந்ததியார்களில் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தவிர வேறொருவரும் உனக்கு கணவனாவதற்கு தகுதியுள்ள வராகமாட்டார்கள். ஆகையால் நான் உன்னை அவருக்கே கட்டிக்கொடுத்தேன்; அலி ஏழையாயிருப்பினும் பாதகமில்லை. ஏனெனில் இந்த உலக வறுமையானது சொற்ப நாளைக்குரியதேயாகும். மறுமையின் சுகானுபவங்களுக்காக நாம் விருப்பங்கொள்ளவேண்டும். மறுமைக்குரிய பொக்கிஷங்கள் யாவும் உன்னுடைய சொத்து சுதந்தரங்களென்று எண்ணிக்கொள். இந்நிலைமையில் நீ கவலைப்படுவானேன்? அழியும் உலகத்தில் எளிமைக்காக துக்கப்படுதல் வீணல்லவோ?" என்றார்கள்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய இவ்வரிய உபதேசமொழிகள் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு மிகுந்த ஆறுதலையும் தேற்றத்தையும் உண்டுபண்ணின. இறைவன் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்குப் பொறுமையும் நன்றிக்குரிய நல்லெண்ணத்தையும் அருள் புரிந்திருந்தான்.

தடையின்றி இம்மையிலுள்ள எளிமையின் கஷ்டங்களை பொறுமையுடன் சகித்துக்கொண்டு குறைகூறாது வாழ்ந்துள்ள அப்புனித ஆத்துமாக்களே மறுமையிலுள்ள வெகுமதிகளுக்கு உடையவர்களாவர்கள். நிக்காஹ்முடிந்த 6, 7-மாதங்களுக்குப் பின்னர், ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் மாமனார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய ஆலோசனைக்கிணங்க ஹாரிஸாபின் நுஃமான் அவர்களுக்குச் சொந்தமான ஓர் சிறிய வீட்டை வாடகைக்கு வாங்கிக்கொண்டார்கள், ஆனால் ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள், தாம் அப்புதிய வீட்டிற்குக்குடிப் போவதைப்பற்றி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடத்தில் எவ்வாறு அனுமதிபெற்று பிரிவது என்ற விஷயத்தைப்பற்றி தனக்குள் ஆலோசித்துக் கொண்டேவந்தார்கள். ஒரு வார்த்தையாவது இதைப்பற்றி ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடத்தில் வெளியிடவேயில்லை.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தனிமையாகச் சந்திக்கும்போதெல்லாம் "ஓ அலியே! உமக்கு மங்களமாகுக, உம்முடைய மனைவி மிகவும் நல்லவள்" என்று மொழிவார்கள்.

ஒரு நாள் அலிறலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சகோதரர், ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய சமுகத்திற்குவந்து "யாறசூலல்லா! நாங்கள் இப்போதும் தங்களிடம் அநுமதி பெற்றுக்கொண்டு வேறுவீட்டுக்குச்செல்ல விரும்புகிறோம்" என்றுகேட்டார்கள்.

சில சரித்திராசிரியர்கள் எழுதியிருப்பதாவது:-ஒருநாள் அலிறலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சகோதராராகிய அகீல் என்பவர், தம்முடைய சகோதரரிடத்திற்கு வந்து "நபிகள் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தங்கள் புதல்வியார் புறப்பட்டுச் செல்வதற்கு அனுமதி கொடுக்கவேண்டும் என நாம் விரும்புகிறோம்" என்றார்கள். அதற்கு அலிறலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறிய பதிலாவது:-"என்னுடைய விருப்பமும் அதுவே. ஆனால் இதைப்பற்றி ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளலாமென்றால் என் மனம் துணியவில்லை" என்றார்கள்.

இதைக்கேட்ட அகீல் ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கையைப்பிடித்துக்கொண்டு றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்அவர்களிடத்திற்குச்சென்றார்கள். சென்றதும், ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய வெள்ளாட்டியாகிய உம்மெ அய்மன் றலியல்லாஹு அன்ஹாவைக் கண்டு பேசினார்கள். அந்த வெள்ளாட்டியார் தம்முடைய யோசனையைப் பின்வருமாறு அவர்களுக்கு வெளியிட்டார்:—

"நீங்கள் முதலில் புனித பீபீ மார்கள் (ஹஜ்ரத் அவர்களுடைய மனைவிமார்கள்) இடத்திற்குச்சென்று அவர்களிடம் இதைப்பற்றி ஆலோசனை கேட்டல் மேலாகும்; ஏனெனில் இத்தகைய விஷயங்களில் ஆடவர்களைக்காட்டிலும் பெண்களுடைய யோசனையே அனுகூலமானது. பின்னர் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் கேட்கலாம்" என்று சொன்னார்கள்.

அதன்படி உம்மெஸல்மா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் இதர பீவிமார்களுடன் ஆயிஷா ஸித்தீகா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய வீட்டிற்கு வந்தார்கள். அப்போது ஹஜ்ரத் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம்அவர்களும் வீட்டிலிருந்தார்கள். பலபேச்சு களைப் பேசிக் கொண்டிருப்பதற் கிடையிலேயே ஹஜ்ரத் கதீஜா றலி யல்லாஹு அன்ஹா அவர்களுடைய விஷயமும் வந்தது. அதாவது அவர்களின் அரிய ஒழுக்கங்களை நினைக்க நேரிட்டது. "கதீஜா றலி யல்லாஹு அன்ஹா அவர்கள் உயிரோடிருந்திருப்பார்களானல் பாத் திமா நாயகியுடைய விவாகத்தால் அவர்களுக்கு எதுமட்டில் சந்தோஷ மேற்பட்டிருக்கும்? யாம் எந்தக்காரியத்திற்காகவும் கவலைப்பட்டிருக்க மாட்டோம்; கலியாண ஜனங்களுடன்நாமும்சேர்ந்தவர்களாய்ப்போயி ருப்போம்; இப்போது அலிறலியல்லாஹு அன்ஹு நம்மிடம் அனு மதி பெற்று பாத்திமாவை அழைத்துக்கொண்டு போகவந்திருக் கிறார்கள். நாங்களோ அவருக்குச் சந்தோஷமாய் அனுப்பிவைக்கத் தயாராயிருக்கின்றோம். தங்கள் உத்தரவொன்றையே எதிர் பார்க்கப் படுகின்றது" என்றார்கள்.

உம்முஸல்மா றலியல்லாஹு அன்ஹு வால்றசூலுல்லாஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கதீஜதுல்குப்ரா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய பெயரைக் கேட்டதும் அவர்களுடைய திருக் கண்களில் கண்ணீர் ததும்பியது. அப்போது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவுளமானதாவது:—"கதீஜாவுக்கு நிகர்எங்கே? அநேகர் என்னுடைய வார்த்தைகளைப் புறக்கணித்துக் கொண்டிருந்த காலத்தில் என்னுடைய வார்த்தைகள் மெய்யென உணர்ந்து என்னிடம் உண்மை அபிமானம் கொண்டவரன்றோ கதீஜா? அவர் தம்முடைய எல்லாசொத்து சுதந்தரங்களையும் ஆண்டவன்பால் தியாகஞ் செய்துவிட்டவர்; இஸ்லாத்தை ஆதரித்தவர் ஆவார்" என் றார்கள். உம்மெஸல்மா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் முறையிடு கிறார்கள்:— "ஓ அல்லாவுடைய ஹபீபே! தாங்கள் மொழிந்துள்ள வார்த்தைகள் யாவும் உண்மையே. சர்வ வல்லமையுள்ள இறைவன் எங்களையும் அவர்களோடு ஸ்வர்க்கத்தைச் சந்திக்க அருள்புரிவானாக. இப்போது உங்கள் மருமகப் பிள்ளையும் சகோதாருமாகிய அலி றலி யல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களிடம் அனுமதி பெறுவதற்கு வந்திருக்கிறார். தாங்கள் அவருடைய மனைவியாரை அவருடன் அனுப்பிவைப்பீர்களாக" என்றார்கள்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹுஅலைஹிவஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:— "ஓ உம்மெஸல்மா! அலியோ இதைப்பற்றி என்னிடங்கேட்கவில்லையே"

உம்மெஸல்மா:— ஓ அல்லாவுடைய றசூலே! அலி றலியல்லாஹுஅன்ஹு வெட்கமுள்ளவர்; கீழ்ப்படிந்தவர். தங்களுக்குமுன் அவர் தம்முடைய வேண்டுகோளை நாவால் எடுத்துரைக்க முடியாத நிலைமையிலிருந்திருக்கிறார்.

நபிபெருமானார்:— "சரி நீங்கள்போய் அலியை அழைத்துக் கொண்டு வாருங்கள்" என்றார்கள்.

உம்மெஸல்மா உடனேபோய் (வெளியில் நின்றுகொண்டிருந்த) அலி றலியல்லாஹுஅன்ஹு அவர்களை உள்ளே அழைத்துச்சென்றார்கள். அப்போது அங்கிருந்த பெண்டிர் அனைவரும் ஒதுங்கிக் கொண்டனர். பின்பு ஹஜ்ரத் ஸல்லல்லாஹுஅலைஹிவஸல்லம் அவர்கள் ஹஜ்ரத் அலி றலியல்லாஹுஅன்ஹு அவர்களை நோக்கி, "அலியே! என்ன உம்முடைய மனைவியாரை அழைத்துக் கொண்டுபோக விரும்புகிறீரா?" என்றார்கள். அதற்கு ஹஜ்ரத் அலி றலியல்லாஹுஅன்ஹு அவர்கள், "ஓ அல்லாவுடைய றசூலே! ஆம் அவ்வாறே விரும்புகிறேன்" என்றார்கள். ஹஜ்ரத் ஸல்லல்லாஹுஅலைஹிவஸல்லம் அவர்கள் அலியவர்களிடம் சில திர்ஹ நாணயங்களைக் கொடுத்து கூஷ்பூஹரே பன்னீர் முதலிய தின்பண்டங்களை வாங்கிவரும்படி கூறினார்கள். ஹஜ்ரத் அலி றலியல்லாஹுஅன்ஹு அவர்கள் கடைத்தெருவுக்குப் புறப்பட்டுப்போனார்கள். ஹஜ்ரத் ஸல்லல்லாஹுஅலைஹிவஸல்லம் அவர்களோ பாத்திமா றலியல்லாஹுஅன்ஹா அவர்களின் புறப்பாட்டிற்குரிய ஏற்பாடுகளில் அமர்ந்தார்கள்.

ஹஜ்ரத் அலி றலியல்லாஹுஅன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள்:—நான் 5-திர்ஹங்களுக்கு நெய்வாங்கினேன். ஒரு திர்ஹத்திற்கு பன்னீர், 4-திர்ஹத்திற்கு கூஷ்பூஹரே. இவைகளைக்கொண்டுவந்து றசூலுல்லா ஸல்லல்லாஹுஅலைஹிவஸல்லம் அவர்களுக்கு முன்வைத்தேன். ஹஜ்ரத் ஸல்லல்லாஹுஅலைஹிவஸல்லம் அவர்கள் சாப்பாட்டுப் புடவை (தஸ்தர்கான்) யை விரித்து அதன்பேரில் அவற்றை ஜோடித்துவைத்தார்கள். ரொட்டியை நெய்யிற் பிசைந்து செய்துள்ள ஜீஸ் என்னும் மாலீதாவும் தயார்செய்து வைக்கப்பட்டது.

பிறகு எனக்கு உத்தரவு கொடுக்கப்பட்டதாவது- "அலியே! வெளியிற்போய் அங்கு தென்படும் முஸ்லிம்களை அழைத்துக்கொண்டுவாருங்கள்'' என்றார்கள். நான் அதுபோல் அழைத்தேன். முஹாஜீர் அன்ஸாரவர்களின் கூட்டமொன்றுவந்தது. அக்கூட்டத்தார்களை நாயகம் அவர்கள் அன்போடு வரவேற்றுப் பசியாறும்படி அருளினார்கள். அதுபோல் அவர்கள் அப்பண்டங்களைப் புசித்துப் போயினர்.

பிறகு ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மண்குவளையொன்றைக்கேட்டுவாங்கி அதுநிறைய ஜீஸ் என்னும்மலீதாவை நிரப்பி இது பாத்திமாவுடையதும் அவாதுகணவனினதும் பங்கு எனச் சொல்லிக்கொடுத்துப் பின்னர் தங்களுடைய பீவிமார்களுக்குக் கொடுத்தார்கள்.

இதன்பிறகு, ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "ஓ உம்முஸல்மாவே! பாத்திமாவை அழைத்துக் கொண்டுவாரும்'' என்றார்கள். அவர்கள் அவ்வாறே அழைத்துக்கொண்டு வந்தார்கள். அவ்வேளையில், பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய முகத்தின்மீது வியர்வை கண்டிருந்தது. அவர்கள் மிகவும் மெதுவாக அடியெடுத்துவைத்துக்கொண்டு நாயகத்தின் சமீபத்தில் வந்தார்கள். அப்போது நாயகம் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பாத்திமா நாயகியுடைய முகமூடியாயிருந்த துப்பட்டியை விலக்கித் தங்களுடைய மார்பின் இடப்பக்கத்தில் ஹஜ்ரத் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய தலையை ஒத்திக்கொண்டார்கள்; நெற்றியின் மத்தியில் முத்தமிட்டார்கள். ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கைகளில் தங்களுடைய கைகளைக்கோர்த்து (முஸாபஹாச்செய்து) திருவுளமானதாவது:-"ஓ அலியே! நபியுடைய குமாரத்தி, உமக்கு மங்களமாகுக, ஓ பாத்திமாவே! உம்முடைய கணவர் மிகவும் நல்லவர். இனி நீங்கள் இருவரும் உங்கள் வீட்டிற்குப் போகக்கடவீர்கள். கொடுக்கவேண்டிய விஷயத்தில் அல்லாவுடைய "நபியிடம் என்ன உண்டென்பதை எல்லோரும் நன்கறிவர்'' என அருளினார்கள்.

தடையின்றி ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் விலைமதிக்கக்கூடாத உபதேச பொக்கிஷத்தைத் தங்கள் கண்மணிக்கு அருள்புரிந்தார்கள். அவர்கள் பாத்திமா; அவர்களுக்கு

நாயகி கணவனுக்குச் செய்யவேண்டிய கடமைகள் இன்னி ன்னவை என விவரமாய்ப் போதித்ததற்கிணங்கவே கண வன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றியும் ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குச் செவ்வனே விளக்கிக் கூறிவிட்டார்கள். இம்மை மறுமைக்குரிய செல்வத்தைக் கொண்டுதமதருமைப்புதல்வியாருக்கும் மருமகனாருக்கும் போதித்து ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இவர்களைப் பயண மனுப்பிவைப்பதற்காக அவர்களுடன் வாயிற்படிக்கு வந்ததும் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய இரண்டு புயங்களையும் பிடித்துக்கொண்டு அவர்கள் அபிவிர்த்திக்கும் செழிப்புக்கு முள்ள துவாச் செய்தார்கள். இதற்குப் பின்னரே ஹஜ்ரத் அலி றலியல் லாஹு அன்ஹு அவர்கள் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடன் ஒட்டகத்தின் மீதேறிப் பயணமானார்கள். அவ்வொட்ட கத்தின் கடிவாளத்தை ஹஜ்ரத் ஸல்மான் பார்ஸீ றலியல்லாஹு அன்ஹா அவர்கள் தம்கையில் பற்றிக்கொண்டு போனார்கள்.

அஸ்மாபின் தெஅமீஸ் றலியல்லாஹு அன்ஹா கூறுகிறார் கள்:-ஸல்மா றலியல்லாஹு அன்ஹா அச்சமயம் கேட்டுக் கொண்ட தாவது:-"யாறசூலல்லா! முதன் முதலாகத்தனியே இருக்கும்படியான சிறுமிகளுடன் என்னைப்போன்ற கிழங்கட்டுகளிருந்தால் வெகு ஒத்தாசையாகும்; ஆகையால் நான் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடன் போகிறேன்" என்றார்கள்.

இதைக்கேட்ட ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மிக்க சந்தோஷமடைந்து அவர்களுக்காக ஆண்டவன் நற் கூலியளிக்கும்படி துவாச்செய்து அனுப்பினார்கள்.

ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு மொழிகிறார்கள்:- நாங்கள் புறப்பட்டுச் சென்றதற்கு மறுநாள் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எங்களிடத்திற்கு விஜயஞ்செய்தார்கள். அவர்கள் வந்த சமயம் நானும் பாத்திமாவும் தலையணையைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தோம்; ஹஜ்ரத் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய குரலோசையைக் கேட்டதும் நாங்கள் எழுந்து நிற்க எத்தனித்தோம்; ஆனால் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் 'வேண்டாம், நீங்கள் இருந்தபடியே உட்கார்ந்திருங்கள்' எனக்கூறி அவர்களும்

எங்களுடைய தலைமாட்டண்டை வந்து உட்கார்ந்தார்கள். பின்னர் அவர்கள் தங்களுடைய முபாரக்கான கால்களை எங்களிருவர்களுக்குமிடை நீட்டவே நான் வலக் காலையும் பாத்திமா இடக்காலையுமாகத் தூக்கி எங்கள் மார்பின் மீது வைத்துக் கொண்டோம்; கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்த பின்னர் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவுக்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரும்படியாகக் கட்டளையிட்டார்கள். எனவே, அவர் ஒரு மண் குவளையில் தண்ணீர் கொண்டுவந்து ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் கொடுத்தார்கள். தாங்கள் கொஞ்சம் தண்ணீரைக் கொட்டிவிட்டு மீந்த தண்ணீரின் மீது துவா ஓதிக்கொடுத்து, "ஓ அலியே! இந்தத் தண்ணீரிற் கொஞ்சம் தண்ணீரைமட்டும் மிச்சம் விட்டு மீதியைக் குடித்துவிடுங்கள் என்றார்கள். நான் அவ்வண்ணமே செய்தேன். மீதியாயிருந்த தண்ணீரை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் என்னுடைய முகத்தின் பேரிலும் மார்பின்மீதும் தெளித்து எனக்காக துவாச்செய்தார்கள்.

மறுதடவையும் தண்ணீரைத் தருவித்து அதனைப் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்காக அதே விதமாக உபயோகிக்கச் செய்து துவாச் செய்தார்கள்.

பிறகு பாத்திமா நாயகியுடன் கூடப்போயிருந்த ஸல்மா றலியல்லாஹு அன்ஹா அவர்களை நோக்கி ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம், அவர்கள் "நீர் இப்போது இங்கே எதற்காகத் தங்கவேண்டும்?" என்றுகேட்டார்கள். அதற்கு ஸல்மா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் "ஓ அல்லாவுடைய றசூலே! ஒருநாள் உம்முல் முமினீன் கதீஜதுல் குப்ரா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் அவர்களது வாழ்நாளின் கடைசிக்காலத்தில் அழுதுகொண்டிருப்பதைக்கண்டநான் ஆச்சரியமடைந்து அவர்களிடம், 'ஓ உம்முல்முமினீன் அவர்களே! தாங்கள் அழுவானேன்? தாங்களோ இருலோக இரட்சகரின் மனைவியாவீர்கள். தங்கள் நன்றிவிசுவாசத்தைப் பற்றி தங்கள்கணவரான எங்கள் நபிகள்நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தாமேபாராட்டுகிறார்கள். அப்படியிருக்கத் தாங்கள் ஏன் துக்கப்படவேண்டும்?,,என்றுவினவினேன். அதற்குஉம்முல்முமினீன்அவர்கள் "மணமகனுடைய வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போகப்படும் மணமகளுக்கு

ஆரம்பத்தில்சிறிதுகாலம் வரையில் புத்திசாலியும் தக்க அனுபோகமு முள்ள பெண்களின் ஒத்தாசை அவசியமாகிறது. பாத்திமா றலியல் லாஹூ அன்ஹாவுக்குச் சிறுபிராயம். அவரது கலியாணமானதற்குப் பின்னர்அவரோடு கூடப்போயிருக்கத் தக்க புத்திசாலியான ஸ்திரீகள் (எனக்குப்பின்னால்)அவருடைய ஒத்தாசைக்குக் கிடைப்பாளென்பதை எண்ணி அழுகிறேன்' என்றூர்கள். நான் (ஸல்மா றலியல்லாஹூ அன்ஹா) 'ஓ உம்முல் மூமினீன் அவர்களே! நான் அது காலம் வரையில் ஜீவித்திருப்பேனானால் இன்ஷாஅல்லா அத்தகைய ஊழியத் தை, என்சிரமேற்கொள்ளுவேன் என்பதற்குத் தங்களிடம் வாக்குத் தத்தம் செய்கின்றேன்' எனச்சொல்லியிருந்தேன். நான் செய்துள்ள வாக்குத் தத்தத்தை நிறைவேற்றி வைக்கத் தக்க சமயம் வாய்த்ததற் காக நான் இறைவனுக்கு நன்றிபாராட்டுகின்றேன்'' என்றூர்கள்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்கள் இதைக் கேட்டவுடன் ஸல்மா றலியல்லாஹூ அன்ஹா அவர்களுக்காக இறை வனது ஸந்நிதானத்தில் துவாக்கேட்டார்கள். பிறகு தாங்கள் திருவுள மானதாவது, "வீட்டின் சகல வேலைகளை அதாவது ரொட்டி சுடுதல், மாவரைத்தல், வீட்டைக் கூட்டிச் சுத்தம் செய்தல் முதலிய காரியங் களைப் பாத்திமா தன் கைப்படச் செய்யவேண்டும்; வீட்டிற்குரிய பதார்த்தங்களை வெளியிற்சென்று வாங்கி வருதல், ஒட்டகத்தை மேய்த்தல் முதலிய அலுவல்களை அலி றலியல்லாஹூ அன்ஹூ அல்லது அவரது தாயாராகிய பாத்திமாபின் அஸத் றலியல்லாஹூ அன்ஹா கவனித்துக் கொள்ள வேண்டும்'' என்றூர்கள்.

ஹஜ்ரத் அலிறலியல்லாஹூ அன்ஹூ அவர்களுடைய தாயார், ஹஜ்ரத் அலிறலியல்லாஹூ அன்ஹூ அவர்களின் நிக்காஹ் முடிந்த $7\frac{1}{2}$ மாதங்களுச்குப்பின் காலஞ் சென்றூர்கள்.

அலி றலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் குடியிருந்த வீடு தொலை தூரத்திலிருந்தபடியால் ஹஜ்ரத் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அடிக்கடி அங்கேபோக வரக் கஷ்டமேற்பட் டது. ஒருநாள் தாங்கள் (ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம்) பாத் திமா றலியல்லாஹூ அன்ஹாவிடம் "நான் உங்களை என்வீட்டிற்கரு கில் குடியிருக்கச் செய்ய விரும்புகின்றேன்'' என்றூர்கள்.

அதற்குப்பாத்திமா றலியல்லாஹூ அன்ஹா, "தங்களுக்கு அக்கம் பக்கத்தில் ஹாரிஸா றலியல்லாஹூ அன்ஹா அவர்களுக்குச்சொந்த

மான அநேக வீடுகள் இருக்கின்றன; தாங்கள் மேற்படியாருக்குச் சொல்லும் பட்சத்தில் அவர் எந்த வீட்டையாவது எங்களுக்காகக் காலிசெய்து கொடுப்பார்'' என்று கூறினார்கள். அதற்கு ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ''ஹாரிஸா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் எனக்காகவேண்டி எண்ணிறந்த வீடுகளை இது காறும் காலிசெய்து கொடுத்திருக்கிறார்கள். இனி இதைப்பற்றி அவரிடம் கேட்பதற்கு எனக்கு வெட்கமாயிருக்கிறது'' என்றார்கள். இச்செய்தி எப்படியோ ஹாரிஸா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு எட்டி விடவே அவர்கள் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய சமுகத்தில் வந்து ''ஓ அல்லாவுடைய ரசூலே! தாங்கள் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களைத் தங்களுக்கருகில் குடியிருக்கச் செய்வதற்கு விருப்பங் கொண்டிருப்பதாக நான் கேள்வியுற்றேன். ஆகையால் இதோ தங்களுக்கருகிலுள்ள அந்த வீட்டைக் காலிசெய்து விடுகின்றேன். நபி நாயகமே! அல்லாவின்பேரிலும் அவனுடைய றசூலின்பேரிலும் சத்தியமாகச் சொல்லுகிறேன்: என்னுடைய உடல், பொருள், ஆவி யாவும் அல்லா றசூலின் தியாகத்திற்குரியதேயாகும்; தங்களுக்கு உபயோகப்படக் கூடிய சொத்தே எனக்குப் பிரியமானது'' என்றார்கள்.

அவ்வாறே ஹாரிஸ் றலியல்லாஹு அன்ஹா அவர்கள் அவ்வீட்டை காலிசெய்து விட்டார்கள். அதில் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா குடிப்புகுந்தனர்.

தற்காலம் நப்வி பள்ளிவாசலில் புஸ்தானெ பாத்திமா என்னும் பெயர் கொண்டு அமைந்துள்ள இடத்திலேயே அந்தவீடு இருந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. ஓர் ரிவாயத்தில் வந்திருப்பதாவது:-

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ரௌலா ஷரீபுக்கு வடபுறத்தில் பாத்திமாநாயகி அடக்கமான ஸ்தலம் என்று சொல்லப்பட்டுவரும் இடத்திலேயே அந்தவீடு நிலை கொண்டிருந்தது.

முஸ்லிம்களே! பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களின் நிக்காஹ் காரியங்களுக்கும், அவர்கள் தம்பெற்றோர் வீட்டை விட்டுக் கணவன் வீட்டுக்குச் செல்லும்போது ஏற்பட்டுள்ள நிகழ்ச்சிகளுக்கும் நகரில் தற்காலம் நடைபெற்று வரும் நிக்காஹ் காரியங்களின் நிலைமையைக் கவனியுங்கள். இப்போது பெண்மணிகளுடைய விவாகங்

கள் எத்தகைய முறையில் நடைபெறுகின்றன? இப்போதைய பெற்றோரும் அவ்வாறு நடந்து கொள்ளுகிறார்களா? இம்மட்டில் சாதாரணமாகவே நிக்காஹ் காரியங்கள் முடிந்து மணமகளைப் பெற்றோர் தங்கள் வீட்டிலிருந்து முதன் முதலாக மருமகனுடைய வீட்டிற்கு அனுப்பி வைக்கவில்லையே! தங்கள் பிள்ளை புருஷன் வீட்டிற்குப் போய் தன் கைப்படவே சமைக்கவும், மாவரைக்கவும், புடவைகளைத் தைக்கவும், கிழிந்த உடைகளைப் பழுதுபார்க்கவும் வேண்டும். இத்தகைய சிரமங்கள் அப்பிள்ளைக்கு அதிகமாய் ஏற்படக் கூடாதென்பதே அவர்களுடைய எண்ணமன்றோ? நபிகள் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தமது புதல்வியார், அவாது கணவருக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டும் என்ற உபதேச பொக்கிஷத்தையும் சீதனமாகக் கொடுத்தருளியதுபோல் இப்போதுள்ள பெற்றோர் மணமகளாகும் தம்புதல்விகளுக்கு நல்லொழுக்க உபதேசங்களைச் செய்தனுப்புவது கடமை என நினைக்கின்றார்களா? ஒருபோதுமில்லையே! ஓ நம் முஸ்லிம் சகோதரர்களே! சிந்தியுங்கள்! நாம் முஸ்லிம்கள் எனப்பாராட்டிக் கொள்ளுகின்றோம்; இஸ்லாத்தை நமது மதமென அங்கீகரிக்கின்றோம்; நபி பெருமானாரின்சுன்னத்துக் கொள்கைகளுக்கு உட்படுகின்றோம்; அவர்களது சேவையை நம்முடைய அரும்பெரும் பாக்கியம் என அறிகிறோம். அப்படியிருந்தும் நம் நபிபெருமானார் அவர்களுடைய திரு ஆச்சாரங்களைப் பின்பற்றி நடப்பதில் மட்டும் நமக்குக் குறை ஏற்பட்டு விடுகின்றதோ? ஆகையால் நாம் நம் பெண் மணிகளின் நிக்காஹ் காரியங்களைப் பாத்திமா நாயகியவர்களுடைய நிக்காஹ் காரியங்களுக் கிணங்கிய துறைகளில் நிறைவேற்றி வைத்தல் அவசியமாகும்.

நம் பெண்மணிகளுக்கு விலையுயர்ந்த ஆபரணங்களையும் எண்ணிறந்த சீதனச் சாமான்களையும் கொடுப்பதைக் காட்டிலும் அவர்கள் தங்கள் கணவர்களிடத்தில் எவ்வாறு கீழ்படிந்து நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கும் கணவனுக்கும் மனைவிக்கு முள்ள சம்பந்தங்களும் உரிமைகளும் இன்னவை என்பதற்கும் தங்கள் பெண்மணிகளுக்குப் போதியவாறு போதனைகளைப் புகட்டுவதே மேலாகும். இதன்படியே விவாகமான தம் புதல்வரைத் தனியே அழைக்க விரும்புவோரும், அம்மணமகளுடைய குணாதிசயங்களைப்பற்றியும் சௌந்தரியத்தைப் பற்றியும் மணமகனாகிய தம் புதல்வனிடத்தில் கூறி வந்து எவ்விதத்திலும், அவனுடைய மனதில் தன் மனைவியினிடத்துப்

பிரியம் உண்டாகும்படி செய்ய வேண்டும். இது போலவே, பெண்ணை அழைக்கும் பெற்றோரும் அப்பெண் தனது கணவன் பேரில் அன்பு வைக்கும்படியாக அக்கணவனுடைய மேன்மை லக்ஷணங்களைப்பற்றி அப்பெண்ணுக்கு உணர்த்தல் கட்டாயமாகும்.

தங்கள் புதல்விகளுடைய விவாகக் காரியங்களுக்காக ஆயிரக் கணக்கான ரூபாய்களைக் கடனாக வாங்கிச் சீதனச் சாமான்களை தயாரித்து பலவிதநேர்த்தியான சாப்பாடுகளைச் சமைத்து விருந்துநடத்தி மேலே கூறி வந்தபடி பாட்டுக்கச்சேரி முதலிய வீண் செலவுகளைச் செய்து என்றைக்கும் கடனாளிகளாகப் போகிறவர்களும், இரண்டு நாள் கூற்றுக்காக மீசைச்சிரைக்கப்பட்டது என்னும் பழமொழிக்கேற்ப,நான்கு நாள் விவாகக் கொண்டாட்டத்திற்காக சதா திண்டாட்டப் படுபவர்களும், பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய விவாகத்தின் இலேசானபோக்கைக் கவனித்து அதன்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்குப் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய திரு விவாகமே போதிய போதனையாகும்.

முஸ்லிம் சகோதரர்களே! சகோதரிகளே! எவ்வளவு பரிதபிக்கத்தக்க விஷயம்! என்னவிந்தை! இருலோகத்திற்கும் பாதுஷாவாகிய நபிகள் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய அந்தஸ்துக்கு நிகராக நம்முடைய அந்தஸ்தைப் பற்றிப்பேசலாமா? ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு உலகப்பொருளாசை அறவே கிடையா தாயினும் தங்களுடைய ஸஹாபாக்களில் அநேகர் திரவியம் படைத்த சீமான்களா யிருந்தமையால் அவர்கள் எந்நேரமும் தங்கள் செல்வத்தை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்காக தியாகஞ் செய்யக் காத்திருந்தார்கள். செல்வமுள்ள ஸஹாபாக்களை யோசிக்குமிடத்து முதலாவதாக உஸ்மான்கனி றலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பற்றியே சிந்திப்போம். ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மட்டும் தங்கள் அருமைப் புதல்வியாரின் விவாகத்தைச் சிறப்பாக நடத்த எண்ணங்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்திருக்குமானால் உஸ்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மட்டுமே அக்காரியத்திற்காக எதுமட்டில் தன் பொருளைவாரி இறைத்திருப்பார்கள் என்பதை இப்போது நாம் உத்தேசிக்கவும் முடியாமலிருந்திருக்கும். இதுசாத்திய மில்லாத காரியமல்லவே? ஏனென்றால் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவ

ஸல்லம் அவர்களுக்குத் தங்களுடைய உம்மத்தார்கள் தன்னைப்பின் பற்றி நடக்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே எல்லாக் காரியங்களிலும் கஷ்டமின்மை, சாதாரணநடை முதலிய அரிய ஒழுக்கங்களின் நமூனு (மாதிரி) வை நிலைநிறுத்த வேண்டியதா யிருந்தது. என்னுடைய உம்மத்தார்கள் கலியாணக் காரியங்களை நிறைவேற்று வார்கள். அப்போது அவர்களுக்குச் சீதனங்கொடுக்க நேரிடுமே, நானே என்னுடைய புதல்வியின் விவாகத்தில் ஏராளமாக வீணில் செலவழித்து விடுவேனுனல் அந்த எளிய உம்மத்தாரின் நிலைமை எப் படியாகும் என்ற கவலை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு மேலிட்டிருந்தது. "றசூலுல்லாவுடைய உண்மையான பின்பற்றுவோரெனத்தம்மைத்தாமே சாதித்துக்கொள்பவர்கள் இவ்வி ஷயங்களில் பின்பற்றுது இருந்துவருகிறார்களோ? அவர்களைப் பற்றி என்னவென்று சொல்வது? நாவினுல் மட்டும் நாங்கள் நபிபெருமா னைப் பின் பற்றுகிறேம் எனச்சொல்வதொன்றே அவர்கள் அடை யும் பெருமையோ வென்று கேட்க வேண்டியதாகின்றது. ஹஜ்ரத் அவர்களைப் பின்பற்றி நடக்கும் விஷயங்களை ஒரு புறம்வைத்துக் கவ னிப்போமானுலும் நம்முடைய உலக வாழ்க்கைக்கே என்னபலன் ஏற் படுகிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ளக் கடவோம். கலியாணத் திற்காக நாம் வாங்கும் கடனுக்கு அசாத்திய வட்டி ஏற்பட்டுப் போக வே நாம் கடனை உளவடைக்க முடியாமல் கடைசியாக நம்முடைய சொத்து சுதந்தரங்களையும் அக்கடனுக்காகப் பல விதத்திலும் நாசப் படுத்திக் கொள்ளுகிறேம். உலகப் பகட்டுக்காக வேண்டியல்லவோ நம்முடைய ஐஸ்வரியத்தைப் பாழாக்கிக் கொள்ளுகிறேம்? பின்பு நம்மு டைய வாழ்க்கை எத்தகைய சீர்கேட்டை யடைந்து விடுகிறது என் பதைக் கவனித்தீர்களா? குறித்த சிலமணி நேரங்களுக்காகவோ அல் லது சில நாட்களுக்காகவோ சந்தோஷப்படுவதற்காக நாம் நம்மு டைய வாழ்நாள் முழுவதும் நமக்கு பயனை யளிக்கும்படியான சொத்தை மன உல்லாசத்திற்குத் தியாகஞ்செய்து விட்டோம். ஏன் நாம் நம்முடைய கெட்டபழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டுவிட் டோம்? அத்துர்ப்பழக்கங்களின் விலங்குகளும் சங்கிலிகளுமே நம்மை நெருக்கி இறுக்கிக் கொண்டன; வழக்கமான் பழக்க மென்பதாக நாம் அதனை அனுசரிக்கப்போக நம்முடைய மதியீனமானது நம்மைப் போதிய சிட்சைக்குள்ளாக்கி விட்டது. மார்க்கத்திற்குக்கூடாதகாரியங்

களைச் செய்யவும் இஸ்லாத்தின் உண்மையான கொள்கை கோட்பாடு களை யனுசரியாமல் நடப்பவர்களைப் பின்பற்றவும் நம்முடைய உண்மை வழிகாட்டியாகிய முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய படிப்பினைகளைப் புறக்கணித்துப் போடவும் நாம் உடன்பட்டு விட்டோம் என்று சொல்லத்தகும்.

இதனின்றும் நாம்முகம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய உம்மத்தார்களென்று நம்மை நாவைக்கொண்டு பாராட்டிக்கொள்ளுகிறோமே யொழிய அவர்களைப்பின்பற்றி நடக்கும்விஷயங்களில் நம்முடைய துர்ப்பழக்கங்களுக்கே உட்பட்டிருக்கிறோமென்பது அறியக்கிடக்கின்றது. அவ்வாறு நாம் நம்முடைய துர்ப்பழக்கங்களுக்கு எப்படி உட்பட்டுவிடுகிறோம் என்று கேட்டால், முதலாவது நம்முடைய ஈமானின் வலிமை குன்றிப்போய்விட்டது. நம்முடைய கல்புகள் ஈமானுடைய ஒளியை அடைவதற்கு தகுதியற்றதாய் விட்டன. நம்முடைய இருதயங்களைவிட்டும் இஸ்லாத்தினுடைய அன்பானது விலகிவிட்டது. றசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உண்மையான மகிமையும் கண்ணியமும் நம்முடைய உள்ளத்தில் தரிபடவில்லை. இல்லையேல் நாம் அவர்களது திருவடிகளை விட்டும் சிறிதாவது ஒதுங்கியிருக்க மாட்டோம்.

## 6-வது அத்தியாயம்

### பாத்திமாநாயகி, அலிறலியல்லாஹு அன்ஹு அவர்கள் வீட்டில் குடித்தனம் நடத்திவருதல்

2 தம் அரியதந்தையார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய வீட்டிலிருந்து பிரிந்துள்ள பாத்திமாநாயகி அவர்கள இப்போது தம் கணவருடைய வீட்டில் குடித்தனம் நடத்திவருகிற மாதிரியைக்கவனிப்போம். அவருடைய மாதிரியோவெனில் பூலோகத்திலுள்ள சகல நல்ல அம்சங்களையும் பொறுமையையும் பொருந்தியுள்ளது. ஒட்டுப்போட்ட கிழிந்த துணிகளை யணிந்து மலர்ந்த புஷ்பத்தைப்போலவே அவ்வளவொரு திருப்தியான வாழ்க்கையை அடைந்துகொண்டு போயிருக்கிறார்கள். உலகத்திலுள்ள கஷ்டநஷ்டங்கள் யாவும் அவர்களுடைய நஸீப்பி (விதி)ல் எழுதப்பட்டுப்போயினவோ என்று எண்

னுவோ மென்றாலும், அவருடைய திருமுகத்தின்பேரில் ஒருதடவை யிலாவது சோர்வு வருத்தம் இன்னதென்று கண்டுகொள்ளும்படியான அறிகுறிகள் காணப்படவில்லை. கணவன் மனைவிக்குரிய சம்பந்தங்கள் அதிக திருப்திகரமாகவே யிருந்துவந்திருக்கின்றன. ஹஜ்ரத் அலி (கர்) அவர்கள் கூறுகிறார்கள்:— பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் உயிரோடிருந்த காலம்வரைக்கும் எனக்கு அவரால் எவ்வித கஷ்டமும் நேரிடவுமில்லை; நேரிடுவதற்கு முகாந்தரமும் கிடையாது. ஏனென்றால் அல்லாவுடைய றசூலான ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய உபதேசங்களின் பயனானது எங்களைத்தனக்குள் அடக்கிக் கொண்டிருந்தது. அப்படியே ஏதேனும் ஓர் விஷயத்தில் எங்களிருவர்க்கிடையில் அபிப்பிராயபேதமோ அல்லது சொல்பமனஸ்தாபமோ ஏற்பட்டு விடுமானாலும் அது சிறிதுநேரங்கூடத் தங்கியிருந்ததாகச் சொல்லமுடியாது. ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய உருக்கமான உபதேசமானது, அதனை வெள்ளத்திற் கொப்பாக அடித்துக்கொண்டுபோய்விடும்.

இல்லுஷ்ஷராயிஜ் என்ற கிரந்தத்தில் ஹஜ்ரத் பத்தான் றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்பற்றிப் பின்வருமாறு ரிவாயத்து வந்திருக்கின்றது:-ஒருநாள் தற்செயலாக ஜனாப் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும், பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு மிடையில் ஏதோ சொற்ப மனஸ்தாபம் ஏற்பட்டதாக ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குச் செய்தி கிடைக்கவே தாங்கள் பாத்திமா நாயகி அவர்களின் வீட்டிற்குச் சென்று அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தங்களுடைய வலப்பக்கத்திலும் பாத்திமாநாயகியை இடப்பக்கத்திலும் உட்காரவைத்து அவர்களுக்குத் தக்க புத்தி மதிகளைப்புகட்டினார்கள். அவ்வரிய புத்தி மதிகளைச் செவியுற்ற இருவருடைய மனஸ்தாபம் சிறிது நேரத்திற்குள் போனவிடம் தெரியவில்லை. இருவருடைய கல்புகள் தெளிவடைந்து போயின. அந்த மனஸ்தாபங்களும் சொற்ப நேரம் வரையே இருந்து வருமே தவிர தற்காலப் புருஷன் பெண்ஜாதிகளுக்கிடை ஏற்படும் மனஸ்தாபங்களுக்கு ஒப்பிட்டுச் சொல்ல முடியாது. தற்காலம் அநேக புருஷர்களுக்கும் பெண்ஜாதிகளுக்கு மிடையில் ஏற்படும் சண்டை சச்சரவுகளும் அது சம்பந்தமான மனஸ்தாபங்களும் சாமான்னியமான மனஸ்தாபங்களெனச் சொல்ல முடியாத வைகளாகும். ஏனெனில் அந்த

கைய மனஸ்தாபங்களின் முடிவோ கடைசிவரையில் பெரும் கிளர்ச்சி யுண்டாய்ப் பெரும் போராய் முடிகிறது. துர்நடத்தை அநாச்சாரம் இவற்றிற்கு ஆளாக்கி விடுகின்றது. குடித்தனக்காரியங்களில் சொல்ப விவாதமும் புருஷன் பெண்ஜாதிக்குள் நேர்ந்துபோகுமாயினும் திடீ ரென்று மனைவியாருக்குக் கோபமேற்பட்டு விடுகிறது. அவரது கண வர் அவளைச் சும்மா விடலாகாதென அடி தடி முதலியவற்றில் தலையிட் டுக் கொள்ளுகிறார். இச்சந்தர்ப்பத்தில் ஓர் சோதனை ஏற்படுவதாகும்; அதென்ன? பெண்ஜாதி பெருந்தன்மை வாய்ந்திருப்பாளானால் அவள் புருஷனுடைய இப்போர்ப்பட்ட ஆத்திர நிலைமையைக்கண்டு மௌனஞ் சாதித்துக்கொள்ளுகிறாள். பெருந்தன்மை யற்றவளோ தன் புருஷனு க்குச் சரிசமமாக எதிர்த்து நிற்கிறாள். பின்னர் நடக்கும் சம்பவங்க ளைப்பற்றிக் கேட்பானேன்? திட்டுவதும், துர்வார்த்தைகளைப் பேசுவ தும், கைகால்களை ஆட்டுவதும், கண்களைப் பிதற்றுவதும் போதும்! போதும்! இந்நிலைமையில் அவளை அடக்குவார் யார்? அவளோ தன் எஜ மானனாகிய கணவனையே எதிர்க்க மைதானத்தில் வந்துவிட்டாள். இவ்வளவுதூரம் புருஷனுக்கு அவமானத்தை யுண்டுபண்ணியதோடு அவள் நின்றுவிடுகிறாளோ? கிடையாது. இனி அவள் இவ்வாத்திரத் தோடவே தன்பெற்றோர் வீட்டுக்குச்சென்று அவர்களிடம் ஒன்றுக் குப்பத்தாக கட்டு வார்த்தைகளைக்கொண்டு விஷயத்தை விரிவாக்கிப் பெற்றோருக்குத் தன் புருஷனிடத்தில் துவேஷத்தை யுண்டு பண்ணு கிறாள். இதற்குள் பொறாமைக்காரர்களுடைய கூற்றோவெனில் அவர் கள் அவளுடைய கணவனிடத்திற்போய் உன்பெண்ஜாதி உன்னைப் பற்றிய விவரங்களை யெல்லாம் தன் பெற்றோர்களிடத்தில் தெரிவிக் கவே அவர்கள் உன்பேரில் கடுங்கோபங் கொண்டுவிட்டார்கள். ஏது இனிஅவளை உன்னிடத்திற்கு அனுப்பமாட்டார்கள் போல்தெரிகிறது என்கின்றார்கள். இதைக்கேட்டபின் எவ்வாறு சகிப்பார்? கணவர் உடனே அவளைத் தலாக்கொடுத்து விடுவதாக ஆயத்தமாய் விடுகிறார்; கடைசியாக இருதாரத்தாரும் நீதிஸ்தலங்களுக்குச் சென்று வழக் குத் தொடர்கிறார்கள். புருஷன் பெண்ஜாதியுடைய விஷயங்களையும் பெண்ஜாதி புருஷனுக்குரிய குறைகளையும் பங்கமாய் கோர்ட்டில் எடுத்துக் கூறுகிறார்கள். இடையில் நின்றவர்களின் வேட்டையே வேட்டை. சிலர் கணவன் கட்சியில் சேர்ந்தவர்கள், வேறுசிலர் பெண் ஜாதியின் பெற்றோர் சார்பாகநிற்பவர்கள், தலைக்கு 10, 5 ரூபாய்களை

பெற்றுவிட்டார்கள். கட்சிப்பிளவுகளைப் பலப்படுத்தி விட்டார்கள். மஹல்லாக் காரர்கள் இவ்வேடிக்கையில் ஓர்வித ஊக்கத்தை யடைந்து போயினர். மனைவியர்கச்சேரியில் துப்பட்டியால் தன்னை மறைத்துக் கொண்டு வந்து நிற்கவும், உறவினர் அன்னியர் யாவரும் பேதமின்றி அவரை உற்று நோக்கவும் ஆயிற்று. பரிதாபம் படைப்புகளிலெல்லாம் மேம்பாடாக படைக்கப்பட்டுள்ள மானிடவர்க்கத்தாராகிய நாம்இறைவனது கட்டளைகளை அங்கீகரியாமலும் இறைவனால் நமக்கு அருளப் பட்டுள்ள பகுத்தறிவைப் பிரயோகம் செய்யாமலும் நாம் நம்முடைய பெண்மணிகளைச் சீர்திருத்தத்திற்கு கொண்டுவராம லிருக்கிறோம், அப்பெண் மணிகளுக்கு அத்தகைய சீர்திருத்தம் எப்படி உண்டாக வேண்டுமென்றால் நாம் அவர்களுக்குப் புகட்டும் கல்வியில் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களின் ஜீவியசரித்திரத்தையும் ஓர் பாடமாகப் படிப்பிக்கவேண்டும். ஒருகால் நம் பெண்மணிகள் ஜீவிய சரித்திரத்தைத் தாமாகவே படித்து அதனுடைய விஷயங்களை உணர்ந்துகொள்ளக் கூடாதவர்களாயிருந்தால் அவர்களுக்கு முன் படித்தவர்களாவது அதனைப்படித்து அவர்களுக்கு விஷயத்தை விளக்கமாகக் கூறி வரவேண்டும். பாத்திமா நாயகி யார்? அவர்களுடைய பதவி யாது? என்பதை முதலில் அவர்களுக்கு விளக்கிவிட்டுப் பின்பு அவர்களுடைய வாழ்நாளின் சரித்திரத்தையும் அவர்கள் மனதில் பதியுமாறு கேட்க வைப்போமானால் பின்னர் அவர்கள் துர்க்குணங்களைவிட்டும் நாகரிகமடைந்து தம் தம் கணவர்களுடன் நடந்துகொள்ள வேண்டிய விதத்தில் பணிவாய் நடந்து கொள்வார்கள் என்பதற்குத் தடைகிடையாது.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் பரிசுத்தம் மாசின்மை, நல்லொழுக்கம், நல்லனுஷ்டானம், பொறுமை இறைவன் பற்று முதலிய நல் விஷயங்களுக்கு வழி காட்டியாயிருந்து வந்தபடியால் முஸ்லிம் பெண்மணிகள் அந்நாயகியாரின் ஜீவிய சரித்திரத்தைக் கேட்டு அவர்களது நல்லொழுக்கங்களை யனுசரியாமல் நடப்பார்களானால் இதைவிட நம் முஸ்லிம் பெண்மணிகளின் துர் அதிர்ஷ்டத்திற்கு வேறு அத்தாட்சி வேண்டியதில்லை.

இமாமுல் அவுலியா ஹஜ்ரத் ஹஸன்பஸ்ரி றலியல்லாஹு அன்ஹு அவர்களால் அறிவிக்கப்படுகிறது-பாத்திமா நாயகி அளவு

கடந்த இபாதத்து திருப்பணிசெய்து வருவார்கள்; அப்படியிருந்தும் அவர் வீட்டுக் காரியங்களில் யாதொரு குறைவு ஏற்படாவண்ணம் நடந்துகொள்வார்கள். வீட்டின் எந்தக்காரியமாவது யாதொரு குறித்த சமயத்தில் முடியவில்லை என்பதாக எப்போதும் அலி றலியல்லாஹு அன்ஹு அவரோடு கோபித்துக் கொண்டதே கிடையாது.

ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தம் எளிமையின் காரணத்தால் பெருங்கஷ்டத்துடன் ஜீவனம் செய்துவந்தார்கள், அவர்கள் பெரும்பாலும் கூலிவேலை செய்தே சம்பாதிப்பதுண்டு. ஒரு நாள் அவர்களுக்குக் கூலிவேலை கிடைக்கவில்லை யாகையால் ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களும் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களும் காலை முதல் பிற்பகல் முடிய பட்டினியாகவே இருக்கநேர்ந்தது. பொழுது சாயுந்தறுவாயில் வியாபாரியொருவர் ஒட்டகத்தின் மேல் ஏற்றிக்கொண்டு வந்த தன் வியாபாரச்சரக்கைக் கீழே இறக்கிக்கொள்ளக் கூலியாளைத் தேடினபோது அக்கூலி வேலை ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு மிக்க அரிதாய்க் கிடைக்கலாயிற்று. அவ்வொட்டகத்தின் மேலுள்ள சாக்குகளையெல்லாம் இறக்கி அவற்றை வைக்கவேண்டிய இடத்திற்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்குள் இரவு கால்வாசி கடந்துவிட்டது. இவ்வளவு கஷ்டமான வேலை வாங்கிக்கொண்ட அந்த வியாபாரியோ ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஒரே திர்ஹம் கூலி கொடுத்தார். ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அதைப்பற்றி கிஞ்சிற்றும் தர்க்கம் செய்யாது சந்தோஷமாய்ப் பெற்றுக்கொண்டு கடைத்தெருவுக்குச் சென்றார்கள். நேரம் அதிகமாய் விட்டபடியால் கடைகள் அநேகமாய்ச் சாத்தப்பட்டுப் போயிருந்தன. ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சுற்றிப் பார்த்தபோது ஒரே ஒரு தனிக்கடை மூடுந்தறுவாயிலிருப்பதைக் கண்டு சீக்கிரம் அக்கடைக் காரனிடத்தில் போய் அந்தஓர் திர்ஹத்தைக் கொடுத்துக் கோதுமை விலைக்கு வாங்கிக்கொண்டார்கள்.

பின்பு அவர்கள் அந்நேரத்திலேயே வீட்டிற்கு வரவே பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் உடனே தம் கணவர் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களை வரவேற்று வெகு சந்தோஷமாகவே அவர்கள் கொண்டுவந்த கோதுமையை வாங்கியரைத்து அதனை ரொட்டியாகச் சுட்டு அவர்களுக்கு முன் கொண்டுவந்து வைத்

தார்கள். ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தின்று விட்டு வைத்த மீதி ரொட்டியைப் பாத்திமா நாயகி யவர்கள் புசித்துத் திருப்தியடைந்தார்கள்.

ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லு கிறார் அச்சந்தர்ப்பத்தில்:-நான் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலை ஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய நல்லுபதேசத்தை "அதாவது பாத்திமா உலகத்திலுள்ள ஸ்திரீகளிலெல்லாம் சிறந்த வர்" என்று மொழிந்ததை நினைத்து இறைவனுக்கு நன்றி பாராட்டி னேன்.

ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் வாழ் நாளின் கடைசிக் காலத்தில் உலக செல்வ நிலையை ஓரளவில் அடைந் திருந்தார். அப்போது தங்களால் விடுதலை யடையப்பெற்ற அடியாரா கிய அபூராபிஃ பொதுஜன சொத்துக்கு அதிகாரியானார். ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் புதல்வி யொருவருடைய கழுத்தில் ஒரு நாள் அசல் முத்துமாலை யொன்று போடப்பட்டிருந் தது. அந்த முத்துக்கள் பைதுல்மாலுக்கு (பொதுஜன சொத்துக் கு)ச் சொந்தமானவை என்பதாக அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தெரிந்துகொண்டு தங்கள் புதல்வியை நோக்கிக் கேட்கிறார் கள்:—

"இந்த முத்துக்கள் ஏது?" என்று கேட்டார்கள். அவர்கள் "இவற்றை அபூராபிஃ கொண்டுவந்து கொடுத்தார்" என்று பதில் கூறினார். உடனே ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அபூராபிஐ அழைத்து அவ்விஷயத்தில் எச்சரிக்கை செய்ததாவது:— "நான் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவை விவாகம் செய்து கொண்ட துவக்க காலத்தில் என்னுடைய ஜீவனம் நிரம்பவும் க்ஷீண தசை யடைந்திருந்தது. என்னிடமிருந்து வந்த ஆட்டுத் தோலொன் றே என்னுடைய படுக்கைக்கு விரிப்பாக உபயோகப்பட்டு வந்தது; பகலில் நான் அதன் பேரிலேயே என்னுடைய ஒட்டகத்திற்குத் தீனி வைப்பேன்; அடிமை வேலைக்காரன் என்ற நாமதேயமே எங்கள் வீட் டில் கிடையாது. வீட்டின் வேலைவெட்டிகளை நாங்கள் எங்கள் கைப் படவே செய்து கொள்வோம். இப்படியெல்லாம் இருந்துவந்த நான் இப்போது பைதுல்மாலுடைய எந்த வஸ்துவையும் எங்களுடைய உப

யோகத்தில் வருவதைப் பார்க்க எவ்வாறு சம்மதிப்பேன்? ஆனபடியால் பைதுல்மாலுடைய எச்சாமானையும் எடுப்பவர்களின் கைகள் துண்டிக்கப்படும் என்பதை நான் இதனால் உமக்கு எச்சரிக்கை செய்கின்றேன்'' என்றார்கள்.

பாத்திமா நாயகி காலஞ் சென்றதற்குப் பின்னர் ஒருநாள் ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் "பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள், தங்களோடு எவ்வாறு நடந்து கொண்டார்கள்'' என விசாரிக்கப்பட்டபோது ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பெருமூச்சு விட்டுச் சொல்லுகிறார்கள். "ஆ! பாத்திமாவைப் பற்றிக் கேட்கிறீர்களா? அவர் சுவர்க்க லோகத்தின் புஷ்பத்திற்கு ஒப்பாயிருந்தார். அப்புஷ்பம் வாடி வதங்கி உலர்ந்து போய்விட்டதாயினும் அதனுடைய பரிமளமானது இதுகாறும் என்னுடைய மூளையில் திளைபிட்டுக் கொண்டிருக்கின்றது'' என்றார்கள்.

பாத்திமா நாயகி யவர்கள் முதலில் தம்முடைய கணவரான ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் தம் குழந்தைகளுக்கும் சாப்பாடு வைத்து அவர்கள் சாப்பிட்டு முடிந்த பின்பே தாம் சாப்பிடுவார்கள். சாப்பாட்டு விஷயத்திலும் தம் கணவரை முந்திக் கொள்ள லாகாதென்பது அவர்களுடைய அரிய ஒழுக்கங்களின் அம்சங்களி லொன்றாக இருந்து வந்தது. ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களைப் பரிபாலித்து வந்த கால முழுதும் சோற்றுக் கஷ்டமே அதிகமாயிருந்து வந்தமையால் பொறுமையைக் கடைபிடித்த அந்த நாயகியார் தாம் பட்டினியாய்க் கிடந்தாலும், அதைப் பாதகமில்லை என்றெண்ணிக் கிடைத்த ஆகாரத்தைக் கொண்டு தாம் தம்முடைய கணவரையும் பிள்ளைகளையும் பசியாற்றி வைத்தாலே தமக்குப் போதுமானது என்ற திருப்தியுடனே முதலில் அவர்களுக்குச் சாப்பாட்டை யளிப்பார்கள். ஏனெனில் அவர்களது வாழ்க்கையில் பசிப் பட்டினியின் தவிப்பொன்றே அவர்களது அரிய செல்வமாக இருந்து வந்தது.

சுப்ஹானல்லா! உண்மையான பொறுமையும் பற்றும் இன்னதென்பதை யுணர்வதானால் பாத்திமா நாயகியின் வாழ்க்கையே ஒருவருக்குப் போதிக்கக் கூடிய பாடமாகும். இறைவன் இத்தகைய பாட

த்தைப் பாத்திமா நாயகியினுடைய சரித்திரத்திலேயே அமைத்து விட்டான் என்று சொல்லலாம்.

ஆ! தன்னுடைய கணவருக்காகவும் பிள்ளைகளுக்காகவும் தன்னுடைய வயிற்றை யடித்துத் தான் பட்டினியாகக் கிடந்து அவர்களை ஊட்டிவருவதாயிருந்தால் அதை எத்தகைய பொறுமை என்றும், எத்தகைய (இறைவனுக்கு) நன்றி பாராட்டல் என்றும் சொல்வது?

இதற்கு நிகராக நாம் கவனிப்போம்- தற்காலச் சீமாட்டிகள் இவர்கள் எல்லாவற்றிற்கு முன் தங்களுடைய சௌகரியங்களைக் கவனிக்கிறார்கள்.

ஓ சீமாட்டிகளே! சகோதரிகளே! பாத்திமா நாயகி யவர்களின் லக்ஷணங்களை ஆராய்ந் தறிய வில்லையோ? உங்களுடைய கணவர்களினதும் பிள்ளைக் குட்டிகளினதும் வசதி சௌகரியங்களுக்கு நிகராக உங்களுடைய சௌகரியங்களை பொருட் படுத்தலாமோ? இவ்வுலகத்தினிடை நல்ல உடைகள்-சிறந்த ஆபரணங்கள்-திறமான வாசனைத்திரவியங்கள்-நேர்த்தியான சவுக்காரங்கள் இவைகளே உங்களுக்கு கைகொடுப்பவைகள் என நீங்கள் கருதுகின்றீர்களா? வேண்டாம். உங்கள் உடை ஒருநாள் பழமை யானதாகிக் கிழிந்துபோகும். நீங்கள் பெருமைகொள்ளும் ஆபரணங்களும் ஒரு காலத்தில் தேய்ந்து கெட்டுப்போம், ஆண்டவனிடம் பயப்படுங்கள்; உங்கள் சுகானுபவங்களும் அழியத்தக்க வைகளே! அவைகளுக்கு நிலை எது? ஆனால் ஓரே ஒரு வஸ்துமட்டும் உங்களை விட்டும் அழியாததும் நிகரற்றது மாகும் அது எது? சற்குணங்களும் நல் அமல் (வணக்கம்) களுமே யாகும். நற்குணங்களையும் நல் அமல்களையும் ஆபரணங்களைப் போல் திருடர்கள் களவு செய்ய முடியாது. இவ்வுடைகள் போல் கிழிந்து போகக் கூடியவைகளன்று. நல்ல அமல்களுடைய செல்வத்திற்கும் எக்காலத்திலும் குறை யேற்பட மாட்டாது. தற்காலம் நீங்கள் உகை செல்வத்தைக் கண்டு பூரித்து மகத்துவங் கொண்டு விட்டீர்களாயினும் இந்த மகத்துவம் உங்களுக்கு நிலைத்திருக்குமா? என்று சிந்தித்துப் பார்க்கும்போது எதிர்காலத்தில் ஒரு நாள் உங்கள் மகத்துவத்துடன் நீங்களும் அழிவடையப் போகிறீர்கள். ஆனால் பாத்திமா றலியல்லாஹுஅன்ஹா அவர்களுடைய அரிய ஒழுக்கங்களுக்கு அழிவு ஏற்பட்டதாக நாம் சொல்ல முடியுமோ? 13-நூற்றாண்டுகள் கழிந்துபோய் விட்டன வாயினும் அவர்களுடைய கீர்த்திக்குச் சிறிதும் பிற்போக்கு ஏற்படவில்லையே! கியாமத் நாள்வரையிலும் இக்கீர்த்தி நிலைத்திருக்கப் போகின்றதே!

## 7-வது அத்தியாயம்.

### பாத்திமா நாயகியின் எளியவாழ்க்கையைப் பற்றியது.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்குத் தந்தை வீட்டில் தான் எளிமை ஏற்பட்டிருந்ததாகச் சொல்லுவோ மென்றாலோ கணவன் வீட்டிலும் வறுமையின் கஷ்டமே கஷ்டம்! தந்தை வீட்டிலும் மாமனார் வகையிலும் வறுமையே தலைசிறந்து நிற்கின்றது. அப்பவும் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் வறுமையைப் பற்றியும் கஷ்டத்தைப் பற்றியும் கிஞ்சித்தும் நினைத்ததே கிடையாது. தாங்கள் அதிக சந்தோஷத்தோடு தங்கள் வீட்டு வேலைகள் யாவற்றையும் தங்கள் கைப்படவே செய்து வந்தார்கள்.

அரபியத் தலைவர்களுக்குள் வழக்கமாக இருந்து வந்ததாவது:— சண்டையில் ஜயிப்பவர்கள் தோல்வி யடைந்தவர்களுடைய சொத்தைக் கொண்டுவந்து அதை 4 பங்காகப்போட்டு அவற்றுள் ஒரு பங்கைத் தங்கள் தலைவருக்குக் கொடுத்து மீதியான மூன்று பங்குகளைத் தங்களுக்கிடை பகர்ந்து கொள்வார்கள்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நாலு பங்குகளுக்குப் பதிலாக அதனை (திருகுருஆனின் கட்டளைபடி) 5-பங்குகளாக வகுக்கும்படி கட்டளை யிட்டார்கள். அந்த ஐந்து பங்கிலும் கீழ்க் கண்டவர்களுக்கு விதம் ஏற்பட்டது, (வஃலமூ அன்மாகனிம்தும்) என்னும் குருஆன் ஆயத்தின் அருத்தம் இன்னும் (முஸ்லிம்களே) அறியுங்கள், எந்த வஸ்துவை நீங்கள் (சண்டையில்) அபகரித்துக் கொண்டு வருவீர்களோ அதன் 5-வது பாகம் ஆண்டவனுடையதும் அவனுடைய றசூலினதும் (ரசூலினுடைய) சுற்றத்தார் களினதும் ஏழை மிஸ்கீன்களினது பாகும் என்பதே.

ஒரு தடவை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சமுகத்தில், சண்டையில் கைக்கொள்ளப்பட்ட சாமான்களுடன் சில வேலைக்காரிகளும் கொண்டு வரப்பட்டனர். இதை யறிந்த ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பாத்திமா நாயகியை நோக்கி "உங்கள் தந்தையாரிடத்தில் 4 வேலைக்காரிகள் கொண்டு வரப் பட்டிருக்கின்றனர். நீங்கள் உங்களுடைய வீட்டுக் காரியங்களில் முக்கியமாக எந்திரம் அரைத்தரைத்துக் கைகள் கொப்பளித்துப்போவதாயும் சிறு குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு வீட்டு அலுவல்கள் சாவ

காச மளிக்கவில்லை என்பதாயும் சொல்லுகின்றீர்களே. ஆகையால் உங்கள் தந்தையார் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் வந்திருக்கும் வேலைக்காரிகள் நால்வரில் ஒருவரை எங்களுக்குக் கொடுத்து விடும்படி கேளுங்கள்'' என்றார்கள்.

ஆனால் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கோ ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய சுபாவம் இன்னதென்பது தெரியும். தாங்கள் முஹாஜிரான முஸ்லிம்களைப் பற்றியே கவலையெடுத்துக் கொள்வார்கள் என்றும் அன்னியர்களுடைய சௌகரியங்களுக்கு நிகராகத் தங்கள் சொந்தவீட்டு ஜனங்களுடைய சௌகரியங்களைப்பெரிதாக எண்ணமாட்டார்கள் என்றும் அவர்களுக்குத்தெரிந்திருந்த படியால் இதைப் பற்றித் தன் தந்தையாரிடம் சென்று என்ன கேட்பது என்பதைத் தனக்குள் அநேகமாய்ச் சிந்தித்துக் கடைசியாகப் போய்த்தான் கேட்போம் என மனதைத் திடப்படுத்திக் கொண்டு தந்தையார் வீட்டுக்குச் சென்றார்கள்.

இவர்கள் போன சமயம் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வீட்டிலில்லாமலிருந்த படியால் இவர்கள் உம்முல் மூமினீன் ஹஜ்ரத் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களிடம் சமாச்சாரத்தைச் சொல்லி ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வந்ததும் தம்முடைய எண்ணத்தை அவர்களுக்குத் தெரிவிக்கும்படி சொல்லி விட்டுத் திரும்பி வந்தார்கள்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வீட்டுக்கு வந்தபோது ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்கள், பாத்திமா நாயகி தேடிவந்த காரணத்தை அவர் தங்களுக்குச் சொன்னார்கள்.

இதைக்கேட்ட ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாத்திமா நாயகியுடைய வீட்டுக்குச் சென்றார்கள். அப்போது பாத்திமா நாயகியுடைய வீட்டில் படுக்கைக்குப் போகும் சமயமாயிருந்தது. ஹஜ்ரத் அவர்கள் வரும் ஓசையைக் கேட்ட அலி றலியல்லாஹு அன்ஹுவும், பாத்திமா றலியல்லாஹு அன்ஹா ஆகிய இருவரும் எழுந்து நின்றார்கள். ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ''வேண்டாம் நீங்கள் உட்காருங்கள்'' எனக்கூறி, அவ்விருவருக்கிடையில் உட்கார்ந்துகொண்டு திருவுளமாகிறார்கள்:—

"நீங்கள் எது வேண்டுமென்று இப்போது என்னிடம் கேட்கிறீர்களோ நான் அதைவிட மேலான வஸ்துவை உங்களுக்குத் தருகின்றேன். அது யாதெனில் நீங்கள் இருவரும் படுக்கைக்கு வந்தவுடன் 33 விடுத்தம் சுப்ஹானல்லா- 33 விடுத்தம் அல்ஹம்துலில்லா 34 விடுத்தம் அல்லாஹூ அக்பர்- என ஓதிக்கொள்ளுங்கள். இந்த அமலானது உங்கள் விஷயத்தில் அடிமையைக் காட்டிலும் சிறந்ததாகும்" என்றார்கள்.

இந்நிலைமையில் ஹஜ்ரத் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்கள் சுகவாழ்க்கையை விரும்பி யிருப்பார்களானால் அவர்கள் தாராளமாய் வேலைக்காரியை அனுப்பியிருக்கலாம் என்பதும், ஆனால் ஹஜ்ரத் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்கள் பூலோகத்தின்கண் சுகமாய் வாழ்ந்திருக்க அபேக்ஷிக்கவில்லை என்பதும் செவ்வனே விளங்குகின்றது.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்கள் தாம் மட்டுமன்றித் தம்முடைய குடும்பத்தார்களும் உலகத்தில் சுகவாழ்வு பெறவேண்டும் என விரும்பவில்லை என்பதற்கு அவர்கள் இறைவனுடைய சந்நிதானத்தில் கேட்டு வந்த துஆவே போதிய அத்தாட்சியாகும். அவர்களது புனித துஆ யாதெனில்.

(அல்லாஹூம்மஜ் அல்ரிஸ்க ஆலிமுஹம்மதின் கூபாபன்)

பொருள்:- இறைவனே! முஹம்மத் உடைய சந்ததியார்கள் துஷ்டத் தனத்திற்கும் பாவத்திற்கும் ஆளாய் விடக்கூடாத அளவில் நீ அவர்களுக்கு ஜீவனம் அருள் புரிவாயாக!

கைபர் சண்டைக்குப் பின்னர் வெள்ளாட்டிகள் விசேஷமாய் இருந்து வந்தனர். அப்போது ஹஜ்ரத் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்கள் ஓர் வெள்ளாட்டியைப் பாத்திமா நாயகியிடம் ஒப்புவித்து அவளது பாதுகாப்பைப் பற்றி பாத்திமா நாயகியைக் கண்டித்துச் சொல்லுகிறார்கள் "பிழ்ழா என்னும் பெயர் கொண்ட இந்த வெள்ளாட்டி உங்கள் வீட்டு வேலைகளைச் செய்வாள். ஆனால் நீங்களும் அவளுடன் சேர்ந்து பேர்பாதி வேலையை அவளுக்குக் கொடுத்து மீதியான பேர்பாதி வேலைகளை நீங்களே செய்து கொள்ள வேண்டும். நீங்கள் இருவருமே சேர்ந்து திருகை அரைக்க வேண்டும். நீங்கள் எதைச் சாப்பிடுவீர்களோ அதே உணவை அவளுக்குச் சாப்பிடக் கொடுக்க வேண்டும்" என்றார்கள்.

ஒரு தடவை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், தங்கள் வழக்கப்படி, பிரயாணத்தி னின்றும் திரும்பி வந்தவுடன் பாத்திமா நாயகியைப் பார்ப்பதற்காக அவர்கள் வீட்டை நோக்கிச் சென்றபோது அங்கு வர்ணமுள்ள படுதா ஒன்று வீட்டிற்கு முன் தொங்க விடப் பட்டிருப்பதையும், பாத்திமா நாயகி தம் கைகளில் கங்கணம் (வெள்ளிக் காப்புகள்) இரண்டு அணிந்து கொண்டிருப்பதையும் கண்டு உடனே வாய்பேசாது திரும்பி விட்டார்கள். இதைக் கண்ட பாத்திமா நாயகி அளவற்ற துக்கமடைந்து தேம்பித் தேம்பி அழுது கொண்டிருக்கையில் அபூராபிஃ என்னும் ஹஜ்ரத்துடைய அடிமை அங்கு வந்து சேர்ந்தார். சேர்ந்ததும் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் அழுது கொண்டிருப்பதைக் கண்டு அதற்குக் காரணத்தை வினவினார்.

அதற்குப் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் பதிலளிக்கிறார்கள்:— எனது பாவா றசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் என்னுடைய வீட்டிற்குள் விஜயஞ் செய்தார்களாயினும் எத்தகைய மனஸ்தாபத்தைக் கொண்டோ பேசாது உடனே திரும்பிப் போய் விட்டார்களே! என்ன செய்வேன்'' என்றார்கள். தக்ஷணமே அபூராபிஃ ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கங்கணம், படுதா இவ்விரு நூதன சாமான்களைக் கண்டுதான் திரும்பிப் போயிருக்க வேண்டும் என்பதையுணர்ந்து பாத்திமா நாயகியிடம் கூறவே, பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் அந்த இரண்டு சாமான்களையும் சுருட்டி ஹஜ்ரத் பிலால் றலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கொடுத்து ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் அவற்றைச் சேர்ப்பிக்கும் படியாகவும் தாம் அவற்றை தானஞ் செய்து விட்ட படியால் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தங்கள் பிரியத்திற் கிணங்க யாருக்கு வேண்டுமோ அவர்களுக்கு அவற்றைக் கொடுத்து விடும்படி தாம் கேட்டுக் கொண்டதாகவும் சொல்லி யனுப்பினார்கள்.

பிலால் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவ்வாறே ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் அவற்றைக் கொண்டு வந்து கொடுக்கவே அவர்கள் அவற்றை விற்று அவைகளின் கிரயத்தை அஸ்ஹாபெ சபர் என்ற தங்கள் தோழர்களின் செலவிற்குக் கொடுத்து விட்டார்கள் என புகாரியில் ரிவாயத்து வந்திருக்கின்றது.

ஸாயிஜில் அபூஸர் அவர்களால் அறிவிக்கப்படுகிறது:—ஒரு தடவை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், எனக்கு அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வீட்டிற்குப் போய் அவர்களை அழைத்துக் கொண்டு வரும்படியாய்க் கட்டளையிட்டார்கள். நான் அவர்களுடைய வீட்டை யடைந்தபோது பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹஜ்ரத் இமாமெஹுசேன் றலியல்லாஹு அன்ஹு அவர்களை மடியில் வைத்துக் கொண்டே திருகையைப் பிடித்து மாவறைத்துக் கொண்டிருந்தார்கள்.

முல்லா ஜமாலுத்தீன் முஹத்திது எழுதுகிறார்கள்:— ஒரு தடவை பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் நப்வி பள்ளிவாசலுக்குள் வந்து சிறிய ரொட்டித் துண்டொன்றை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் கொடுத்தார்கள். தாங்கள் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அத்துண்டை வாங்கிக் கொண்டு "இது எங்கிருந்து வந்துள்ளது?" எனக்கேட்டார்கள். அதற்கு பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் "றசூலுல்லாவே! நான் கொஞ்சம் போன்ற வாற்கோதுமையை யரைத்து, ரொட்டி சுட்டு, பிள்ளைகளுக்கு தின்ன வைத்துக் கொண்டிருந்த சமயம் தங்கள் ஞாபகம் வந்தது. எடுத்துக் கொண்டுவந்தேன், "ஓ ஆண்டவனுடைய உண்மையான றசூலே! எங்களுடைய இரண்டு பசிவேளைகள் தவறி மூன்றுவது வேளையில் இந்த ரொட்டி கிடைக்கப் பெற்றிருக்கிறது" என்றார்கள்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அந்த ரொட்டித் துண்டை புசித்த பின்னர் திருவுளமாகிறார்கள் "ஓ என தருமை பாத்திமாவே! உன்னுடைய தகப்பன் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய 4 வது பசிவேளையில் இத்துண்டு அவரது வாய்க்குள் சென்றிருக்கின்றது என்பதை நீ அறியவில்லையோ" எனக் திருவுளமானார்கள்.

இவ்விஷயங்களை யெல்லாம் கவனிக்கு மிடத்து பாத்திமா நாயகியின் வாழ்க்கை எத்தகைய கஷ்ட நிலையை யடைந்திருந்த தென்பது சொல்லாமலே விளங்கும். இப்படி யிருந்தும் நாயகி அவர்கள் கனஅத்தை பொறுமையைக் கொண்டே திருப்தியடைந்து வந்தார்கள். ஒரு தடவை ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு பாத்திமா நாயகியிடம் போய் "ஏதேனும் பசியாறுவதற்குக் கொடுங்கள்" என்றார்கள், வீட்டிலோ ஒன்றுமில்லை என்பதைத் தெரிந்து கொண்டார்கள்.

அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக் கடும் பசியா யிருந் தமையால் வெளியிற் சென்றுவது ஏதாவது ஏற்பாடு செய்யலாம் என்றெண்ணி வெளியில் போனார்கள். அங்கும் எத்தகைய ஏதுகர மும் வாய்க்கவில்லை. மீண்டும் வீட்டிற்குத் திரும்பி வந்தபோது பாத் திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள், லுஹருடைய தொழுகை யை முடித்து ஸஜதாவிலேயே கிடப்பதைக் கண்டார்கள். பிறகு வணக்கத்துக்குப் பாத்திரவானான ஆண்டவனின் திருச்சமுகத்தை நோக்கினவர்களாக நிலையில் நின்றார்கள்.

ஒருநாள் ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங் கள் வீட்டில் வினவுகிறார்கள்.-"சாப்பாட்டுக்கு ஏதாவது உணவுப்பதா ர்த்தம் உண்டா?-" பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள்— "வீட்டில் ஓர் கோதுமை மணியும் கிடையாது. இன்று மூன்று தினங் களாகவும் இப்படித் தானிருந்து வருகின்றது" என்றார்கள். அதற்கு அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள்.- "நீங்கள் என் என்னிடம் சொல்ல வில்லை" என்றார்கள். அதற்குப் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா என் தந்தையாராகிய றசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலை ஹிவஸல்லம் அவர்கள் என்னை இங்கு அனுப்பி வைத்த சமயத்தில் எனக்குப் புகட்டியுள்ள புத்தி மதிகளில் முதலாவது:— மகளே! "நீ அலியிடம் ஏதேனும் வேண்டும் எனக் கேட்டு அவரை வெட்க மடை யச் செய்யாதே' என்பதே. அதை நான் கடைப் பிடித்திருக்கிறேன்" என்றார்கள்.

## 8-வது அத்தியாயம்.

### அவர்களின் தயாள சிந்தை

இப்னு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களால் அறி விக்கப்படுகிறது:—ஒருநாள் பனீ ஸலீம் சமூகத்தோர் களினின்றும் ஒருவன் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய சமுகத்திற்கு வந்து "முஹம்மதே! ஓ முஹம்மதே! என்று உரத்துக் கூவினான். ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவ னுக்குப் பதிலளிக்கவே, அவன், அவர்களைநோக்கி "உம்முடைய நிழல் பூமியின் மேல் படாதெனக் கேள்வியுற்றேன்; அத்தகைய மந்திரவாதி நீர் தானே? என்னுடைய சமூகத்தார் என்னுடைய எண்ணத்திற்கு

இசைந்து கொள்ளும் பட்சத்தில் இதோ உம்முடைய கழுத்தை இப்போதே துண்டிக்கத் தயார்" எனக் கடுங் கோபமாய்ப் பேசினான். இதைக்கேட்டுக்கொண்டிருந்த ஹஜ்ரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக் கோப மேற்பட்டு அவன் இவ்வாறு அவமதித்துப் பேசிய தற்காக அவனைத் தக்கபடி தண்டிக்க யத்தனித்தபோது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், வேண்டாமென்று தடுத்து அத்தகைய வனுக்குச் சமாதானம் சொல்லுகிறார்கள்:—

"சகோதரனே! நான் இறைவனுடைய அடியார்களில் ஒருவனானேன். ஆனால் இறைவனுடைய கட்டளைகளை உலகத்தார்களுக் கிடை சேர்ப்பித்து வைப்பதே எனக் குரிய வேலையாகும். அன்பனே! நீ மறுமையிலுள்ள வேதனைக்குப் பயப்படு. நரகத்தினுடைய அக்கினியினின்றும் தப்பித்துக் கொள்ள முன் ஜாக்கிரதை எடுத்துக்கொள். சிருஷ்டி கர்த்தனுக்கு இணையில்லை என்பதாகவே உறுதி கொண்டு அவனையே வணங்கு" என்று அருளினார்கள்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய திருநாவினால் இம்மொழிகளைக் கேட்ட அந்த மிலேச்சத் தன்மையுள்ளவன் தக்ஷணமே தன்னுடைய மிலேச்சத் தன்மையை ஒழித்து இஸ்லாத்தைத் தழுவினான். உடனே ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தங்கள் ஸஹாபாக்களின் மூலமாகப் புதிய முஸ்லிமான அவருக்குத் திருக் குர்ஆனுடைய சில ஆயத்துகளைப் புகட்டி வைத்தார்கள். பின்னர் தாங்கள் அவரிடம் "உம்ருக்கு ஏதேனும் சொத்து உண்டா?" என விசாரித்ததற்கு அவர் "தங்களைத் தூதராக்கி அனுப்பி வைத்த ஆண்டவன் பேரில் சத்தியம் செய்து சொல்லுகிறேன்; 4000 பேர் கொண்ட என்னுடைய பனிஸலீம் என்னும் சமூகத்தோர் களுக்கிடையில் என்னைக் காட்டிலும் பரம ஏழை ஒருவருமில்லை" என்றார்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் ஸஹாபாக்களை நோக்கிக் கேட்கிறார்கள் "இந்த நவ் முஸ்லிமானவருக்கு ஓர் ஒட்டகத்தை வாங்கி நன்கொடையாக அளிப்பதற்கு உங்களில் யாராவது உண்டா? உண்டானால் இறைவன் அத்தகையோருக்குத் தக்க பலனை யளிப்பான் என்பதற்கு நான் ஜாமீன் கொடுக்கின்றேன்" என்றார். இதைக் கேட்டதும், ஸாதிப்னி உப்பாத் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுந்திருந்து "ஓ அல்லாவின் உண்மையான

றசூலே! என்னிடம் இருக்கும் பெண் ஒட்டகத்தை நான் அவ ருக்குக் கொடுத்து விடத் தயாராயிருக்கிறேன்'' என்றூர்கள்.

இரண்டாவது தடவை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வசல் லம் அவர்கள்:—''இப்போது அவருடைய தலையை மறைத்து இறை வனுடைய சந்தோஷத்தை அடைவார் உண்டா?'' எனக்கேட்ட போது ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுந்திரு ந்து ''இந்த உத்தரவை நான் நிறைவேற்றுகிறேன்'' என்று தம்மு டைய தலைப்பாகையைக் கழற்றி அந்த நவ் முஸ்லிமானவரின் தலை மேல் வைத்துவிட்டார்கள்.

மூன்ருவது தடவையாக ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வசல் லம் அவர்கள்:--''இப்போது அவருக்குச் சில உணவுப் பதார்த்தங்களை யளிப்பவர் யார்?'' என வினவியபோது ஸல்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுந்திருந்து தம்முடன் அவரை அழைத்துக் கொண்டு அநேக ஸஹாபாக்களுடைய வீடுகளுக்குச் சென்று ஆங் காங்கு ஏதேனும் கிடைக்குமா என விசாரித்தார். ஒன்றும் கிடைத்த பாடில்லை; கடைசியாக பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் வீட்டின் வழியே வருகையில் அங்கேயாவது ஏதேனும் கிடைக்குமோ என்றெண்ணிக் கதவைத் தட்டினூர்கள். உடனே பாத்திமா நாயகி ''வெளியில் யார்?'' என்றுகேட்க ''நான்தான் ஸல்மாபார்ஸீ'' என இவர் பதிலளித்தார்கள். பின்னர் ''என்ன அலுவலாக வந்தீர்கள்?'' எனக் கேட்டபோது ஸல்மான் றலியல்லாஹு அன்ஹு விஷ யத்தை விவரித்து ''அன்னூருக்காக எத்தனையோ வீடுகளுக்குப் போயும் ஒன்றும் கிடைக்காததனூல் இங்கு வந்தேன்'' என்று சொன்னூர்கள்.

இதைக்கேட்ட உலக இரட்சகர் ஸல்லல்லாஹு அலைஹி வசல் லம் அவர்களின் அருமைப் புதல்வியார் கண்ணீர் விட்டுச் சொல்லுகிறூர் கள்-''ஓ ஸல்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்களே! என்னுடைய தந்தையாரை நபியாக்கி அனுப்பி வைத்த இறைவன் மீது சத்தியமாகச் சொல்லுகிறேன்; நாங்கள் சென்ற இரண்டு நாட்களாகப் பட்டி னியா யிருந்து வருகிறோம். இன்று மூன்ருவது நாள். ஹஸன் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு இருவரும் பட்டினியால் வாடிவதங்கி அழுது கொண்டிருந்தனர். அவர்களைத் தேற்றிப் படுக்க வைத்திருக்கிறேன். அந்தோ என்ன செய்வேன்! என் வாயிற் படி

யின்மீது வந்துள்ளவரின் தேவைக்கு ஒன்றும் இல்லை யெனச் சொல்லி எவ்வாறு அவரை வெறுங்கையாயனுப்பி வைப்பது?' எனப் பெருவாரிவருந்திக் கடைசியாக அந்நாயகி றலியல்லாஹு அன்ஹா சொல்லுகிறார்கள்:-" ஓ ஸல்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்களே! இதோ என்னுடைய போர்வையைத் தருகிறேன். நீங்கள் இதை ஷம்மூன் என்ற யூதரிடம் கொண்டு போய்,— இந்தப் போர்வை முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மகளாகிய பாத்திமாவுடையது. அவர் இதை அடைமானமாகவைத்துக் கொண்டு கொஞ்சம் தானியத்தைக் கிரயத்திற்குக் கொண்டுவரும்படி சொன்னார் என்று கூறி வாங்கி வாருங்கள் என்று அருளினார்கள்.

ஸல்மான் பார்ஸீ றலியல்லாஹு அன்ஹு அப்போர்வையை எடுத்துக்கொண்டு வந்து ஷம்மூனிடம் கொடுத்துச் சங்கதிகளைச் சொன்னார்கள். அச்சங்கதிகளைக் கேட்ட ஷம்மூன் சற்று நேரம் வரை தமக்குள் சிந்தித்துப் பார்த்துப் பதில் சொல்வதற்குள் அவனுடைய முகத்தின்மேல் வியர்வை கண்டது. அவரது மதப்பற்று ஒருவாறு பொங்கலாயிற்று. இந்தத் தறுவாயில் அவர் கூறுகிறார்:- "ஓ ஸல்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்களே! இந்தப் போர்வை கொடுத்தனுப்பிய அம்மையாருடைய தந்தை இன்னாரென்பதை நான் நன்குணர்வேன். ஆ! அத்திருத் தூதரின் வரவைப் பற்றி எங்கள் நபியாகிய மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் தௌரேத் வேதத்தில் முன்னறிக்கை செய்திருக்கிறார்கள்'' என்றார்.

மேல் கூறியபடி ஷம்மூன் பதிலளித்தவுடன் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரில் ஈமான் கொண்டு இஸ்லாத்தைத் தழுவினார். பின்னர், ஷம்மூன் ஸல்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத் தானியத்தைக் கொடுத்து அந்தப் போர்வையை வாங்கிக் கொள்ளச் சம்மதியாமல் உடனே அதைக் கொண்டு போய்க் கொடுத்து விடும்படி கேட்டுக்கொண்டார்.

ஸல்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவற்றைக் கொண்டு வந்து பாத்திமா நாயகியிடம் ஒப்படைத்தார்கள். பாத்திமா நாயகி அந்தத் தானியத்தை (கோதுமை) தங்கள் கைப்படவே அறைத்து, ரொட்டிசுட்டு ஸல்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கொடுத்து அதை அந்த நல்முஸ்லிம் றலியல்லாஹு

அன்ஹா அவர்களுக்கு உடனே சேர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டார். அப்பொழுது ஸல்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த ரொட்டியினின்றும் ஒரு பாகத்தைப் பட்டினியாய்த் தூங்கும் பிள்ளைகளுக்காக எடுத்துக் கொள்ளும்படி பாத்திமா நாயகியை மரியாதையுடன் வேண்டிக் கொண்டார்கள்.

பாத்திமா றலி யல்லாஹு அன்ஹா அவர்கள் ஸல்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வேண்டுதலுக்குச் சற்றும் உடன்படாது "ஓ! ஸல்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்களே! ஆண்டவன் பாதையில் கொடுக்கப் பட்ட வஸ்துவில் பிள்ளைகளுக்கென எடுத்துக் கொள்வது கிரம மல்ல" எனக் கூறினார்கள்.

பின்னர் ஸல்மான் றலி யல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த ரொட்டியை ஹஜ்ரத் ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் கொண்டு வந்து கொடுத்து நடந்த விஷயங்களையெல்லாம் வெளியிட்டார்கள். ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த ரொட்டியை அந்த அஃராபியான நவ் முஸ்லிமுக்குக் கொடுத்து விட்டவுடன் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவுடைய வீட்டிற்கு விஜயஞ் செய்தார்கள். அங்கு வந்து பார்த்த போது பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களின் முகம் வாடிப்போய் அவர்கள் நிரம்பவும் களைப்படைந் திருக்கக்கண்டு ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் அதன் காரணம் விசாரிக்கப் பட்டபோது பாத்திமா நாயகியின் வீட்டிற் சாப்பிட்டு மூன்று நாளாகின்றன எனத்தெரிய வந்தது.

அப்போது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாத்திமாவைத் தங்களுக்குப் பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு வானலோகத்தின் புறமாய் அண்ணாந்து பார்த்துத் தங்கள் திருக்கரங்களை யேந்தி "இறைவனே! பாத்திமா உன்னுடைய அடிமையாவாள். நீ அவளுடன் பொருந்தமாக இருப்பாயாக!" என்று துஆபிரந்தார்கள்.

ஹஜ்ரத் ஹஸன் அலைஹி வஸல்லம் அவர்களால் அறிவிக்கப் படுகிறது:-ஒரு நாள் ஒரு வேளைக்குப் பிறகு இரண்டாவது வேளையில் நாங்கள் சாப்பாட்டை யடைந்தோம். எங்களுடைய தந்தையாரும் நாங்கள் இரு சகோதரரும் பசியாறி விட்ட பிறகு எங்களுடைய

தாயார் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா சாப்பிட உட்கார்ந்தார்கள். அவர்கள் முதல் பிடி ஒசீவனத்தையும் வாய்க்குள் வைக்கவில்லை; இத்தருவாயில் ஓர் ஏழை பக்கிரியானவர் எங்கள் வீட்டு வாயிற்படிக்கு வந்து "றசூலுல்லாவுடைய புதல்வியாரே! உங்களுக்கு இந்த மிஸ்கீனுடைய சலாம் உண்டாவதாக! நான் இரண்டு பொழுதாகப் பசியால் வருந்துகிறேன்; தாங்கள் என் பசியை ஆற்றிவையுங்கள்" என்று கூவினர்.

பக்கிரியுடைய சத்தத்தைச் செவியுற்ற என் தாயார் (பாத்திமாநாயகியவர்கள்) உடனே சாப்பாட்டினின்றும் கையை எடுத்துக்கொண்டு அச்சாப்பாட்டை அந்த மிஸ்கீனுக்குக் கொண்டுபோய்க் கொடுத்து வரும்படியாகவும் தான் ஒரே ஒரு பொழுது சாப்பிடாமலிருக்க, அவர் (மிஸ்கீன்) இரண்டு பொழுது சாப்பிடாமலிருப்பதாய்க் கூறுவதாகவும் என்னிடம் சொல்லிச் சாப்பாட்டை அந்த மிஸ்கீனுக்கு சேர்ப்பித்துவைத்தார்கள்.

பாத்திமா நாயகி அவர்களுக்குச் சிறுபிராயத்திலேயே நற்குணங்களும் நல்லொழுக்கங்களும் நிறைந்திருந்தன. பாத்திமா நாயகிக்கு பத்துப் பிராயமான போது *ஷாம்தேசத்து வாசியான பாத்

---

* பாத்திமா ஷாமீ என்பவர் ஷாம் தேசத்திலுள்ள ஒரு பெரிய சீமானின் குமாரத்தி. ஆண்டவனுடைய வணக்கத்திலும் மார்க்கப் பற்றிலும் விசேஷமான அன்புடையவர். எல்லா வேத கிரந்தங்களையும் ஐயந்திரப் படித்திருந்தார். (இல்மெநுஜூம்) நட்சத்திர ஆராய்ச்சிக் கல்வியிலும் பயிற்சி யடைந்திருந்தார். கடைசிகாலத்திய நபியொருவர் உலகத்தினிடை ஜனிக்கப்போகிறார் என்ற விஷயம் அவருக்குத் தெரிந்து போகவே, அவர் ஷாம் தேசத்தை விட்டும் மக்கா முகர்ற மாவுக்கு வந்தார்:— ஒருநாள் அவர் அப்துல்லாவைச் சந்தித்த போது, அவருடைய நெற்றியின் மேல் ஜொலித்துக் கொண்டிருந்த அடையாளத்தைக்கண்டு பிடித்து, அவருடன் தான் நிக்காஹ் செய்து கொள்ள விரும்புவதாகவும் அப்துல்லா அதற்குச்சம்மதிக்கிறாரா என்பதாகவும் அவரிடம் வினவலானார்:— அதற்கு அப்துல்லா நான் என்னுடைய பெற்றோர்களின் அனுமதியின்றி உங்களுக்கு என்ன பதிலளிப்பது என்று சொல்லி விட்டுத் தம்வீட்டுக்குப் போய் விட்டார். சிறிது காலத்திற்குள் ஹஜ்ரத் ஆமினா றலியல்லாஹு அன்ஹா அவர்களோடு அப்துல்லாவுக்கு விவாகம் முடிந்தது. இப்போது அப்துல்லா வுடைய நெற்றியின் மேல் ஜொலித்து வந்த நுபுவ்வத்துடைய திரு ஒளியை ஆமினாவுடைய

திமா என்னும் ஓர் பெண்ணரசி ஸபூர், தௌருத்து, இஞ்சீல் வேதங்களை ஆராய்ந்தறிந்தார். (இவர் யார் என்ற விவரம் அடியில் வரப்பெற்றிருக்கிறது) அவர் பாத்திமா நாயகியுடைய குணாதிசயங்களைக் கேட்டு அவர்களைக் கண்டு கொள்ள மதீனாவுக்கு வந்தார்கள். அன்னார் பாத்திமா நாயகி அவர்களைப் பார்க்க வந்தபோது பலவித ஆபரணங்களையும் வைரரத்தினங்களையும் கனிவர்க்கங்களையும் இதரத் தின் பண்டங்களையும் கொண்டுவந்தார்கள். தங்களைக்காண வேண்டுமென்றே தொலைதூரத்திலிருந்து வந்துள்ள அந்த அம்மையாரைப் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் மிக்க பிரியத்துடன் வரவேற்று உபசரித்தார்கள். பின்னர் பாத்திமா ஷாமீ தாம் கொண்டுவந்த வெகுமதிகளையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துப் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு முன் வைத்து அவற்றை அவர்களைக் ஓர் மதியாக ஒப்புக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்கள்.

பாத்திமா நாயகியோ வெனில், அவற்றைக் கொண்டு வந்தவரிடமே அனுமதிபெற்று அவைகளை யெல்லாம் இஸ்லாத்தின் பைதுல்மாலுக்குக்(பொதுஜனோபகார பண்டுக்கு) கொடுத்து, தின் பண்டங்களையும் வஸ்திரங்களையும் இஸ்லாத்தின் சேவையில் இரவும் பகலும்

---

கர்ப்பத்தில் தரிபட்டு விட்டது. பின்னர் ஒரு நாள் அப்துல்லா தம்முடைய பெற்றோர் களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு பாத்திமா ஷாமீயுடைய வீட்டிற்குப் போனார்கள்.

போனதும் அப்துல்லா, தாம் பாத்திமா ஷாமீயோடு நிக்காஹ் செய்து கொள்ளத் தயாரா யிருப்பதாகக் கூறவே, அதற்குப் பாத்திமா ஷாமீ:—

"ஓ அப்துல்லா அவர்களே! நான் பலவித கஷ்ட நஷ்டங்களை சகித்துக் கொண்டும், தொலை தூரத்தைக் கடந்து கொண்டும் உங்களிடம் வந்து நிக்காஹ் செய்து கொள்ள வேண்டும் என எதற்காக ஆவல் கொண்டிருந்தேன் என்பதை நீங்கள் அறியவில்லையோ? உங்களிடத்தில் இருந்து வந்த அரிய செல்வம் நெற்றியின் ஒளியே. இப்போது அவ்வொளி எங்கே யிருக்கிறது? எந்த நற்பாக்கிய வதிக்கு அது புசிப்பாக வேண்டும் என ஏற்பட்டிருந்ததோ அந்நற்பாக்கிய வதி அதனை அடைந்து விட்டாள். ஆகையால் உலக சுகானுபவங்களுக்காக இப்போது நான் உங்களை நிக்காஹ்செய்து கொள்வதா? அத்தகைய அவசியம் எனக்கு ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை.

உழைத்து வந்த ஸஹாபாக்களுக்குப் பகர்ந்து விட்டார்கள். இதைக் கண்ட பாத்திமா ஷாமீ என்பவர், பாத்திமா நாயகியுடைய இத்தகைய தயாள சிந்தையைக்கண்டு பிரமித்து, பாத்திமா நாயகியைத் தம்மார் போடு தழுவியதுடன் தாம் உயிரோடிருந்த காலம் வரையில் பாத்திமா நாயகியின் குணாதிசயங்களைச் சதா நினைத்துக் கொண்டும் அவர்களைப் புகழ்ந்து கொண்டுமே வந்தார்கள்.

ரிவாயத்து:—ஒரு நாள் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் தொழுது கொண்ட பிறகு அத்தொழுகை விரிப்பின் பேரிலேயே சஞ்சல மடைந்த வர்களாக உட்கார்ந்து கொண்டார்கள். வறுமையின் துக்கமும் பசியின் கொடுமையும் அவர்களுக்குப்பெருங்கலக்கத்தை யுண்டு பண்ணியது. அப்போது அவர்கள் தனக்குள் சிந்தித்துக் கொள்வதாவது:— ஆண்டவன் எங்களை உலகத்தில் எதற்காகப் படைத்திருக்க வேண்டும்? உடுக்க உடையும் உண்ண உணவுங் கூடப் போதிய மட்டில் கிடைக்கவில்லை. மேல் போர்வையோ கிழிந்துபோய் அதில் எண்ணிறந்த ஒட்டுகள் போடப் பட்டிருக்கின்றன. இதைவிட ஆண்டவன் எங்களைப் படைக்காமலே இருந் திருப்பானானல் அவனுக்கு என்ன தான் குறைவுநேர்ந்து போயிருக்க கூடும்?"- எனச் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்படி யெல்லாம் யோசனை செய்து கொண்டிருக்கையில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தற்செயலாக பாத்திமா நாயகி யவர்களுடைய வீட்டிற்குள் பிரவேசித்து தம் அருமை புதல்வியாரைக் கண்டபோது அவர், துக்கமுள்ள வராக இருப்பதை யுனர்ந்தார்கள். உணர்ந்ததும் "மகளே! என் இவ்வாறு உட்கார்ந்திருக்கிறாய்? உனக்கு ஏற்பட்ட கவலை என்ன?" என்று கேட்கவே, பாத்திமா நாயகியவர்கள் தம் தந்தையாரின் குரலோசையைக் கேட்டு திடுக்கிட்டுத் தம்மைத் தாம் சமாளித்துக் கொண்டு எழுந்து நின்று மரியாதையுடன் ஸல்லல்ஹு அலைஹிவசல்லம் அவர்களுக்குச் சலாம் செய்து "றசூலுல்லாவே! இருந்தாப் போலிருந்து இன்று நான் நம்முடைய எளிமையின் கஷ்டங்களை உணரலானேன்" என்றார்கள்.

இதைக் கேட்ட ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் பாத்திமா நாயகியின் கையைப் பற்றிக்கொண்டு அவ்விடத்தில் உட்கார்ந்தபடி பாத்திமா நாயகிக்கு அவர், தம்முடைய தொழுகை

விரிப்பை நீக்கிப் புரட்டிப் பார்க்கும்படி சொல்லவே, பாத்திமா றலி யல்லாஹு அன்ஹா அவர்கள் அப்படியே முஸல்லாவைப் புரட்டிப் பார்த்தார்கள். அப்போது தொழுகை விரிப்பின் கீழ் இரண்டு நதிகள் ஓடின. அவற்றுள் ஓர் நதி தங்கமாயும் மற்றோர் நதி வெள்ளியாயும் பெருகி யோடிக் கொண்டிருந்தன.

அப்போது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாத்திமா றலி யல்லாஹு அன்ஹா அவர்களை நோக்கி "பாத்திமாவே! இதோ இந் நதிகளினின்றும் உமக்கு வேண்டிய வரையில் பொன்னையும் வெள்ளியையும் எடுத்து அளந்துகொள்ளும். அவற்றைக் கொண்டும் நீர் நிகரற்ற சீமாட்டியாய் விடலாம். அரண்மனைகளையும் சிறந்த மாளிகைகளையும் கட்டி உமக்குக் கீழ்ப்பட ஏராளமான ஆள்களையும் மாகாணங்களையும் வைத்துக்கொண்டு இராஜ்ஜியம் ஆளலாம்; உம்முடைய மனப்போக்கிற் கிணங்க சிறந்த உணவுகளைப் புசிக்கலாம், நேர்த்தியான உடைகளை உடுக்கலாம். ஆனால் இந்தப் பூலோக வாழ்வு நிலைத்த தன்று என்பதையும் இம்மையிலேயே சுகவாழ்வை விரும்புங்கால், மறுமையில் எத்தகைய சுகமும் கிடைக்கா தென்பதையும் உணர்ந்துக் கொள்.

"மகளே! இனி உனக்கு இம்மையைக் கடைப்பிடிக்க பிரியமா? அல்லது மறுமையைக் கைக்கொள்ள இஷ்டமா? சொல் பார்ப்போம்" என்று ஹஜ்ரத் அவர்கள் வினவியபோது பாத்திமா நாயகி யளித்த பதிலாவது:—

"தந்தையாரே! எனக்குப்பூலோகச்செல்வம்வேண்டியதேயில்லை, நான் என்னுடைய தப்பெண்ணத்தை விட்டும் விலகிக் கொண்டேன் என்பதற்கு தவ்பாச் செய்கின்றேன்; மன்னிப்புத் தேடுகிறேன். இனிமேல் நான் எத்தகைய வீண் குழப்பமான எண்ணங்களுக்கும் மனதில் இடங் கொடுக்க மாட்டேன்" என்று சொல்லிக் கொண்டு புரட்டிக் கொண்டிருந்த தொழுகை விரிப்பை முன்போல் சரிபடுத்தி விரித்து விட்டார்கள்.

ஹஜ்ரத் ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் கஸ்ஸாலீ றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் "இஹ்யாவுல் உலூம்" என்னும் கிரந்தத்தின் மூன்றாவது பாகத்தில் எழுதுகிறார்கள்:— ஒரு தடவை பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் நோயாய் விட்டபோது, ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இம்ரான் பின்

ஹவீன் என்னும் பெயர் கொண்ட தங்களது கண்ணியமுள்ள ஓர் தோழரானவரை நோக்கி "ஒ இம்ரான், நீர் எங்கள் பால் ஓர் கண்ணியம் வாய்ந்த ஸஹாபியாவீர். வாரும் பாத்திமா வுடைய தேக நிலையை விசாரித்து வருவோம்" என்று சொன்னதின் பேரில் இம்ரான் பின், ஹவீன் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றி பாத்திமா நாயகியுடைய வீட்டிற்குச் சென்றார்கள்.

வீட்டின் வாயிற்படிக்குப் போய்ச் சேர்ந்ததும் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தஸ்தக் செய்து (கைகொட்டி) சலாம் சொல்லி "அனுமதி கொடுத்தால் உள்ளே வருகிறேன்" என்றார்கள். பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் "தடையின்றிச் சிறப்புடன் வருவீர்களாக" என்று பதிலளித்த போது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "என்னுடன் என்னுடைய தோழராகிய இம்ரான் பின் ஹவீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் வந்திருக்கிறார்களே அவர்களையும் அழைத்து வரலாமா?" என்று கேட்டார்கள். அதற்குப் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் சொல்லுகிறார்கள்:— "என்னிடத்தில் ஒரே ஒரு போர்வை தானிருக்கிறது" என்றார்கள். அதற்கு ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (சைகைகாட்டி) 'அதைக் கொண்டுதானே தேகத்தைப் போர்த்துக் கொள்ளுங்கள்" எனத் திருவுளமானார்கள், அதற்குப் பாத்திமா நாயகி சொல்லுகிறார்கள்:— நான் இப்போர்வையைக் கொண்டுதேகத்தைப் போர்த்துக் கொண்டேன். ஆனால் தலையை மறைக்க இப்போர்வை போதாமலிருக்கின்றது" என்றார்கள்.

இதைக்கேட்ட ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்போர்வையைக் கழற்றிப் பாத்திமா நாயகியிடம் கொடுத்து அதைக் கொண்டு தலையை மறைத்துக் கொள்ளும்படி சொல்லவே அவர்கள் அவ்வாறே மறைத்துக் கொண்ட பின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் தோழருடன் வீட்டிற்குள் சென்று தேக ஸ்திதியைப்பற்றி விசாரித்தார்கள். பாத்திமா நாயகி தம் தந்தையாருக்குப் பதில் கூறுகிறார்கள். "தேகமெல்லாம் கடுக்கின்றது. மனதிற்கு கிஞ்சித்தேனும் ஆறுதலில்லை. இச்சந்தர்ப்பத்திலோ வெனில், வீட்டில் எத்தகைய உணவு பதார்த்தமும் கிடையாது. பசிவேறு என்னை வதைக்கின்றது" என்றார்கள்,

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "மகளே! நொந்துக் கொள்ளாதே எனக்கோ மூன்று நாளாக ஆகாரம் கிடையாது. இறைவனிடம் உன்னைக் காட்டிலும் எனக்கே பெரும் பதவியுண்டு. நான் ஆண்டவனிடத்தில் ஏதொன்றை விரும்புவேனோ அவன் அருள்புரிவான். ஆனால், நான் மறுமைக்கு நிகராக இம்மையை சிலாக்கித்துக் கொள்ள விரும்பவில்லை" என்று மொழிந்து தன்னுடைய திருக்கரத்தால் பாத்திமா நாயகியின் முதுகைத் தடவிக் கொடுத்து "நீ சுவர்க்க மாதர்களுக் கெல்லாம் தலைமை வகித்திருப்பதால் உலக சங்கடங்களைக் கண்டு மனக் கலக்கத்தை யடைய லாகாது" என்றார்கள்.

## 9-வது அத்தியாயம்

### பாத்திமா நாயகியின் உழைப்பும் வணக்கமும்.

பாத்திமா நாயகி யுடைய வாழ்க்கையில், உணவிற்கும் உடுக்க உடைக்கும் கஷ்டத்தின்மேல் கஷ்டமாக இருந்து வந்த போதிலுங்கூட அவர்கள் ஆண்டவனுடைய வணக்கத்தில் அடைந்துள்ள சிறப்பின் லக்ஷணங்களைச் சொல்ல முடியாது.

ஹஸன் பஸ்ரி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் "பாத்திமா நாயகி இராக்கால முழுவதையும் இறைவனுடைய வணக்கத்திலேயே போக்கி விடுவார்கள்" என்று கூறுகிறார்கள்.

ஸல்மான் றலியல்லாஹு அன்ஹு சொல்லுவ தாவது:—நான் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உத்தரவுக் கிணங்க, பாத்திமா நாயகி யவர்களின் சமுகத்திற்குப் போயிருந்தபோது அவர்களது அருமைக் குழந்தைகள் ஹஸன் ஹுஸைன் இருவரும் படுத்துத் தூங்குகினார்கள். அவர்களுக்குக் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் கையால் விசிறிக் கொண்டும் நாவால் திருக் குர்ஆன் ஷரீபை ஓதிக் (திலாவத்து) கொண்டு மிருந்தார்கள். இதைப் பார்த்ததும் நான் பிரமித்துப் போனேன். சாதாரணமான ஸ்திரீகள் எவ்வளவோ சுகமாய் வாழ்ந்து வருகிறார்களே, றசூலுல்லாவுடைய புதல்வியார் வேலைச் சமயத்தும் தம் கஷ்டத்தை பாராட்டாமல் இறைவ னுடைய வசனத்தைத் தியானித்துக் கொண்டிருக்க வேண்டுமா எனச் சிந்திக்க லானேன்" என்றார்கள்.

அல்லுஷ் ஷுருபிஹ் என்னும் கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது:— ஒருநாள் ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வீட்டிற்குள் வந்த போது ஹஜ்ரத் பாத்திமா நாயகி ரொட்டி சுட்டுக்கொண்டிருக்கையிலேயே ஆண்டவனையும் தியானித்துக் கொண்டிருந்தார்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது.

சரித்திராதாசிரியர்கள் எழுதுகிறார்கள்:—

நரகலோக வேதனை சம்பந்தமான திருக் குருஆனின் ஆயத்து இறங்கிய போது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அழுத அழுகைக்கு அளவே கிடையாது. அவர்கள் அழுகையைக் கண்ட ஸஹாபாக்களும் சகிக்க முடியாமல் அழ ஆரம்பித்தார்கள். ஆனால் அவர்களில் ஒருவருக்காவது ஹஜ்ரத் அவர்கள் அழுவதன் காரணம் தெரியாமலிருந்தது. ஆனால் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அழுகையை எவ்வாறு தணிய வைப்பதென்று ஸஹாபாக்கள் பலவாறு யோசித்தபோது ஓரே ஒரு யோசனை அவர்களுக்கு உசிதமாகப் புலப்பட்டது, அதாவது:—

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்கள் துக்கமான எச் சமயத்திலுங் கூடப் பாத்திமா நாயகி யவர்களைப் பார்ப்பாரானால் ஒருவாறு சந்தோஷ மடையாம லிருக்க மாட்டார்கள். ஆகையால் நாயகி அவர்களை இச்சமயத்தில் அழைத்து வருதல் நல்லது என்றெண்ணி எல்லோரு மாகச்சேர்ந்து பாத்திமா நாயகி யவர்களுடைய வீட்டை நோக்கிச் சென்றார்கள். வீட்டை யடைந்ததும், ஸல்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அதனுள் சென்ற போது பாத்திமா நாயகி திருக் குர்ஆனில் ஓர் ஆயத்தைத் தியானித்துக்கொண்டே யாவறைத்துக் கொண்டிருப் பதைக் கண்டார்கள். கண்டதும் அவர்கள் சற்றும் தாமதியாமல் விஷயத்தைச் சொல்லி ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய சமுகத்திற்கு வந்து போகும்படி வேண்டிக் கொண்டார்கள்.

உடனே பாத்திமா நாயகி யவர்கள் எழுந்திருந்து தம்போர்வை (கம்பளி) யை எடுத்தார்கள். அப்போர்வைக்குச் சுமார் பன்னிரண்டு துண்டுகளுக்கு மேலதிக மாகவே ஒட்டு போடப் பட்டிருந்தது. இதைக்கண்ட ஸல்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், கைஸரும் கிஸ்ராவும் (முற்கால பாதுஷாக்கள்) பட்டு ஜருகையுடைய

ஆடைகளை உபயோகிக்கையில், கடைசிக் காலத்தினுடைய நம் நபி பெருமானரின் அருமைப் புதல்வி யாருக்குத்தானு இத்தகைய கிழிந்த கந்தைக் கம்பளம் புசிப்பாக வேண்டும்?'' என்று சொல்லிக் கொண்டு அழுதார்கள். பின்னர் எல்லோரும் சேர்ந்து ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தார்கள். ஆனுல் பாத்திமா நாயகி தம் தந்தையாரிடம் ''நான் இன்ன ஆயத்தை ஓதிக்கொண்டு மாவ்றைத்துக் கொண்டிருந்தேன். ஆண்டவன் பேரில் சத்தியமாக என்னிடமும் என்னுடைய கணவர் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களிடமும் ஐந்து வருட காலமாக ஆட்டுத் தோலைத் தவிர வேறு யாதொரு விரிப்பும் விரித்துப் படுப்பதற்குக் கிடையாது'' என்று கூறினுர்கள்.

இதைக் கேட்ட ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''என்னுடைய புதல்வி பாத்திமாவின் வறுமையைப் பற்றி ஸபர் செய்து கொண்டிருக்கும் பொறுமைக் குரிய நற்கூலி இறைவனிடம் அமாநிதமாயிருந்து வருவதாகும்'' என அருளினுர்கள். இதற்குப்பின் பாத்திமா நாயகி யவர்கள் தம் தந்தையா ரிடத்தில் தாங்கள் அழுத தற்குக் காரணம் யாது என வினவிய போது, ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புதிதாய் இறங்கியுள்ள திருக்குர்ஆனின் நாகவேதனை சம்பந்தமான ஆயத்தைப் பாத்திமா நாயகி யவர்களுக்கு எடுத்துக் கூறவே, அவர்களும் அதைக் கேட்டு அச்சத்தால் நடுங்கி, கீழே விழுந்து, அந்த ஆயத்தை மீள மீளவும் ஓதிக் கொண்டே அழுதார்கள். இறைவனுன அல்லாஹு தஆலாவுக்குப் பாத்திமா நாயகியவர்களுடைய நிலைமையின் பேரில் இரக்கம் யேற்படவே அவன், உடனே கிருபைக் குடைய ரஹமத்தான இரண்டாவது ஆயத்தையும் இறக்கிவைத்தான். தக்ஷணமே ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறைவனுக்கு ஷுக்கூர் செய்து நன்றி பாராட்டுதலுக் குரிய ஸஜதாவும் செய்து நிறைவேற்றினுர்கள்.

ஹஜ்ரத் இமாம் ஹஸன் றலியல்லாஹு அன்ஹு அவர்களால் அறிவிக்கப் படுகிறது:—என்னுடைய தாயார் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் இரவின் துவக்க முதல் பொழுதுதயமாகும்வரை முழு இரவும் இறைவன் ஸந்நிதானத்தில் இபாதத்துச்

செய்து கொண்டும் அழுத வண்ணமாக மிகத் தாழ்மையுடன் துவா கேட்டுக் கொண்டும் இரவைப் போக்க நான் பல தடவைகளிலும் என் கண்ணுரக் கண்டிருக்கிறேன். ஆனல் அவர்கள், தமக்காகச் சொந்தமாய் ஏதாவது துவாக் கேட்டதாக நான் ஒரு நாளும் கேட்டதுமில்லை, பார்த்தது மில்லை என்ருர்கள்.

ஜாபிர் அன்ஸாரி றலியல்லாஹு அன்ஹு அவர்களால் அறிவிக்கப் பட்டிருக்கிறது:— ஒருநாள் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாத்திமா நாயகியவர்களை ஒட்டகத்தின் தோலின் உடையை உடுத்துக் கொண்டு, வலக்கையால் மாவறைத்துக் கொண்டும் இடக்கையால் ஹஜ்ரத் இமாம் ஹஸன் அவர்களையணைத்துப் பாலூட்டிக்கொண்டு மிருக்கக் கண்டார்கள்.

இதைக் கண்டதும் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஆராத்துயர மேற்பட்டு அவர்கள் திருக்கண்களில் கண்ணீர் ததும்பப் பாத்திமா நாயகியை நோக்கி "பாத்திமாவே! உலக கஷ்டங்களைப் பொறுமையைக் கொண்டு அடக்கிக் கொள். கடைசி காலத்தினுடைய சந்தோஷ காத்திற்காக எதிர்பார்த்துக் கொண்டிரு" என்று திருவுளம் பற்றிஞர்கள்.

ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிருர்கள்:- "வீட்டுக் காரியங்களில் எனக்கு எச்சமயத்திலும் பாத்திமா றலி யல்லாஹு அன்ஹா அவர்கள் பால் எவ்விதக் குறையும் ஏற்பட்டிருக்க வில்லை." ஒரு தடவை மாவரைத்துப் பாத்திமா நாயகியின் கைகள் கொப்பளித்துப் போனதைக் கண்ட ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் "எமக்கு நீர் திருத்தியைச் சுமந்துச் சுமந்து தேகம் நோவடைந்து அலுத்துப் போயிற்று" என்ருர்கள்.

இச்சந்தர்ப்பத்தில் சில கைதிகள் ஜிஹாதில் (யுத்தத்தில்) பிடிக்கப்பட்டு ஹஜ்ரத் அவர்கள் சமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தமையால் அவர்களினின்றும் யாதொரு பெண் அடிமையை வீட்டு வேலைக்குக் கொடுத்துதவும் படியாய் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் போய் கேட்குமாறு ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பாத்திமா நாயகியிடம் சொல்லி அனுப்பிஞர்கள்.

பாத்திமா நாயகி தம் அருமைத் தந்தையார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்திற்குச் சென்று தன்னைப் பற்றியும்

தன் கணவரைப் பற்றியுமான நிலைமையை எடுத்துக் கூறி ஓர் அடிமையை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். அதற்கு ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அளித்த பதிலாவது:— பாத்திமாவே! இச்சமயம் பள்ளி வாசலிலிருந்து வரும் 400 பேர்களுக்குத் தின்னத் தீனியும் அணிய வஸ்திரமும் கிடையாது. ஆகையால் வீட்டுக் காரியங்களை நீங்களே வழக்கப்படி உங்கள் கைப்பட செய்து கொள்ளுங்கள்:— மேலும் நீர் மனைவி என்ற அந்தஸ்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கு இதுவே ஏற்ற லக்ஷணமாகும். ஏனெனில், நாளை கியாமத்தில் அலி றலியல்லாஹு அன்ஹு, உன்னால் அவருக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளைக் கேட்பாராயின் என்ன சொல்லுவாய்?

"மகளே! நான் றசூலுல்லாவுடைய புதல்வியாய் விட்டேன் என்ற பதவிக்கு மட்டும் மனதில் இடங் கொடாதே, அல்லது அத்தகைய பெருமையைப் பாராட்டி எனக்கு கியாம நாளில் கேள்வி கணக்கு ஏது என்றும் எண்ணி விடாதே! எல்லாம் வல்ல இறைவனுடைய தத்துவத்திற்கு அளவுகிடையாது. ஏழை, தனவந்தன், மேற்குலம், கீழ்க் குலம் என்ற பேதம் அங்கே பாராட்டப்படமாட்டா. ஒவ்வொருவரும் தத்தம் அமலுகளுக்குக் கணக்குக் கொடுத்தே தீரவேண்டும்" என்று திருவுளமானார்கள்.

பாத்திமா நாயகி இத்தகைய உபதேசங்களைத் தம் தந்தையார் வாயிலாகக் கேட்கும் போதெல்லாம் ஓயாது அழுது மேற்கொண்ட பற்றுடன் இபாதத்தில் அமர்ந்து போவார்கள். எந்நேரமும் அல்லா றசூலுடைய அச்சம் அவரை விட்டும் அகலாது.

பாத்திமா நாயகியின் வீட்டிலுள்ள செல்வமோ வென்றால் பொறுமையும் இறைவனுக்கு நன்றி பாராட்டுதலுமே யாகும். அவருடைய வீட்டிலோ பெரும்பாலும் பலநாட்கள் வரை அடுப்பில் தீ மூட்டவும் படமாட்டாது. இச்சமயத்திலுங்கூட அவரும் அவரது கணவர் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களும் பசி வருத்தத்தைச் சகித்துக் கொண்டு இறைவனுடைய இபாதத்தில் சற்றும் பின்னடையாது நடந்து கொள்வார்களே யன்றி உலக சுகத்தைப்பற்றிக் கிஞ்சித்தும் லக்ஷியம் செய்தது கிடையாது.

அன்னார் (பாத்திமா நாயகி) யார் என்று கவனித்துப் பார்த்தாலோ அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹு உடைய மனைவியாரும்,

இருலோகத்திற்கும் பாதுஷா வாகிய முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அரிய புதல்வியு மாவார். இவர்கள், தங்கள் கைப்படவே திரிகையில் மாவறைத்துக் கொள்ளவும், தங்கள் கைப்படவே, வீட்டு அலுவல்களைச் செய்து கொள்ளவும் வேண்டுமானால், அது எது மட்டில் வியப் படைபத் தக்க விஷயமாகும்?

ஆனால் இறைவனுடைய சொந்த அடியார்களுக்கு உழைப் பின் காரணமாக பிரத்தியேகமாய் இறைவனன்பு ஏற்பட்டுப்போவதால் அவர்கள் உலக கஷ்டங்கள் யாவும் சில நாளுக்குரியன வென்பதை யுணர்ந்து உலக சுகானுபவங்களைப் பொருட் படுத்தாமலும் தாங்கள் கொண்டுள்ள முதிர்ந்த ஈமானின் ஆதரவில் இறைவன் தங்களுக்கு கியாம நாளில் அருள் புரிவதாய் வாக்களித் துள்ள நிஃமத்துக ளென்னும் நன் கொடைகளைத் தாங்கள் உலகத்திலே தங்கள் கண்களைக்கொண்டு பார்ப்பதாகவும் நினைக்கக் கூடிய வாறு, அவ்வளவு பற்றுடையவர்களாகிறார்கள் நோன்பு திறப்போம் என்ற சந்தோஷத்தின் பேரில் நோன்பாளிகள் நோன்பின் கொடுமைகளைச் சகித்துக் கொண்டு போவது போல் அவர்கள் பூலோகத்திலுள்ள சொற்ப வாழ்க்கையின் கஷ்டங்களை மறுமையிலுள்ள சந்தோஷத்தின் காரணமாக உற்சாகத்துடனேயே சகித்துக் கொள்ளுகிறார்கள்.

---

## 10-வது அத்தியாயம்

### றசூலுல்லாவுக்கு பாத்திமா நாயகியின் பால் இருந்து வந்த அன்பைப் பற்றியது.

நம் பெருமானார் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குத் தம் புதல்வியாகிய பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களிடத்து விசேஷ அன்பு ஏற்பட்டிருந்ததற் கிணங்கவே, பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கும் தம் தந்தையார் பால் இருந்து வந்த அன்பிற்கு அளவே கிடையாது. உஹதுடைய யுத்தத்தில் றசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காய மடைந்தபோது மதீனா முனவ்வராவுடைய வீதிகளடங்கிலும் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஷஹீதாய் விட்டார்கள் என்ற பொய் வதந்தியே விரோதிகளால் பரவப் பட்டுப் போயிற்று. இதைக் கேட்ட மதீனாவிலுள்ள 14. மாதர்கள்

தக்ஷணமே புறப்பட்டு (உண்மை யறிவதற்காக) போர்க்களத்தை நோக்கிச் சென்றார்கள். அந்தப் பதினன்கு மாதரில் பாத்திமா நாயகி யும் ஒருவராவார். ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் கள் போர்க்களத்தில் காய மடைந்து பிரக்ஞை யற்றுக் கிடப்பதைக் கண்ட பாத்திமா நாயகி யவர்கள், தம் அருமைத் தங்கையாரிடம் உட் கார்ந்து அவர்களுடைய சிரசைத் தமது மடியில் (கணுக்கால்களின் பேரில்) மெதுவாகத் தூக்கி வைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தார் கள்.

ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கேடயத்தில் தண்ணீர் நிரப்பிக் கொண்டு வரவே பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய முகத்திலுள்ள அழுக்கையும் காயங்களையும் கழுவிக் கொண்டு அவர்களுடைய ரணங்களின் மீது, பாயை எரிய வைத்த சாம்பலைத் தூவிக்கொண்டிருந்தார்கள். ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நல்ல தெளிவு ஏற்பட்டபோது அவர்கள் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) தம்மைப் பார்க்க வந்த எல்லோருக்கும் பல ஆறுதலான மொழிகளைக் கூறி அனுப்பி விட் டார்கள்.

அதிகாலையில் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுது கொள்வதற்காகப் பள்ளிவாசலுக்கு (நப்விப் பள் ளிக்கு) வரும் சமயம் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் திரிகை யறைத்துக் கொண்டிருக்கும் சப்தம் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக்கேட்டு விடுமானல், உடனே ஹஜ் ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாத்திமா நாயகிக் காக, "இறைவனே! பாத்திமாவுடைய பிரயாசைக்கும் அவருடைய பொறுமைக்கும் நீ நற்கூலியைக் கொடுத்து அவர், எளிமையிலேயே திருப்தி யடையத் தக்க எண்ணத்தை அவருக்கு அருள் புரிவாயாக, என்று துஆ கேட்பார்கள்.

ஒருநாள் றசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் கள் பள்ளியில் உட்கார்ந்து கொண்டிருக்கும் போது ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன்வந்து அவர்களது பாதங் களைத் தொட்டு முத்த மிட்டு உட்காரப்போகும் சமயம் ஹஜ்ரத் ஸல்

லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்பார்த்து "அலியாரே! நீர் என்றைக்காவது எம்மைப் பார்த்ததுண்டா?" என்று வினவினார்கள். அதற்கு அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் "ஓ ஆண்டவனுடைய றசூலே! நான் தங்களை எப்படி பார்க்க வேண்டுமோ அப்படியே பார்த்து வருகிறேன். உஹதுடைய யுத்தத்திலும், பதருடைய யுத்தத்திலும், ஹுனைனுடைய யுத்தத்திலும் பார்த்து வந்திருக்கிறேன். யுத்த களத்தில் தங்களுக்கு ஏற்படும் வீரதீரத்தையும் தாங்கள் நபி என்பதற்குரிய அடையாளங்களையும் நான் கண்ணுற்றிருக்கின்றேன். என்னுடைய நல்லதிர்ஷ்ட வசமாய் நான் சதா தங்களுடைய தோழமையிலிருந்து வருவதன் காரணமாகவும் தங்களை எச்சமயத்தும் பார்த்தவண்ணமாகவே இருந்துவருகிறேன்" என்று பதிலளித்தார்கள். அப்போது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "ஓ அலியே! நீர் சொல்வது சரியன்று; நீர் எம்மைப்பார்த்ததே கிடையாது; கிடையாது!!" என்று மொழிந்தார்கள்.

இதைக்கேட்ட ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திடுக்கிட்டுப்போய் விசேஷ சஞ்சலமடைந்தார்கள். அவர்கள் அடைந்துள்ள சஞ்சலமானது அளவு கடந்து விட்டமையால் அவர்கள் சிறிது நேரத்திற்கெல்லாம் ஜுரத்தினால் பீடிக்கப்பட்டு வீடு வந்து சேர்ந்தார்கள். வீடு வந்து சேர்ந்ததும் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய மொழிகளைப் பாத்திமா நாயகியிடத்தில் தெரிவித்துவிட்டு உட்கார்ந்து, சக்தியில்லாமல் படுத்துக்கொண்டார்கள். பாத்திமா நாயகி ஓர் கம்பளியை அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மீது போர்த்துவிட்டு, ஓர் வெள்ளாட்டியை அழைத்து "நீ என் தந்தையாரிடம் போய் அவர்களுக்குச் சாவகாசமிருக்கும் பட்சத்தில் சொற்ப நேரத்திற்கு இங்கு வந்து விட்டுப்போகும்படி நான் கேட்டுக் கொண்டதாகச் சொல்லு" எனச்சொல்லி யனுப்பினார்கள்.

அவ்வாறே அந்த வெள்ளாட்டி ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து தெரிவித்தவுடன் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தக்ஷணமே எழுந்திருந்து பாத்திமா நாயகிடம் போய் என்ன சங்கதியென விசாரித்தபோது, பாத்திமா நாயகி,

"தந்தையாரே! தாங்கள் இன்று என் கணவராகிய அலி றலியல் லாஹு அன்ஹு அவர்களுக்கு மனமுறிவை யுண்டாக்கிவிட்டீர்கள். இதோ அவர்கள் அது நிமித்தம் ஜுரத்தினால்கஷ்டப்பட்டுக் கொண் டிருக்கிறார்கள். தாங்கள் எனக்காகவேண்டி அவர்களுக்குரிய பரிகாரம் செய்யுங்கள்" என்றார்கள்.

ஹஜ்ரத் றசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் கள் அதே சமயம் முற்றத்தில் நின்றுகொண்டு தங்கள் முபாரக்கான இர் கரத்தைப் பாத்திமா நாயகியவர்களுடைய தோளின்மேல் வைத் துக்கொண்டு "அலியே! வாரும் இந்தக்கையின்கீழாக எம்மைத் தரிசித் துக்கொள்ளும்" எனத் திருவுளமானவுடன் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுந்து வந்து ஹஜ்ரத் அவர்களைக் கண்ணுற்ற க்ஷணமே பிரக்ஞையற்று விழுந்து விட்டார்கள். வெகு நேரத்திற் கப் பால் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத் தெளிவு யேற் பட்டபோது அவர்கள் "ஓ அல்லாவுடைய றசூலே! தடையின்றி நான் இதற்கு முன் தங்களை இப்பதவியில் பார்த்தது கிடையாது" என்றார்.

இதனின்றும் தெரியவரும் உண்மையாவது:— ஹஜ்ரத் ஸல் லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தம்மருமைப் புதல்வியாகிய பாத்திமா நாயகியின் பேரில் வைத்துள்ள அன்பைப் பாராட்டி அவர் கள் எந்த விஷயத்தில் சிபார்சு செய்த போதிலும் அந்த விஷயத்தை அவசியம் நிறைவேற்றி வைப்பார்கள்-என்பதாகும்.

பாத்திமா நாயகி தம் தந்தையாரின் கண்ணுக்குக் கண்ணாகவும் சஞ்சலமுள்ளவர்களின் சஞ்சலத்தை நிவர்த்தியாக்கி வைப்பவர் களாயு மிருந்து வந்தார்கள். நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் கள் பாத்திமா என்னுடைய இருதயத்திற் கொப்பாவார் என மொழிந் திருக்கிறார்கள். இன்னும் (வஅன்திர் அஷீறத்தகல் அக்றபீன்) என் னும் சங்கையின் ஆயத்து இறங்கியபோது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களுடைய குலத்தார்களையும் ஏனைய சமூகத்தார்களையும் ஒன்று கூட்டித் தாங்கள் தீர்க்கதரிசி என்னும் தோரணையில் உபதேசிக்கிறார்கள்:—

எனது அன்பார்ந்த குறைஷியர்களே! அப்துல் முத்தலிபுடைய சந்ததியார்களே! ஓ முஹம்மதுடைய புதல்வி யாகிய பாத்திமாவே! நீங்கள் எல்லோரும் தங்களைத் தாமே நரகலோகத்தின் அக்கினியை

விட்டும் தப்ப உதவி தேடிக் கொள்ளுங்கள். ஏனெனில் கியாமத் நாளில் (இறுதிநாளில்) ஒருவர் மற்ளுருவருக்கு ஒத்தாசை செய்ய முடியாது'' என்று திருவுளம் பற்றினார்கள்.

உம்மெஸல்மா றலியல்லாஹு அன்ஹு அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது:-ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஓர் இரவு படுக்கையை விட்டும் எழுந்திருந்து ''சுப்ஹானல்லா! வானலோகத் தினின்றும் சண்டை சச்சரவுகள் யாவும் அகன்று விட்டன; கிருபா கடாட்சத்திற் குரிய பொக்கிஷக் கதவுகள் திறந்து போய் விட்டன; கற்களின் மீது தூங்கிக் கொண்டிருப்பவர்களுக்கும் துப்புரவான மனைவி மார்களுக்கும் இடம் விடுங்கள். ஏனெனில் உலகத்தின் கண் அநேக வஸ்திரங்களை அணிந்து கொள்ளும். ஸ்திரீகள் கடைசி நாளில் வெற்றுடம்பாகப் புலப்படுவார்-என்று திருவருள் புரிந்தார்கள்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஓர் இரவு பாத்திமா நாயகியுடைய வீட்டிற்கு வந்து பாத்திமாவையும் அலியாரையும் நோக்கி ''நீங்கள் என் தஹஜ்ஜுத் தொழுது கொள்வதில்லை?'' என்று கேட்டார்கள். அதற்கு அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஓ! அல்லாவுடைய றசூலே! எங்களுடைய நித்திரையும், விழிப்பும் அல்லாவுடைய வசத்திலாகும். அவன் விழிக்கச் செய்வானுனல் விழித்துக் கொள்கிறோம்'' என்று பதில் கூறினார்கள்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இப் பதிலைக் கேட்டு வாய் மூடிக் கொண்டார்கள். ஆனால் மிக்க பரிதாபத்துடன் (கானல் இன்ஸானு அக்ஸற ஷையின் ஜதலா) என்னும் ஆயத்தை ஓதினார்கள். (அருத்தம்) மனிதன் பெரிய தர்க்க வாதியாகிருன் என்பதாகும்.

ஸஹீஹைனில் வந்திருக்கிறது:—

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய நம்பிராட்டி மார்களின் சேவைகளில் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் ஹஜ்ரத் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களது சேவையின் முறை வரும்போதெல்லாம் முஸ்லிம்கள் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய சமுகத்திற்குப் பற்பல வெகுமதிகளை யனுப்பி வருவார்கள். இதைப்

பற்றி இதர நம்பிராட்டி மார்கள் எல்லோருங் கூடிப் பாத்திமா நாயகி யிடம் நீங்கள் றசூலுல்லா விடம் போய் "ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களின் சேவையின் முறையின் போது வரக்கூடிய வெகுமதிகளைப் போன்ற வெகுமதிகள் எங்களுடைய சேவையின் முறைகளிலும் வரவேண்டும் என்று சொல்லுங்கள்" எனச் சொல்லி அனுப்பினார்கள். அதுபோல் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா, அவர்கள் தாய் மார்களின் உத்தரவின்படி தம் தந்தையாரிடம் சென்று விஷயத்தை அறிவித்த போது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "மகளே! முஸ்லிம்களுக்கு நான் சொல்லி அவர்கள் வெகுமதிகளை யனுப்புவதாக எண்ணாதே; ஆயி ஷாவுடைய சேவையின்போது அவர்களே தங்கள் இஷ்டத்திற் கிணங்கவே அனுப்பிவருகிறார்கள். நான் அவர்களை அவ்வெகு மதிகளை யனுப்ப வேண்டாமென்று தடுக்க விரும்பாததற் கிணங்கவே அவற்றை அனுப்ப வேண்டு மென்றும் அவர்களைக்கேட்டு வற்புறுத்து வது மில்லை. ஆனல் என்ன; நான் நேசிப்பவரை நீங்கள் நேசிக்க வேண்டாமா?" எனக் கேட்டதற்குப் பாத்திமா நாயகி "தடையின்றி நான் நேசிக்கிறேன்" என்றார்கள். கருத்தாவது ஆயிஷா றலியல் லாஹு அன்ஹாவை நேசிக்கும்படி அருளினார்கள்.

ஒருதடவை ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களு க்கும் பாத்திமா நாயகி யவர்களுக்கு மிடையில் ஏதோ சொல்ப மனஸ் ஸ்தாப மேற்பட்டு விட்டதாக ஹஜ்ரத் அவர்களுக்குத் தகவல் கிடைத் தது. அதன்பேரில் ஹஜ்ரத் அவர்கள் மிக்க கவலையுள்ளவர்களாய் பாத்திமா நாயகி யுடைய வீட்டிற்குச் சென்று பாத்திமாவுக்கும் அலி க்குமிடையில் சமாதான மேற்படும் வரையில் அங்குத் தங்கியிருந்து அவ்விருவருக்குள் சமாதான மேற்பட்டதன் பேரில் ஹஜ்ரத் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அளவற்ற சந்தோஷத்துட னும் பெரும் மகிழ்ச்சியுடனும் வெளியே வந்தார்கள். அதைக் கண்ட ஜனங்கள் அவர்களது மகிழ்ச்சிக்குக் காரணம் என்ன வென வினவியபோது ஹஜ்ரத் அவர்கள் "நான் உலகத்திலே எனக்கு எல்லோரிலும் பிரியமுள்ள இரண்டு பேர்களுக் கிடையில் தற்செயலாய் ஏற்பட்ட மனஸ்தாபத்தை யொழித்து அவர்களுக் குள் சமாதானத்தை யுண்டுபண்ணி விட்டு வருகிறேன்" என்றார்கள்.

ஒரு தடவை ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அபூஜெஹலுடைய மகளை நிக்காஹ் செய்து கொள்ளச் சம்மதித்த

போது பெண் வீட்டார், ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இந்த விஷயத்தில் அதிருப்தி யேற்படுமோ வென நினைத்து, ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடத்தில் யோசனை கேட்க வந்தார்கள். பாத்திமா நாயகியும் இதைப் பற்றி வருத்தப்பட்டுத் தம் தந்தையார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் "பார்த்தீர்களா? எவர்களும் தங்களுடைய பெண் மக்கள் பேரில் எப்பவும் உதவியாகவே யிருக்கிறார்கள். தாங்கள் மட்டிலும் என்னைக் கொஞ்சமும் கவனிக்கிறீர்களில்லை. இப்போது அபூ ஜெஹலுடைய மகளை நமது அலி றலியல்லாஹு அன்ஹுவுக்கு நிக்காஹ் செய்து வைத்து என்னோடு முட்ட வைக்க நினைக்கிறார்கள்'' என்று முறையிட்டார்கள். இதைக்கேட்டதும் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கொடிய துயர மேற்பட்டது. ஆதலால், அவர்கள் பள்ளி வாசலுக்குள் போய் மிம்பர் என்னும் உபதேச மேடையின் மீதேறி, ஜனங்களை நோக்கித் திருவுள மானதாவது:—

ஹிஷா முப்னுல் முகைறுவின் வம்சத்தார், தங்கள் புதல்வியை அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நிக்காஹ் செய்து கொடுக்கும் விஷயமாக என்னுடைய அபிப் பிராயத்தைக் கேட்க என்னிடத்திற்கு வந்திருக்கிறார்கள். நானோ வெனில் அவர்களுக்கு அனுமதியளிக்க மாட்டேன். ஏனென்றால், அல்லா றசூலுடைய சத்துரு (அபூஜெஹல்) வின் மகள் அல்லாவுடைய றசூலின் மகளுடன் ஒரே வீட்டிலிருந்து கொண்டு வாழ்தல் சாத்தியமான காரியமன்று. ஓ ஜனங்களே! பாத்திமா என்னுடைய பிராணனுக் கொப்பாவார். ஆதலால் அவருடைய சந்தோஷம் என்னுடைய சந்தோஷமாகவும் அவருடைய வருத்தம் என் வருத்தமாகவும் பாவிக்கப்படும் என்பதை நன்குணர்ந்துகொள்ளுங்கள்'' என்று திருவுளமானார்கள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள், (பாத்திமா நாயகி உயிரோடிருந்த காலம் வரை) இரண்டாவது நிக்காஹ் செய்யவேண்டும் என்ற எண்ணத்தை அன்று முதல் ஒழித்து விட்டார்கள்.

ஹஜ்ரத் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களால் அறிவிக்கப்படுகிறது:— நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வபாத்தாவதற்குச்(இறப்பதற்கு) சில தினங்களுக்கு முன்

நாங்களெல்லோரும் வீட்டிலிருந்து வந்த காலத்திலேயே பாத்திமா நாயகி நம் வீட்டிற்கு வந்தார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவரை வழக்கப்படி அன்பாய் வரவேற்று உட்கார வைத்தார்கள். பின்பு தாங்கள் பாத்திமாவுடைய செவிகளில் ஏதோ ஓர் இரகசிய விஷயத்தை மூன்றும் பேருக்குக் கேட்கக் கூடாத விதத்தில் மொழியவே, பாத்திமா அழ ஆரம்பித்தார். மறுதடவை அவர்கள் அதே விதமாக ஏதோ மொழிந்த போது பாத்திமா சிரிக்கத் தொடங்கினார் என்பதைக் கண்ட எனக்குப் பெரும் ஆச்சரியமேற்பட்டது. அப்போது நான் பாத்திமாவை நோக்கி "அது எத்தகைய விஷயம்?" எனக்கேட்ட போது, அவர் (பாத்திமா) "றசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இரகசியமாய்ச் சொல்லிய விஷயத்தை நான் எப்படி பகிரங்கப்படுத்துவது" என்று ஒரு விதமாகப் பதில் கூறி விட்டமையால் நான் அதைப்பற்றி அப்போது அவரைச் சொல்லத்தான் வேண்டுமென வற்புறுத்திக் கேட்கவில்லை. ஆயினும் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வபாத் அடைந்ததற்குப் பின் நான் பாத்திமாவிடம் "ஓ பாத்திமாவே! ஹஜ்ரத் அவர்களுடைய வாழ்நாட்குரிய காலமோ கடந்து போய் விட்டமையால் அந்த இரகசியம் என்னவென்பதை இப்போது நீர் எனக்குச் சொல்லலாமே" என்றேன்.

பாத்திமா அதற்குச் சம்மதித்து என்னிடம் சொல்லுவார்:-என் அருமைத் தந்தையார் என் செவிகளில் அன்று மொழிந்ததாவது:— ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் ரமலான் மாதத்தில் என்னிடத்திற்கு வந்து திருகுருஆனை ஒரே ஒரு தடவை ஓத வைப்பது வழக்கமாகயிருந்து வருகையில் இவ்வருஷம் அவர்கள் இரண்டு தடவை என்னை ஓத வைத்தார்கள் என்பதைக் கவனிக்குமிடத்து என்னுடைய வபாத்தின் (மரணம்) காலம் நெருங்கி விட்டதென்றே கூற வேண்டும்" என்று அருளினார்கள்.

இதைக் கேட்டதனால்தான் நான் அழ நேர்ந்தது. பின்னர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் 'நான் வபாத்தான தற்குப்பின் நம்முடைய பந்து ஜனங்களில் எல்லோருக்கு முந்தி வபாத் ஆகி என்னிடம் வரப்போகிற வர்களில் நீயே முதன்மையாவாய். நீயே சுவர்க்க மாதர்களுக்கிடையில், தலைமை வகிப்பாய், எனக்கூறியதைக் கேட்டு நான் சந்தோஷத்துடன் சிரிக்கலானேன்" என்றார்கள். ஹஜ்

ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், தங்கள் புதல்வியாருடன் எவ்வளவு அன்பாயிருந்து வந்தார்களோ அவ்வாறே தங்கள் மருமகனுகிய அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரிலும், பேரப் பிள்ளைகளான ஹஜ்ரத் ஹஸன், ஹஜ்ரத் ஹுஸேன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரிலும் அன்பு காட்டி வந்தார்கள். மேலும் ஹஜ்ரத் ஸல்லலலாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், "என்னுடைய நண்பன், அலியுடைய நண்பனுவான்" என்றும் சில சமயங்களில் "ஓ அலியே! நீர் இம்மையிலும் மறுமையிலும் எனக்குச் சகோதரராவீரா?" என்றும் அருள்வார்கள். அவர்கள் தங்கள் பேரப் பிள்ளைகளைச் சில வேளைகளில் தங்கள் தோளின் பேரிலும், சில வேளைகளில் தங்கள் மடியிலும் உட்காரவைத்து அவ்விருவரையும் பார்த்துப் பார்த்து பேரானந்தமடைவார்கள்.

ஒரு நாள் தாங்கள் பாத்திமா நாயகி யுடைய வீட்டிற்கு வந்தபோது பாத்திமா நாயகி படுத்துக் கொண்டிருந்தார்கள். ஹுஸேன் றலி யல்லாஹு அன்ஹு குடிக்கத் தண்ணீர் கேட்டார். ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுந்து போய் தண்ணீர் மொண்டு ஹுசேனுக்கு பருகச் செய்யுந் தறுவாயில் ஹஸன் அத் தண்ணீரைத் தனக்குக் கொடுக்க வேண்டுமென நெருங்கிக் கேட்டா ராயினும் தாங்கள் ஹஸனை அப்புறப் படுத்தி விட்டு அத் தண்ணீரை ஹுஸேனுக்கே கொடுத்து விட்டார்கள். இதை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பாத்திமா நாயகி யவர்கள், ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் "தந்தையாரே! தங்களுக்கு ஹுஸேனிடத்தில் தான் அதிகப்பிரியமோ?" என்றுகேட்டதற்கு, 'கிடையாது. எனக்கு இருவரும் சமமே யாவர். ஆனல் ஹுஸேன் தான் முதலில் தண்ணீர் கேட்டமையால் நான் அதை அவருக்குக் கொடுத்தேன்" என்று பதிலளித்துவிட்டு, "ஓ பாத்திமாவே! நீரும் உம்முடைய கணவரும் உம்முடைய பிள்ளைகளும் எல்லோருமாக என்னுடன் சுவர்க்கத்தி லிருந்து வருவீர்கள்" என்றூர்கள்; ஒருபோது "பாத்திமா என்னுடையபூவாயிருக்கும்" என்றும் அருளினூர்கள்.

ஹஜ்ரத் ஆயிஷா றலி யல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுவதாவது:—"நான் றசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்களுக்குப் பின், என் பார்வையில் பாத்திமா நாயகியைப் பார்க்கி லும் வேறொருவரையும் அவ்வளவு நல்லவராகக் காண வில்லை என்று கூறி யிருக்கிறார்கள். ஒரு தடவை ஹஜ்ரத் ஆயிஷா றலி யல்லாஹு அன்ஹாவிடத்தில், ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு, யார் மீது அதிகப் பிரிய மிருந்து வந்தது என ஒருவர் விசாரித்ததற்கு அவர்கள் (ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா) பாத்திமா நாயகியின் பேரிலேயே அதிகப் பிரிய மேற்பட்டிருந்ததாகக் கூறினார்கள்.

---

## 11-வது அத்தியாயம்

### பாத்திமா நாயகியின் துவா கபூலாகுதல்

பாத்திமா நாயகி யவர்களின் அளவு கடந்த வணக்கத்தின் காரணமாகவும் வணக்க சேவையில் அவர்கள் எடுத்துள்ள அரிய சிரத்தையின் பயனாகவும் இறைவனிடத்தில் அவர்கள் எத்தகைய நன்மைக்குரிய துவா கேட்டு வருவார்களோ அது உடனே கபூலாய் விடும். (இறைவனுடைய சந்நி தானத்தில் அங்கீ கரிக்கப் பட்டுப்போம்)

ஒரு பெருநாளன்று பாத்திமா நாயகி யவர்கள் வழக்கப்படி காலைத் தொழுகையை நிறைவேற்றித் திரிகை யறைத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களது அருமைக் கண்மணிகளான ஹஸன், ஹுஸேன் இருவரும் வீட்டிற்கு வெளியில் விளையாடிக் கொண்டிருந்தனர். விளையாடிக் கொண்டிருந்த அவர்களுக்கு, அன்று பெருநாள் என்ற செய்தி எப்படியோ தெரிந்து போயிற்று. உடனே அவ்விருவரும் ஓடி வந்து வீட்டிற்குள் நுழைந்து தம் தாயாராகிய பாத்திமா நாயகியைக் கட்டியணைத்துக் கேட்கிறதாவது:—

அம்மா! இன்று பெருநாள் என்பது உங்களுக்குத் தெரியாதோ? சீமான் முதல் ஏழைப் பக்கிரிவரையில் யாவருமே சந்தோஷங் கொண்டாடுவார்களே! இன்றைய தினம் எங்கள் பாட்டனாருடைய உம்மத்திலுள்ளவர்களுக்கு விசேஷ கொண்டாட்டத் தினமன்றோ? இன்றைய குத்பாவில் எங்கள் பாட்டனாரவர்களின் பெயரும் சேர்த்து ஓதப்படுமே! குரைஷியர்கள் நல்ல நல்ல புதிய உடைகளை உடுத்துக்கொண்டும் பலவித வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொண்டும் வெகு உல்லாசமாக நடமாடிக்கொண்டும், ஒட்டகைகளின் பேரில் ஏறிக்கொண்டும்

போவார்கள்; ஒட்டகங்களை அலங்கரிப்பார்கள்; அவற்றிற்குப் பலவித ஆபரணங்களையும் போடுவார்கள். அப்படி யிருக்கும்போது நாங்கள் மட்டும் இவ்வித கேவல நிலைமையில் இருந்து விடுவானேன்? எங்களுக்கும் நல்ல புதிய உடைகளை அணியுங்கள். நாங்களும் பெருநாள் தொழுகை தொழுகவேண்டிய ஸ்தலத்திற்குப் போய் தொழுதுவருகிறோம்'' என்றார்கள்.

இதைக்கேட்ட சையதா(பாத்திமா நாயகி)வுக்கு அளவற்ற மனத்துயர மேற்பட்டதன்பேரில் அவர்கள் ''இப்போது என்ன செய்வது எங்கேபோய் இவர்களுக்காக உடைகளைக் கொண்டுவருவது'' என்பதைப்பற்றித் தனக்குள் சிந்திக்கலானார்கள். அந்தரங்கத்தில் அவர்களுக்கு வருத்த மேற்பட்ட தாயினும் பிள்ளைகளுக்குச் சமாதானம் செய்யும் வழியில் அவர்கள் அவ்விருவருக்கும் பலவித ஆறுதலான மொழிகளைச் சொல்லிச் கடைசியாகப் பாத்திமா நாயகி தம் பிள்ளைகளைப் பார்த்து ''இருக்கட்டும் சற்றுப் பொறுங்கள். நான் இந்த மாவை அறைத்துக்கொண்ட பிறகு உங்களுக்குப் புதிய உடைகளை உடுத்து வைக்கிறேன்'' என்று கூறினார்கள்.

பிள்ளைகளுக்கோ தம் தாயாருடைய வார்த்தைகளினால் சமாதான மேற்படாமற் போகவே அவர்கள் ஒரே பிடிவாதமாய் அழத் தொடங்கினார்கள். பாத்திமா நாயகிக்குக் கடைசியாக பிள்ளைகளுடைய மனத்துயரம் சகிக்கமுடியாமற் போகவே, அவர்கள் திரிகையறைப்பதை நிறுத்திவிட்டு ''சரி இப்போது நீங்கள் போய்க் குளித்துவிட்டு வாருங்கள். நீங்கள் வருவதற்குள் தையற்காரனிடம் உங்களுக்காக தைக்கக் கொடுத்த துணி மணிகள் தைத்து வந்து விடும் அவற்றைக் கொண்டு உங்களுக்கு அணிய வைக்கிறேன்'' எனத் தேருதல் சொல்லி யனுப்பினார்கள்.

பிள்ளைகள் குளிக்கப் போனவுடன், பாத்திமா நாயகி தொழுகை விரிப்பை விரித்து அதன்பேரில் உட்கார்ந்து அழுது இறைவனிடத்தில் தம் மனத் துயரத்தை வெளியிட்டுத் துவா கேட்க ஆரம்பித்தார்கள். அதாவது ''இறைவனே! என்னுடைய மானமும் சங்கையும் உன்னுடைய வசத்திலுள்ளனவாகும்,-உன்னுடைய நபியின் பேரப்பிள்ளைகளுக்கு மனஆறுதலை யுண்டாக்கிவை. உன்னைத் தவிர எனக்கு வேறு கதியில்லை. நான் என்னுடைய பிள்ளைகளுக்குக் காட்டிய ஆசைகளை

நிறைவேற்றி வைப்பதற்கு இறைவனே! நீயே எனக்கு ஆதரவளிக்க வேண்டும். ஆண்டவனே! நீயே சக்ரவர்த்திகளுக் கெல்லாம் பெரிய சக்ரவர்த்தியாக இருப்பதுடன் உன்னுடைய கிருபா கடாட்சத்தின் பாக்கியமாகக் கோடான கோடி ஜீவர்கள் தம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுகின்றனர். இறைவனே! ஹஸன் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுமா இவர்களும் பெருநாளைக்காகத் தமக்குப் புதிய உடைகளை உடுத்து விடும்படி அழுகிறார்கள். எனக்கோ ஒட்டுத் துண்டுகள் போடப்பட்ட போர்வையும் கிடைத்தல் அரிதா யிருக்கிறது. இந்த அரியாத குழந்தைகள் பேரில் இரக்கம் பாராட்டி உன்னுடைய அந்தரங்க பொக்கிஷத்திலிருந்து அவர்களுக்காக ஏதேனும் உடைகளை அருள்புரிந்து வைப்பாயாக. இறைவனே! இவ்விருவரும் உன்னுடைய றசூலின் பேரப் பிள்ளைகள் என்பதை நீ அறிவாய். உன்னுடைய கிருபையின் பாக்கியமாக நீ அவர்களுடைய மனதைச் சந்தோஷப்படுத்தி வைப்பாயாக! ஆண்டவனே! இவ்விரு அரியாக் குழந்தைகளும் உன்னுடைய ரசூலுக்கு இருதயத்திற் கொப்பானவர்களா யிருந்து வருவதற்கிணங்கவே எனக்கும் என்னுடைய கணவனாகிய அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் கண்மணிகளாக இருந்து வருகிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் நீ அவர்கள் பேரில் இரக்கங் கொள்ளாவிட்டால் அவர்களுடைய மனம் முறிவுகொண்டுபோகும். அவர்கள் பெருநாள் தொழுகை ஸ்தலத்திற்குச் செல்லுவார்களாயினும் அலங்கரித்துக்கொண்டுவரும் குறைஷியர்களின் பிள்ளைகள் இவர்களைக் கண்டு ஏளனம் செய்வார்கள். இழிவு படுத்துவார்கள்.

ஆண்டவனே! நான் இதுகாறும் உன்னுடைய சந்நிதானத்தில் எனக்குரிய எவ்வித உலக அவசியங்களையும் வேண்டுமெனக் கேட்டவளல்ல. இதோ ஹஸன் ஹுஸேனுக் காகவே உன்னுடைய பொக்கிஷக் கதவைத் தட்டுகிறேன். என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றி வைப்பாயாக!" என்றார்கள்.

பாத்திமா நாயகியவர்களுடைய துவா முடிவடைவதற்கு முன்னமே, வாயிற்படியின் மீது ஒருவர் தஸ்தக் (கைதட்டி அழைத்தல்) செய்யும் சப்தத்துடனேயே உரத்துக் கூவி "இதோ இந்தத் துணிகளைக் கொண்டுபோங்கள்" என்றார்.

பிள்ளைகள் இச்சப்தத்தைக் கேட்டதும் ஓடிப்போய்ப் பார்த்தபோது, அழைப்பவர் ஓர் அரபிய தையற்காரரைப்போல் தோற்றப் பட்

டார். அவர் ஒரு மேல் மூடியுள்ள தாம்பாளத்தைக் கொண்டு வந்து கொடுத்தார். பிள்ளைகள் அவர் கொண்டுவந்துள்ள தாம்பாளத்தை வாங்கிக் கொண்டு மிக்க ஆவலோடு வீட்டிற்குள் நுழைந்தனர். கொண்டு வந்தவரோ தாம்பளத்தைக்கொடுத்ததும் சலாம் செய்துவிட்டுப் போய்விட்டார்.

பாத்திமா நாயகி தம்முடைய தொழுகை விரிப்பின் பேரிலேயே ஸஜ்தாவில் கிடந்து வரும் சமயம் ஜனுப் ஹுஸேன் றலியல்லாஹு அன்ஹு பரபரப்பாக வந்து "அம்மா! இதோ நீங்கள் சொல்லியபடி தையற்காரன் எங்கள் உடைகளைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டான். நீங்கள் இவற்றைச் சீக்கிரமாக எங்களுக்கு உடுத்தாட்டுங்கள் என்றார்கள். பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் உடனே இறைவனுக்கு நன்றிபாராட்டி அந்த உடைகளைப் பிள்ளைகளுக்கு உடுத்து வைத்து அவர்களைப் பெருநாள் தொழுகைக்கு அனுப்பி வைத்தார்கள். சுப்ஹா னல்லா!

——o——

## 12வது அத்தியாயம்

### பாத்திமா நாயகியின் நாணம், அச்சம், அடக்கம் முதலிய ஆசாரங்களைப் பற்றியது.

ஹஜ்ரத் அபூ ஹுரைரு றலியல்லாஹு அன்ஹு அவர்களால் அறிவிக்கப்படுகிறது:—

றசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் "நாணமென்பது ஈமானுடைய ஒரு கிளையாகும். ஈமான் கொண்டவர்கள் சுவர்க்கத்திலாவார்கள் வெட்கமின்மை அநீதியாகும்" என்று திருவுளம் பற்றினார்கள்.

மிஷ்காத்திலுள்ள ஓர் ஹதீதிலிருந்து தெரிய வருவதாவது:—

வெட்கமும், ஈமானும் ஒன்றுக்கொன்று இணங்கியதாகும். மேற்கூறிய இரண்டு லக்ஷணங்களினின்றும் ஓர் லக்ஷணம் மனிதனிடமிருந்து அகன்று விடுமானல், மற்றொருலக்ஷணம் அவனைவிட்டும் தானகவே விலகிப் போவதாகும்—என்பதே.

காதூனே ஜன்ன பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய லக்ஷணங்களைப் பின்பற்றி நடத்தல் நம்முடைய சகல சகோதரி

கள் பேரிலும் ஏற்பட்ட கடமையாகும். ஹஜ்ரத் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருதடவை பாத்திமா நாயகியைப் பார்த்து "ஒரு பெண்மணியுடைய புகழ்ச்சிகளில் மேலான புகழ்ச்சி எதுவாகும்?" என்று கேட்டபோது பாத்திமா நாயகி அளித்த பதிலாவது:—"அன்னிய புருஷனைக் கண்ணெடுத்துப் பார்க்காதவளும் அன்னியபுருஷனால் பார்க்கப் படாதவளுமே புகழ்ச்சிக்கு ஏற்றவள்" என்றார்கள்.

பாத்திமா நாயகியுடைய வெட்காசாரங்கள் இறைவனுக்குப் பொருத்தமாயிருந்தன வென்பதற்கேற்ப ஹஜ்ரத் அபூ ஹுரைரு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்ததாக அறிவிக்கப் படுகிறதாவது:-கியாமத் நாளில் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் புல்ஸிராத் என்னும் பாலத்தைக் கடந்து செல்லும்போது ஓர் மலக்கானவர் கூவி "ஜனங்களே! எல்லோரும் உங்கள் கண்களை மூடிக் கொண்டு தலைகளைக் குனிந்துகொள்ளுங்கள். ஏனெனில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது அருமைப் புதல்வியாராகிய பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் புல்ஸிராத்து வழியாக சுவர்க்கத்திற்கு விஜயஞ் செய்யப் போகிறார்கள்" என்று அறிவிப்பார் என்று திருவுளம் பற்றினார்கள்.

பாத்திமா நாயகியவர்களின் போதனைகளாவன:-எந்த ஸ்திரீயும் அநாவசியமாக மற்றொரு ஸ்திரீயை நிர்வாணமாகப் பார்க்கக் கூடாது. இரண்டு ஸ்திரீகள் மேல்வஸ்திரமின்றி ஒரே துப்பட்டியைப் போர்த்துக் கொள்ளக்கூடாது. யாதொரு ஸ்திரீ அன்னிய ஸ்திரீயின் மானஸ்தலங்களைப் பார்க்க நேரிட்டபோதிலும் அதைப்பற்றி அவள் தன்னுடைய கணவனிடத்தில் தெரிவிக்கலாகாது-

வெட்காசாரத்தின் காரணத்தைப் பற்றியே பாத்திமா நாயகியவர்கள் தம்முடைய ஜனாஸாவை இராக் காலத்திலேயே எடுக்கவேண்டுமெனவும் அப்போதும் கூட ஜனாஸாவுக்கு மேல் போர்வையைக் கொண்டு மூடவேண்டுமெனவும் வசியத்துச் செய்திருந்தார்கள்.

மேலும் ஹஜ்ரத் ஸித்தீக் அக்பர் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மனைவியாராகிய பீபீ அஸ்மா அவர்களைத் தவிர தம்முடைய மையத்தை வேறு யாதொரு ஸ்திரீகளும் குளிப்பாட்டக் கூடாதென்றும் பாத்திமா நாயகி யவர்கள் கூறிவருவார்கள்.

128446

பாத்திமா நாயகியவர்கள் நோயாயிருந்த சமயம் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தங்களுடைய கண்ணியமுள்ள ஸஹாபாக்களில் ஒருவரான உம்ரான்பின் ஹஸீன் என்னும் தோழருடன் பாத்திமா நாயகியவர்களின் தேக ஸ்திதியை விசாரிப்பதற்காக, பாத்திமாவுடைய வீட்டிற்குச் சென்றபோது பாத்திமா நாயகி யவர்கள் தம் தந்தையாரின் போர்வையைக் கேட்டு வாங்கி, அதைத் தம் உச்சித் தலைமுதல் உள்ளங்கால் வரையில் செவ்வனே இறுக்கிப் போர்த்துக்கொண்ட பின்னரே உம்ரான் பின் ஹஸீன் அவர்களை வீட்டிற்குள் அழைத்து வரும்படி ஹஜ்ரத் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள்.

ஒருதடவை அப்துல்லாபின் உம்மெ மக்தூம் என்னும் கண்தெரியாத ஸஹாபியொருவர், ஓர் அலுவலாக ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தேடிக்கொண்டு வருகையில், ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அச்சமயம் பாத்திமா நாயகியின் வீட்டில் உட்கார்ந்துகொண் டிருந்தார்கள். ஆதலால் அந்த ஸஹாபியானவர், விசாரித்தபடியே பாத்திமா நாயகியுடைய வீட்டிற்கு வந்துவிடவே, அவர்களைக் கண்ட பாத்திமா நாயகியவர்கள் ஓடிப்போய் அறைவீட்டிற்குள் ஒளிந்துகொண்டார்கள். அந்த ஸஹாபியார் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்த வேலை முடிந்து, பேசவேண்டிய விஷயங்களை யெல்லாம் பேசித் திரும்பிப்போய் விட்டார்கள். அதன் பின்பே பாத்திமா நாயகி அந்த அறையை விட்டும் வெளிவந்தார்கள்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அப்போது பாத்திமா நாயகியை நோக்கி "மகளே! உம்மெ மக்தூமோ வெனில் கண் தெரியாத குருடராவார். நீர் அவரைக்கண்டு ஏன் மறைந்துகொண்டாய்?" என்று கேட்டபோது பாத்திமா நாயகி, "என் அருமைத் தந்தையாரே! அவர் நேத்திரம் தெரியாதவரா யிருந்தாலென்ன? நானோ நேத்திரம் தெரிந்தவளா யிருக்கிறேன். அன்னிய புருஷரை எவ்வாறு பார்த்துக்கொண்டிருக்கச் சம்மதிப்பேன்?" எனப்பதிலளித்தார்கள்.

மிஷ்க்காதே ஷரீபென்னும் கித்தாபில் சொல்லப்பட்டிருக்கிறது:—

ஒரு தடவை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு நாபாலிகான (பிராயத்திற்கெட்டாத) வேலைக்காரனோடு (இந்த

வேலைக்காரனை, ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏற்கனவே தங்கள் புதல்வியாருக்காகப் பக்ஷிஷ் செய்திருந்தார்கள்) பாத்திமா நாயகியுடைய வீட்டிற்குள் வந்தார்கள். அப்போது பாத்திமா நாயகி மேலுக்குப் போட்டுக்கொண் டிருந்த வஸ்திரமானது தேகம் நிரம்பவும் போற்றப் போதியவாறு பெரிதா யிருக்கவில்லை. அவர்கள் அந்த வஸ்திரத்தினால் தம் தலையை மறைக்கப் பார்த்தார். அந்த வஸ்திரம் அவருடைய கால்வரைக்கும் எட்டவில்லை அதனால் கால்களை மறைக்கப் பார்த்தார் அது அவருடைய தலைவரைக்கும் வரவில்லை. இந்நிலைமையில் பாத்திமா நாயகி அந்த வஸ்திரத்தைக் கொண்டே தம்மை மூடிக்கொள்ளப் பல தடவைகளிலும் மிக்க பரபரப்பாய் முயற்சித்தார்கள். இதைக் கண்ணுற்ற ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாத்திமாவை நோக்கி "ஓ பாத்திமாவே! நீ வெட்கப்படாதே, உன்னுடைய தந்தையும் உன்னுடைய சிறு வேலைக்காரனுமாக நாங்கள் இருவரே வந்திருக்கிறோம். நீ எங்களைக்கண்டு வெட்கப்படுகிறாயா?" எனக் கேட்டதாக அபூ தாவூத் ரிவாயத்து செய்திருக்கிறார்கள்.

—o—

## 13வது அத்தியாயம்

### நபிநாயகத்தின் ஸந்ததியார்கள்

இறைவன் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஆண்பிள்ளைகளை உயிரோடு வைக்காது தனியே பெண்பிள்ளைகளை ஆளாக்கி அப்பெண்பிள்ளைகளுக்குக் குழந்தைகளை அருள் செய்ததும் அவன் நாட்டத்திலுள்ள இரகசியங்களாகும்.

பெண்பிள்ளைகளுடைய குழந்தைகளிலும், பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய குழந்தைகளே ஜீவித்து ஆளாயின. (பாத்திமா நாயகியின் சகோதரியார்) உம்மெ குல்ஸுமுக்கோ குழந்தை கிடையாது. எல்லாவற்றிற்கும் மூத்த சகோதரியாகிய ஜைனப் றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு ஒரே ஆண்பிள்ளை பிறந்து அது சிறு வயதிலேயே தவறிவிட்டது. ஆனால் ஒரே ஒருபெண் (அமாமா) ஆளாயிருந்தது. ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அப்பெண்ணைத் தான் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்குப் பின் நிக்காஹ் செய்து கொண்டார்கள், மூன்

ருவது சகோதரியாகிய ருக்யா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கும் குழந்தை கிடையாது. பாத்திமா நாயகியின் ஆண்பிள்ளைகளுடைய பெயர்களாவன:-ஹஸன், ஹுஸேன், முஹ்ஸின். பெண்பிள்ளைகள்:-ஜைனப், உம்மெ குல்ஸூம், ருகையா. ருக்யா சிறு வயதிலேயே காலஞ்சென்று போய்விட்டார். உம்மெ குல்ஸூமை அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தம்முடைய சம்மதத்திற்கிணங்கவே, ஹஜ்ரத் உமர் கத்தாப் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நிக்காஹ் செய்து கொடுத்தார்கள். ஹஜ்ரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களைக்கொண்டு உம்மெ குல்ஸூமுக்கு ஆண்பிள்ளை யொன்றும் பெண்பிள்ளை யொன்றும் பிறந்தன. ஆண்பிள்ளைக்கு ஜைத், பெண்பிள்ளைக்கு ருக்யா என நாமஞ் சூட்டப்பட்டிருந்தன. ஆனால் அவ்விரண்டு பிள்ளைகளும் பால்யத்திலேயே இறந்து போய்விட்டன.

ஹஜ்ரத் உமர் றலியல்லாஹு அன்ஹு இவர்கள் (ஷஹாதத்தடைந்து) வபாத்தாய் விட்ட பின்னர், அவ்ன் இப்னு ஜாபர் என்பவர், உம்மெ குல்ஸூமை நிக்காஹ்செய்து கொண்டார். அவர்களைக் கொண்டும் அவர்களுக்கு (உம்மெ குல்ஸூமுக்கு) பிள்ளை உண்டாகவில்லை. அப்பால் அந்த அம்மையார் முஹம்மத் பின் ஜாபர் அவர்களுடைய நிக்காவில் வந்தபோது ஓர் ஆண்பிள்ளை பிறந்து, அது பால்யத்திலேயே இறந்து போயிற்று. அப்பால் அவர் அப்துல்லா இப்னு ஜாபர் அவர்களை நிக்காஹ் செய்துகொண்டார்கள். அவ்விடத்திலும் அவருக்கு குழந்தை உண்டாகவில்லை. மேலும் உம்மெ குல்ஸூம் இக்கடைசி நிக்காவின் கணவரிடத்திலேயே வபாத்து மடையலானார்கள்.

ஜைனப் றலியல்லாஹு அன்ஹா அவர்களை அப்துல்லா பின் ஜாபர் அவர்களுக்கு நிக்காஹ் செய்து கொடுக்கப்பட்டது. அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் அலி என்னும் பெயருள்ள ஒரு ஆண்பிள்ளையும் உம்மெ குல்ஸூம் என்னும் பெயருள்ள ஒரு பெண் பிள்ளையுமேயாம்.

உம்மெ குல்ஸூம் காஸிம் பின் முஹம்மத் ஜாபருக்கு நிக்காஹ் செய்து கொடுக்கப்பட்டார். அவருக்கு அநேக குழந்தைகளும் பிறந்தன. அப்துல்லாவின் குமாரர் அலியில் னின்றும் அநேக குழந்தைகள் பிறந்தன. இவர்களின் பிச்சளத்தார்களை ஜாபரி பாத்திமி என அழைக்கப் படுகிறார்கள்.

சங்கை பொருந்திய ஹிஜ்ரீ 3-வது வருடம் ரமளான் மாதத்தின் 15-தேதி யன்று ஹஜ்ரத் ஹஸன் றலியல்லாஹு அன்ஹு பாத்திமா நாயகியின் கர்ப்பத்தினின்றும் ஜனித்தார்கள்.

ஹஜ்ரத் இமாம் ஜைனுலாப்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களால் அறிவிக்கப்படுகிறது:—ஹஜ்ரத் இமாம் ஹஸன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பிறக்கப்போகும் சமயம் நெருங்கிவிட்ட போது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அஸ்மாபிந்தெ அமீஸ், உம்மெஐமன், இவ்விருவரையும் பாத்திமா நாயகி அவர்களிடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். திருகுருஆனில் நின்றும், ஆயதுல் குர்ஸியும் முஅவ்விதைன் என்னும் குல் அஊது பிறப்பின் பலகு, குல் அஊது பிறப்பின்னாஸ் என்னும் இருசூறுக்களையும் முறையே மும்மூன்று முறை ஓதி யோதிப் பாத்திமா நாயகியின் மீது ஊதும்படி ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவ்விருவருக்கும் கட்டளையிட்டார்கள். அஸர் தொழுகைக்குப் பின் பிரசவம் நிகழ்ந்தது.

அஸ்மாபிந்தெ அமீஸ் கூறுவதாவது:-ஹஸன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பிரசவத்தின்போது பாத்திமா நாயகி யவர்களுக்கு ஹைலு, நிபாஸ், (சூதகம்) முதலிய நாமதேயமே ஏற்படாமலிருந்ததைக் கண்டு நான் ஆச்சரியமடைந்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய சமுகத்திற்குப் போய்த் தெரிவித்தேன். அப்போது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''என்னுடைய புதல்வியாகிய பாத்திமா, பரிசுத்தமானவள்'' என்று அருளினார்கள்.

பிரசவத்திற்குப் பிறகு பாத்திமா நாயகி உடனே குஸல் செய்து (குளித்து) அன்றைய மாலைத் தொழுகையும் நிறைவேற்றி வைத்தார்கள்.

ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களால் அறிவிக்கப்படுகிறது:-ஹஜ்ரத் ஹஸன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய அகீகாச் சடங்கை றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே செய்து வைத்தார்கள் என்று அறிவிக்கிறார்கள்.

ஹஸன் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆரம்பத் தலை ரோமங்களைச் சிறைக்கவும் அவைகளுக்குச் சமனிடையாக வெள்

ளியை நிறுத்து ஏழைகளுக்குத் தானஞ் செய்யவும் ஹஜ்ரத் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாத்திமா நாயகிக்குப் போதித் தார்கள். அதற்கிணங்கவே அவர்கள் நடந்து கொண்டார்கள். அந்த உரோமங்கள் ஏறக்குறைய ஓர் திரஹம் எடைகொண்டிருந்தன.

ஹஜ்ரத் பாத்திமா நாயகியவர்கள் ரிவாயத்துச் செய்கிறார்கள். மருத்துவச்சிக்கு ஆட்டுத் தொடையொன்றும், நாணயத்தில் திரஹமொன்றும் அளிக்கப்பட்டன. ஹஜ்ரத் அஸ்மா பிந்தெ அமீஸ் ரிவாயத்து செய்கிறார்கள். இமாம் ஹஸன் றலியல் லாஹு அன்ஹு அவர்களுக்கு ஏழாவது தினம் அகீகா நடந்தது. இரண்டு குறும்பாடுகள் ஸப்ஹு செய்யப்பட்டன. ஓர் ஆட்டுத்தொடை மருத்துவிச்சிக்குக் கொடுக்கப் பட்டது. குழந்தையின் தலைமயிருக்குச் சம எடையில் வெள்ளி நிறுத்து ஏழை களுக்குத் தர்மஞ் செய்யப்பட்டது. அப்பால் ஹஜ்ரத் ஸல்லல்லா ஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களுடைய திருக்கரங்களினால் குழந்தையின் தலைமேல் வாசனை தடவி "ஓ அஸ்மா! பிள்ளையின் தலை மேல் இரத்தத்தைத் தடவுதல் மூடத்தனமாகும். குங்குமப்பூ முத லிய ஏதேனும் ஒரு வாசனையைத் தடவிவிட்டால் போதுமானது" என்று, திருவுளமானார்கள்.

ஹஸன் றலியல்லாஹு அன்ஹு பிறந்த இரண்டாவது வருஷம் ஹிஜ்ரி 4-ல் ஷாபான்மீ 4-உ, செவ்வாய்க்கிழமை யன்று ஹுஸேன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பிறந்தார்கள். அவர்களுடைய அகீகாச் சடங்கும் அதேவிதமாக நிறைவேற்றப்பட்டது.

அஸ்மா, சொல்லுகிறார்கள்.—நான் ஹுஸேன் றலியல்லாஹு அன்ஹு பிறந்தவுடன் அவரை ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய மடியின் மீது போட்டுவிட்டேன். அப்போது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அழ ஆரம்பித்தார்கள். நான் "என் அழுகிறீர்கள்?" என்று கேட்டதற்கு ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "ஓ அஸ்மா! இப்பிள்ளை பெரிதாகி விரோதிகளுடைய வாளுக்கு இரையாய்விடும், என்னுடைய உம்மத்திலுள்ள அயோக்கியர்களே இப்பிள்ளையை வெட்டிவிடுவார்கள். இறைவன் அக்கொலை பாதகர்களுக்கு என்னு டைய ஷபாஅத்தும் புசிப்பாக்கமாட்டான். ஆனால், அஸ்மா! நீ இதைப்பற்றி இக்குழந்தையை ஈன்றெடுத்த தாய்க்குச் சொல்லவேண்

டாம். ஏனெனில் அவளுக்கு இத்துக்கத்தால் சங்கடம் நேரிடும்'' என்று திருவுளம் பற்றினார்கள்.

ஹஜ்ரத் ஜாபிர் றலியல்லாஹு அன்ஹு அவர்களால் அறிவிக்கப்படுகிறது:-

ஹஜ்ரத் ஹுஸைனுடைய அகீகாச்சடங்கு அவர் பிறந்த ஏழாவது தினமே நடத்தப்பட்டது. அதற்கிணங்கவே கத்னுவும் அதே தினத்தன்று செய்யப்பட்டது. ஹஜ்ரத் அலிறலியல்லாஹு அன்ஹு மொழிகிறார்கள்:— ஹஸன் பிறந்தபோது நான் அவருக்கு ஹர்ப் எனப் பெயரிட்டேன். ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் என் வீட்டிற்கு வந்து ''என் பேரப் பிள்ளையை என்னிடத்திற்குக் கொண்டுவந்து காண்பியுங்கள். அதற்கு என்ன பெயர் வைத்தீர்கள் என்பதையும் நான் கேட்க விரும்புகின்றேன்'' என்றார்கள். ஜனங்கள் ''அப்பிள்ளைக்கு ஹர்ப் எனப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது'' எனச் சொன்னபோது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ''கூடாது! ஹஸன் என்பதே அப்பிள்ளைக்குப்பெயராகும்'' என்றார்கள். ஹுசேன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் ஹர்ப் என்ற நாமமே சூட்டப் பட்டபோது, அதையும் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களே ஹுஸேன் எனமாற்றிவிட்டார்கள்.

முஹ்ஸின் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் ஹர்ப் என்றே பெயர் வைக்கப்பட்டது. ஹஜ்ரத் அவர்களாலேயே அப்பெயர் முஹ்ஸின் என மாற்றப்பட்டது. அப்பால் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவுளமானதாவது:—நான் இப்பிள்ளைகளின் பெயர்களை ஹஜ்ரத் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய பிள்ளைகளின் பெயர்களை அநுசரித்து வைத்திருக்கின்றேன் - என்றார்கள்.

ஷப்பர், ஷப்பீர், முஷர் இம்மூன்றும் ஹஜ்ரத் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய பிள்ளைகளின் பெயர்கள். அரபி பாஷையில் அம்மூன்றிற்கும் முறையே அருத்தங்களாவன - ஹஸன் ஹுஸேன்— முஹ்ஸின் - என்பனவாம்.

ஹஸன் ஹுஸேன் என்ற நாமங்கள் சுவர்க்க வாசிகளின் நாமங்களாகுமென ரிவாயத்து வந்திருக்கின்றது. மூட பக்தியுள்ள அக்கால

த்தில் இப்பெயர்கள் அராபியருக்குள் வழங்கப்பட்டு வரவில்லை. ஓர் ரிவாயத்தில் வந்திருக்கிறது:- தாங்கள் 'ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், ஹஸன் ஹுஸேன் என்ற இரகசிய நாமங்கள் (இறைவனுல் மறைக்கப்பட்டிருந்தவை) உலகத்தாருக்குள் பகிரங்கப்படுத்தி விட்டார்கள். அபூராபா அவர்கள், ரிவாயத்துச் செய்கிறார்கள்:- ஹஜ்ரத் ஹஸன் ஹஜ்ரத் ஹுசேன் பிறந்தபோது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவ்விருவருடைய செவிகளில் முறையே அஸான் (பாங்கு) மொழிகளைக் கூறினார்கள் என்று.

அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் மனைவியாராகிய ஹஜ்ரத் உம்முல் பஜல் கூறுகிறார்கள்:- ஒரு நாள் நான் சொப்பனத்தில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய அவயவங்களில் ஓர் அவயவம் என் வீட்டில் இருக்கக்கண்டேன். நான் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சமுகத்தில் என்னுடைய சொப்பனத்தைப் பற்றித் தெரிவித்து "இதற்கு என்ன பயன்?" (தஃபீர்) என்று விசாரித்தேன். அதற்கு ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் 'அவர்கள்' "எனக்கு உன்னுடைய சொப்பனம் நல்ல சொப்பனமேயாகும். அதாவது:- பாத்திமாவுடைய வீட்டில் ஆண் பிள்ளை பிறக்கப்போகிறது. அப்பிள்ளைக்கு நீயே பால் ஊட்டப்போகிறாய்" என்று திருவுளமானதற்கிணங்கவே, ஹஸன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பிறந்தபோது ஹஜ்ரத் குஸம் றலியல்லாஹு அன்ஹா அவர்களுடனும் உம்முல் பஜ்லினிடமும் பால் குடிக்கலானார்கள். ஹாக்கிம், ஜாபிரைக் கொண்டும் ரிவாயத்து வந்திருப்பதாவது:—றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "ஒவ்வொரு தாயின் பிள்ளைகளுக்கும் தந்தையின் வழியின் அநுசரணையுண்டு. பாத்திமாவுடைய குமாரர்களுக்கோ தம் தந்தை அலியாருடைய வழியின் அநுசரணைகிடையாது. அவ்விரு பிள்ளைகளுக்கும் இருபக்கத்திற்கு முள்ள பாலகன் நானே யாவேன்" என்று திருவுளமானார்கள்.

ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் ரிவாயத்துச் செய்கிறார்கள்:-

ஒரு தடவை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இமாம் ஹஸன் றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தங்களுடைய தோளின் மீது உட்கார வைத்துக்கொண்டு வரும்போது ஒருவர் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைப்பார்த்து "இது நல்ல சவாரியாயிருக்கிறதே" என்று தமாஷாவாய்க் கூறியதற்கு

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "சவாரி ஏறிச் செல்பவனும் நல்லவனே" என்று பதிலளித்தார்கள்.

ஹுஸேன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஒரு தடவை தம்முடைய சிறு பிராயத்தில் (ஸத்கா) ஆண்டவன் பெயரால் ஏழைகளுக்குக்கொடுக்கப்படும் வஸ்து சம்பந்தமான கஜூர் காயொன்றை எடுத்துத் தின்பதைக் கண்ட ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உடனே ஹுஸேனை நோக்கி "ஆஹா! 'துப்பிவிடு துப்பிவிடு! அது நமக்குப் பொருந்தியதல்ல! நம்முடைய குடும்பத்தார் ஸத்காச்சொத்தை உபயோகிப்பதில்லையே மகனே! உனக்குத் தெரியாதோ?" என்றார்கள்.

அப்துல்லா பின் அப்துர் ரஹ்மான் பின் ஸுபைர் சொல்லுகிறார்கள்:—நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய குடும்பத்தார்களில் ஹஜ்ரத் ஹஸன் றலியல்லாஹு அன்ஹு அவர்களே றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய முகச் சாயலுள்ளவர்களாக இருந்தார்கள். ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் ஹஸன் றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் அதிகப் பிரீதியுள்ளவர்களாகயிருந்து வருவார்கள். மேலும் நான் அடிக்கடி பார்த்தும் வந்திருப்பதாவது:—

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தொழுது கொண்டிருக்கும் சமயம் அதாவது ஸஜதா செய்து கொண்டிருக்கும் போது ஹஸன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹஜ்ரத் அவர்களுடைய முதுகின் மேல் ஏறிக்கொள்வார்கள். சில சமயங்களில் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ருகூவிலிருந்து வரும்போது இவர் அவர்களுடைய இரண்டு கால்களுக்கும்இடையில் நுழைந்துகொள்வார்கள். அப்போது ஹஜ்ரத் அவர்கள் (ஹஸன் றலியல்லாஹு அன்ஹு வெளிப் பட்டுப்போய் விடும்படியாக) கால்களைச் சற்று விரிய வைப்பார்கள்.

ஸஹீ புகாரியில், அக்பாபின் ஹாரிஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களால் அறிவிக்கப்படுகிறது:-ஒரு தடவை ஹஜ்ரத் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அஸர் தொழுது விட்டு ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் பள்ளிவாசலை விட்டுப் போய்க்கொண்டிருந்த வழியில் ஹஸன் றலியல்லாஹு

அன்ஹு அவர்கள் சில பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடிக்கொண்டிருக்கக் கண்டார்கள். அவர்கள் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு ஹஸனைத் தூக்கித் தம் தோளின்மேல் வைத்துக்கொண்டு "அலியாரே! இவருடைய முகச்சாயல் றசூலுல்லாவை ஒத்திருக்கிறபடியால் இவர் உங்களுடைய தோற்றத்தில் அமைந்திருக்கவில்லை" என்றார்கள். இதைக்கேட்ட அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் புன்னகை கொண்டார்கள்.

ஜாமிஉ திர்மிஸியில் கண்டிருக்கிறது:-ஹஸன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தலை முதல் மார்புவரையிலும், ஹுசேன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மார்புமுதல் கால்கள் வரையிலும் முறையே றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய தோற்றத்தையே ஒத்திருந்தார்கள்.

அபூஹுறைரா மொழிகிறார்கள்:-நான் ஹஸனைப் பார்க்கும் போதெல்லாம் பிரியத்தின் காரணமாக என் இருகண்களிலும் கண்ணீர் ததும்புகிறது. விரிவாகக் கூறுமிடத்து, ஒரு நாள் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களுடைய வீட்டை விட்டும் வெளிப்பட்டு வருகையில் என்னைக்கண்டதும் என்னுடைய கையைப்பற்றிக்கொண்டு பனிகைகாபஜார் வழியாக என்னை அழைத்துக்கொண்டு நப்வி பள்ளிவாசலுக்குப்போனார்கள். போனதும் ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு தாங்கள் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) "என்னுடைய மகனை அழைத்து வாருங்கள்" என்று சொல்வதற்கிடையே, ஹஸனார் ஓடிவந்து ஹஜ்ரத் அவர்களுடைய மடிமீது உட்கார்ந்து கொண்டார்கள்.

அப்போது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பல தடவைகளிலும் ஹஸனை உற்றுப்பார்த்த வண்ணமாகவே, தங்களுடைய வாயை அவருடைய வாயின்மேல் வைத்து "ஆண்டவனே! நான் இப்பிள்ளைக்கு முத்தமீடுகின்றேன். இதற்கிணங்கவே, இப்பிள்ளைக்கு முத்தமிடுபவர்களும் (நேசிப்பவர்கள்) எனக்குப் பிரியமானவர்களே யாவர்" எனத் திருவுளமானார்கள்.

ஹஜ்ரத் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள்:—

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (ஹஸனை ரைத் தம்மடிமேல் வைத்துக்கொண்டே) மிம்பர் மேடையில் உட்கார்ந்து, சிலவேளைகளில் ஹஸனுரைப் பார்த்தும், சிலவேளைகளில் ஜனங்களை நோக்கியும் "என்னுடைய மகனுகிய இவர் தலைவராவார். இறைவன் இவர் மூலமாக முஸ்லீம்களுடைய இரண்டு கட்சியார்களுக்கிடையில் சமாதானம் உண்டாக்கி வைப்பான் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது" என்று திருவுளமானுர்கள்.

அஸாமா பின்னஸத், நபிகள் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைத் தொட்டும் ரிவாயத்து செய்கிறுர்கள்:-

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அஸாமாவையும் ஹஸனுரையும் தூக்கிக்கொண்டு,"இறைவனே!நான் இவ்விருவரை நேசிப்பதுபோலவே நீயும் இவர்களை நேசிப்பாயாக!" என்று மொழிவார்கள்.

ஹஜ்ரத் பாரா அவர்கள் மொழிகிறுர்கள்:—

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஹஸனுரைத் தங்களுடைய தோள்களின் மீது தூக்கிக்கொண்டு "இறைவனே! நான் இவரை நேசிப்பதுபோலவே நீயும் நேசிப்பாயாக"எனச் சொல்லிக்கொண்டிருந்ததை நான் என் கண்ணூரக்கண்டிருக்கின்றேன். என்று கூறுகிறுர்கள்.

## 14-வது அத்தியாயம்

### ஹஜ்ஜுல் விதாஃ கடைசி ஹஜ்ஜைப் பற்றியது.

10-வது ஹிஜ்ரியில் ஹஸரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதினுவிலுள்ள சகல கூட்டத்தார்களுக்கும் சமூகத்தார்களுக்கும் இவ்வருஷம் தான் ஹஜ்ஜுக்குப் போகத்தீர்மானித் திருப்பதாகவும் தம்முடன் ஹஜ்ஜுக்கு வர விரும்புகிறவர்கள் காலதாமதமின்றி மதீனுவுக்கு வந்து சேரலாம் என்றும், அறிக்கை செய்வித்ததின் பேரில், மகாஜனத்திரளொன்று மதீனு முனவ்வாராவில் வந்துகூடிவிட்டது. ஷீகாயிதா மாதம் 25-தேதி சனிக்கிழமையன்று ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குஸுல் செய்து, வாசனை தடவி உடைகளை மாற்றிக்கொண்டு லொஹருடைய தொழுகைக்குப் பின்னர், ஷஜ்ராவுடைய பாதையாக ஜுல் ஹலீபாவையடைந்தார்கள், இப்பயணத்தின்போது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்களுடன் தங்களுடைய புனித பீபீமார்களும் ஒட்டக அம்பாரிகளில் வாகன மேறினவர்களாக ஹஜ்ஜு யாத்திரையில் இருந்து வந்தார்கள்.

அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள், எமனுக்குப்போயிருந்தார்கள். பாத்திமா நாயகி நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் ஹஜ்ஜுடைய நிய்யத்தின் பேரில் அம்பாரியில் உட்கார்ந்துகொண்டு வந்தார்கள். பஞ்ஸான் என்னுமிடத்தில் ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களும் எமனிலிருந்து திரும்பி வருகையில் இக்கூட்டத்தாருடன் சேர்ந்து கொண்டார்கள். நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்காகவேண்டி, காணிக்கையாகச் சில ஒட்டகங்களும் ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் அச்சமயம் எமனிலிருந்து கொண்டுவரப்பட்டன.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், ஸஹாபாக்களும் தங்கள் தங்கள் குர்பானிக்குரிய உயிர்ப்பிராணிகளையும் கூடவே கொண்டுபோனார்கள். ஆனால் பீபிமார்களிடத்திலும் பாத்திமா நாயகியிடத்திலும் குர்பானி செய்வதற்கு உயிர்ப் பிராணிகளிருக்கவில்லை. ஆதலால், பாத்திமா நாயகி இஹ்ராமை (ஹஜ்ஜை நிறைவேற்றும் நிர்ணயம்) விட்டும் வெளிப்பட்டு விட்டார்கள்.

அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள், பாத்திமா நாயகி வர்ண உடையை உடுத்துக்கொண்டும் கண்களில் சுர்மாவைப் பூசிக்கொண்டும் இருப்பதைக் கண்டபோது மிகவும் கோபித்துக்கொண்டார்கள். அப்போது பாத்திமா நாயகி அலிறலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் "எனக்கு என் தந்தையாரே என்னை இஹ்ராமை விட்டும் வெளிப்படும்படி அநுமதியிட்டார்களென்றும் தாங்களும் எங்களுடன் வரப்போகின்றீர்கள் என்றும் தகவல் கிடைத்ததினாலேயே, நான்உடைகளை மாற்றி, வாசனையை உபயோகித்து, இத்தகைய சிங்காரத்தின் பேரில் வந்தேன்" என்றும் முறையிட்டபோது அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பாத்திமா நாயகியின் முறைப்பாட்டை ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வெளிப்படுத்தினார்கள். அதைக்கேட்ட ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "பாத்திமா சொல்வது உண்மையே" என்றார்கள்.

இதுகாறும் இஹ்ராமைக் கட்டிக்கொண்டே இருந்து வந்த ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹஜ்ரத்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களோடு சேர்ந்து ஒட்டகத்தை ஸப்ஹு செய்தார்கள். ஸப்ஹு வேலை முடிந்ததும் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கோவேறு கழுதை மேலேறிக்கொண்டும் ஹஜ்ரத் அலி அவர்களை அதே கழுதை மீது தமக்குப் பின் புறத்தில் ஏற்றிக்கொண்டும் தம் இருப்பிடத்திற்குப்போய்ச் சேர்ந்தார்கள்.

ஹஜ்ஜுல் விதா முடிந்ததும் நபிகத்திலகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கம் கதீர் என்னுமிடத்தில் தங்கி லொஹர் தொழுகைக்குப் பின் அங்கு அச்சமயம் கூடியிருந்த லக்ஷம் ஜனங்களுக்கு மேற்பட்ட முஸ்லிம் கூட்டத்தார்களுக்கிடையில் திருவாய் மலர்ந்தருளியதாவது:---“மகா ஜனங்களே! இதோ நான் கூடிய சீக்கிரம் இவ்வுலகத்தை விட்டுப் பயணமாகப்போகிறேன். உங்களுக்காக எனக் கருமையான இரண்டு வஸ்துக்களை உங்களிடத்தில் விட்டுப் போகிறேன். நீங்கள் அவற்றை கௌரவப்படுத்தும் விஷயத்தில் ஒருவரைவிட மற்றொருவர் அதிக ஊக்கங்காட்டி வருதல் அவசியமாகும். அந்த இரண்டு வஸ்துக்களில் முதலாவது திருக்குர்ஆனும், மற்றது என்னுடைய கிளைஞரும் (பாத்திமா நாயகியும் அவருடைய சந்ததியும்) என்பதேயாகும்; நீங்கள் இவ்விரண்டையும் கூடியவரையில் மதித்தும் சிலாகித்தும் வரவேண்டும். ஏனெனில் இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று விட்டுப் பிரியாததும், கியாமத் நாளில் ஹவ்ழுல் கவ்ஸரின் மீது என்னைச் சந்தித்துக்கொள்ளப் போவதுமாகும்” என்றார்கள்.

இன்னும் மேன்மை பொருந்திய இறைவன் எனக்கு எஜமானனாவான் என்பதற்கிணங்க நான் ஒவ்வொரு முஸ்லிம்களையும் ஆதரிப்பவனாவேன் என்று திருவுளம் பற்றினார்கள். திரும்பவும் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கையைப் பற்றிக்கொண்டு “நான் எவருக்கு ஆதரிப்பவனாக இருப்பேனோ இவரும் அவரை ஆதரிப்பவராவார். இறைவனே! அலியார் எவரை பாதுகாப்பாரோ நீயும் அவரைக் காத்துக் கொள்வதுடன் அவரைப் பகைப்பவர்கள் மீது கியாம் நாள் வரையில் நீ உன்னுடைய கொடுங்கோன்மையை இறக்கிக் கொண்டிருப்பாயாக!!” என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்,

## 15-வது அத்தியாயம்.

### பாத்திமா நாயகியுடைய வபாத்து

இமாம் ஜலாலுத்தீன் சுயூதீ றஹிமஹுல்லா அவர்கள் கஸாயஸ் குப்ரா என்னும் கிரந்தத்தின் 2-வது பாகத்தில் எழுதுகிறார்கள்;

ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்அவர்கள் பாத்திமா நாயகியிடம் "நான் வபாத்தடையும்போது, நீர் 'இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹிராஜியூன்' (அருத்தம்) நாம் அல்லாவில் நின்றும் உண்டானோம். மீளவும் அவனளவிலே சேருகிறோம் என்று ஓதவேண்டும். ஏனெனில் இக்கலிமாவானது ஒவ்வொரு மனிதனுக்கும் துன்ப ஈடேற்றமாகும்" எனத் திருவாய் மலர்ந்தருளிய போது அதற்குப் பாத்திமா நாயகி "றசூலுல்லாவே! தங்களைக்கொண்டும் நிகழும் துன்ப வேளையிலும் (வபாத்தின் போதும்) இதை ஓதலாமா?" என்று கேட்டதற்குஅவர்கள்(ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) ஆம் அப்போதும் அதையே ஓதவேண்டும் எனக் கட்டளையிட்டார்கள்.

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வபாத்தான காலத்தில் பாத்திமா நாயகியைத் தவிர ஹஜ்ரத் அவர்களுடைய பிள்ளை களில் ஒருவராவது உயிரோடிருந் திருக்கவில்லை.

பாத்திமா நாயகி தம்மருமைத் தந்தையாரை இழந்தபோது அவருடைய (பாத்திமா நாயகி) வயது 28. கண்ணுக்குக் கண்ணாகவும் அளவு கடந்த பட்சமாகவும் தம்மைப் பராமரித்து வந்த தந்தையார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார் என்பதையுணர்ந்த பாத்திமா நாயகிக்கு ஏற்பட்ட துக்கத்திற்கும் சஞ்சலத்திற்கும் அளவேகிடையாது. அவருடைய வாழ்க்கையே ஒருவாறு பிளவுபட்டுப் போனமையால் தாம் இனி உலகத்தில் ஜீவித்திருப்பானேன் என்பதாகவும் அவருடைய துக்கம் அவருக்கு அவ்வாறு நினைக்கச்செய்தது.

இத்தகைய துக்க தோரணையில் ஒரு நாள் பாத்திமா நாயகி அனஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்பார்த்து "ஓ அனஸே! என் அருமைத் தந்தையாராகிய ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீது மண்ணைத் தள்ளுவதற்கு உம்முடைய

மனம் துணிந்ததா?'' எனக் கேட்டபோது அனஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மனம் ஒருவாறு பொங்கி அவர் பாத்திமா நாயகியே! "எல்லாம் வல்ல நாயனுடைய காரியங்களில் உள்ளது ஒருவராலும் ஒன்றும் நடை பெறமாட்டாது'' என்றார்,

ரசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், பாத்திமா நாயகி தம் இருதயத்திற் கொப்பாவார் என்று சொல்லிவந்ததற்கிணங்கவே அவர் பேரில் தம் வாழ் நாள் பரியந்தம் அளவு கடந்த பிரியத்தை வெளிப்படுத்தி வந்தார்கள் என்பது இதுவரை சொல்லி வந்த விஷயங்களினுல் செவ்வனே அறியக்கிடக்கின்றது.

தம் தந்தையார் தம்மிடத்தில் வைத்துவந்த அன்பிற்கிணங்கவே பாத்திமா நாயகிக்கும் தம் தந்தையாரிடத்தில் விசேஷ அன்பு இருந்து வந்தமையால், பாத்திமா நாயகி தம் தந்தையாருடைய துக்கப் பிணியைக்கொண்டே பீடிக்கப்பட்டார் என்று சொல்லும்படியாகவே ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வபாத்தடைந்த ஆறுவது மாதத்திலேயே நோயாய்விட்டார்கள். மேலும் அவர் தந்தையாருக்குப் பின் உயிரோடிருந்த ஆறு மாத காலத்திற்கிடையிலும் ஒரு நாளாவது எவரிடத்தும் சந்தோஷத்துடன் சம்பாஷித்ததில்லை. ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய பேரப்பிள்ளைகளின் துயரமும் தனியே இருந்து வந்தது; இச்சந்தர்ப்பத்தில் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வருத்தத்தைப்பற்றி என்னவென்று சொல்வது? இம்மையிலும் மறுமையிலும் தமக்குப் பக்க பலமாயிருந்து வந்த உன்னதப் பருவதத்தின் வலிமை தன்னைவிட்டும் அகன்று போய்விட்டதுமல்லாமல் தனக்கு மீதி மிச்சமாக இருந்துவரும் பாத்திமாநாயகியுடைய ஆதரவும் போய்விடுமேயானுல் என்ன செய்வது என்பதையுணர்ந்த அவர்கள் பாத்திமா நாயகியுடைய பாதுகாப்பு விஷயத்தில் கண்ணும் கருத்துமாகஇருந்து வந்தார்கள். ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய வபாத்துக்குப் பின்னர் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பாத்திமாவைத் தம்முடைய மனைவியார் என்று மட்டும் நினையாது அவர்கள் (பாத்திமா நாயகி) ரசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய பிரதான ஞாபகச் சின்னமெனவும் கருதி அவர்களோடு முன்னைக்காட்டிலும் அதிக அன்பாய் நடந்து கொண்டார்கள். இந்நிலைமையில் பாத்திமா நாயகியும் வபாத்தாய்

விட்டார்களானல் அலியாருக்கு எவ்வளவு துக்கம் நேரிட்டிருக்கு மென்பதைச் சொல்லத் தேவையில்லை.

பாத்திமா நாயகி வபாத்தானதற்குப் பின் துக்கமுள்ள அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சதா பாத்திமா நாயகியின் கபுரு ஷரீபுக்குப்போய் பாத்திஹா ஓதி வருவார்கள். ஒரு நாள் அலி றலி யல்லாஹு அன்ஹு தம் வழக்கப்படி பாத்திமாவுடைய கபுருக்குப் போயிருந்த சமயம் அரபி பாஷையில் மூன்று விதக்கவிகளை அழுது கொண்டே பாடலானார்கள். அக்கவிகளின் பொருள் யாதெனில்:—

(1) நான் என்னில் அநேக பிணிகளை அனுபவிக்கிறேன். இப் பிணிகள் என்னை இறந்துபோகும் வரையில் விடப்போவது கிடை யாது.

(2) ஒருவரை யொருவர் விட்டுப்பிரியாத இரண்டு நண்பர்கள் கடைசியாக ஒரு நாளில் ஒருவர் மற்றொருவரை விட்டுப் பிரியவே நேரிடும். அவ்வாறு விட்டுப் பிரிவதனாலேற்படும் துன்பங்களுக்கு வேறு எத்தகைய துன்பங்களும் ஈடாகமாட்டா.

(3) நான் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்குப் பின் பாத்திமாவையும் இழந்தேன். இதனின்றும் எப்பேர்ப்பட்ட அருமை நண்பனாயினும் சரி என்றைக்கும் நம்முடன் சினேககனாயிருந்து வர முடியாது என்ற அத்தாட்சியை அடையப் பெற்றேன்—என்பதே.

### பாத்திமா நாயகியின் வபாத்தைப்பற்றியது

பாத்திமா நாயகி நோயாய்கிடந்ததே கிடையாது. மேலும் அவர்கள் தம்முடைய வழக்கத்திற்கு மாறாய் ஒரு நாள் (வபாத்தாகும் தினம்) அதிகாலையில் வெகு சந்தோஷமாகவே படுக்கையைவிட்டும் எழுந் திருந்து வெள்ளாட்டியை நோக்கி "நான் குளிப்பதற்காகத் தண்ணீர் கொண்டுவாரும்" எனக் கூறியபோது வெள்ளாட்டி அவ்வாறே தண் ணீர் கொண்டுவந்தாள்.

பாத்திமா நாயகி குஸுல் (ஸ்நானம்) செய்து முடிந்ததும் தம் மிடமிருந்த நல்ல புடவைகளை எடுத்து உடுத்துக்கொண்டு தம்முடைய கரங்களைக் கன்னத்தின் மேலேவைத்து கிப்லாவின் புறமாய்ப்புரண்டு படுத்தபோது "நான் என்னுடைய உயிரை சர்வ வல்லமையுள்ள இறை வனை அல்லாஹுத் தஆலாவின் வசமாக்குகிறேன். இனி என்னை

ஒருவரும் கூப்பிடவேண்டாம். என்னை இப்போது நான் இருக்கிறபடியே இதே இடத்தில் அடக்கம் செய்து விடுங்கள்" எனக்கூறியதாகவும் அதைக்கேட்ட அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களும் பாத்திமா நாயகியுடைய வஸிய்யத்தின் படியே செய்ததாகவும் கூறப்படுகையில் இப்னு ஜெளஸி எழுதுவதாவது:—

பாத்திமா நாயகி மவுத்தாகும் தருவாயில், அஸ்மாபிந்தெ அமீஸ் (ஹஜ்ரத் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் மனைவியார்) இடத்து "என்னுடைய மையத்தைக் குளிப்பாட்டும் சமயம், நீங்கள் உங்களுக்கு அவசியமான உதவிகளை என்னுடைய கணவரினி (அலி றலியல்லாஹு அன்ஹு) டமிருந்தே பெறவேண்டுமேயல்லாது வேறெவரையும் அவ்விஷயத்திற்காக அழைக்கக்கூடாது. ஜனாஸாவின் போது அதிகக் கூட்டத்தைக் கூட்டவேண்டாம்" என்று சொன்னார்கள்.

அக்காலத்தில், ஸ்திரீகளுடைய ஜனாஸாவுக்கும் ஆண்கள் ஜனாஸாவுக்குச் செய்வது போலவே பல்லக்கின்மேலே எத்தகைய திரையும் போடாமல் கொண்டு போவார்கள்; ஆனால் பாத்திமா நாயகிக்கு இதைப் பற்றி மிகக்கவலை ஏற்பட்டிருந்தது. தன்னுடைய மையத்தையும் இதே விதமாகத்தானே கொண்டு போவார்கள். இது வெட்க மின்மைக்குரிய பழக்கமன்றோ என்பதை அவர்கள் சிந்தித்து வந்தார்கள்.

ஒருநாள் பாத்திமா நாயகி தம்முடைய கவலையைப் பற்றி மேற்படி அஸ்மா றலியல்லாஹு அன்ஹா அவர்களிடம் பேசியபோது அஸ்மா அவர்கள், தாம் ஹபஷாவில் புது மாதிரியாகத் தொட்டியொன்றைச் செய்து அதைச்சுற்றிலும் படுதாவைக் கொண்டு மூடி நல்ல விதமாகக் கோஷா பந்தோபஸ்துடன் கொண்டு போகிறதாகவும் ஒரு மாதிரியைக் காட்டிச் சொல்லிய போது பாத்திமா நாயகிக்கு அளவற்ற சந்தோஷமேற்பட்டது. உடனே அவர்கள் "நான் வபாத் அடைந்ததற்குப்பின் நீங்களே என்னைக்குளிப்பாட்டி இப்போது நீங்கள் சொல்லிவந்த மாதிரியே கோஷா பந்தோபஸ்தோடு என் ஜனாஸாவை எடுத்துச் செல்லும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்" எனவற்புறுத்திக் கூறினார்கள்.

பாத்திமா நாயகிக்குப் பின் அத்தகைய படுதாவோடு இரண்டாவதாக ஹஜ்ரத் ஜைனப் அவர்களுடைய ஜனாஸா எடுக்கப்பட்டது. இது

இம்மட்டிலிருக்கப் பாத்திமாநாயகி, தம்முடைய அருமைத் தந்தையாரின் முன் எச்சரிக்கைக்கிணங்க, தாம் கூடிய சீக்கிரம் தம்முடைய அருமைத் தந்தையாரிடத்திற்குப் போய்ச் சேர்தல் உண்மை என்பதை நிச்சயித்துக் கொண்டார்கள். அதன்படியே அவர்கள், 12வது ஹிஜ்ரி சங்கை பொருந்திய ரமலான் மாதத்தின் 3ம் தேதியன்று (செவ்வாய்க்கிழமை இரவு) இம்மண்ணுலகை விட்டும் விண்ணுலகிற்கு ஏகிவிட்டார்கள். (இன்னலில்லாஹி வஇன்ன இலைஹி ராஜியூன்)

அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு "ஹைதரே கர்ரார்" (விரோதிகளை அப்புறப்படுத்தி வைக்கும் சிங்கப்புலி) என்ற பட்டப்பெயரும் உண்டென்பது வெளிப்படை. அத்தகைய பராக்கிரம சாலியானவருக்கும் ரசூலுல்லாவுடைய வபாத்திற்குப் பின் சம்பவித்துள்ள பாத்திமா நாயகியின் துக்கமானது அவருடைய இருதயத்தை ஒருவாறு பிளந்துவிட்டது. பாவமற்ற ஹஸன் ஹுஸேன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய துக்கத்திற்கோ அளவே கிடையாது. பாத்திமா நாயகியுடைய வஸீயத்திற்கேற்ப அலியார், குளிப்பாட்டும் விஷயத்திலும், கபன் உடுத்தாட்டும் விஷயத்திலும் போதிய ஜாக்கிரதையாக நடந்து கொண்டார்கள். அஸ்மா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் குளிப்பாட்டும் சமயம் திரையின் பந்தோபஸ்துகளைச் செய்து விட்டார்கள். ஆனால் அச்சமயம் பாத்திமா நாயகியின் சிறிய தாயாராகிய ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்கள், வந்து திரைக்குள் பிரவேசிக்க யத்தனித்தார்கள். அதற்கு அஸ்மா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களை உட்பிரவேசிக்க அனுமதியாததனால் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு அதனால் வருத்த மேற்பட்டது. அவர்கள், உடனே திரும்பிப்போய் தம்தந்தையாராகிய அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் அதைப்பற்றி முறைப்பாடு செய்து கொண்டார்கள். இதுவும் தவிர அஸ்மா றலியல்லாஹு அன்ஹா பாத்திமாவுடைய ஜனாஸாவைச்சுற்றி ஓர் நவீன முறையில் திரைகட்டச் செய்கிறார் என்பதையும் அவர் தம்தந்தையாரிடம் தெரிவிக்கவே அங்கிருந்து ஹஜ்ரத் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பரபரப்பாக வாயிற்படிக்கு வந்து அதட்டிச் சொல்லியதாவது:—"இதென்ன அநியாய மாயிருக்கிறது. ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பீபீமார்கள், ரசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய புதல்வியைப்பார்க்க அநுமதிக்கப் படலாகாதா? இன்னும், ஜனாஸாவும் நூதனமாக அமைக்

கப்படுகிறதாமே! அதென்ன ஆச்சரியம்?'' எனக்கடிந்து கூறியபோது அஸ்மா றலியல்லாஹு அன்ஹா இவை யெல்லாம் பாத்திமா நாயகி தமக்குச்செய்துள்ள வஸீயத்தின்படியே தாம் நடந்து கொண்டுபோவ தாக விளக்கமாய் ஆபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக் கும் எடுத்துக்கூறிய போது ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ''அப்படியானால் பாத்திமா நாயகியுடைய வஸீயத்தின் படியே நடத்துங்கள்'' எனக் கூறினார்கள்.

பாத்திமா நாயகியின் சற்குணங்களுடைய ஓர் அம்சமானது அவர்களது வெட்காச்சாரங்களைப் பொருந்திய தாகுமென மேலே கூறிவந்ததற் கிணங்கவே, அவர்கள் தம் பையத்தை இராக்காலத்தி லேயே கொண்டுபோய் அடக்கம் செய்ய வேண்டுமென்றும், தம் கண வராகிய ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு வற்பு றுத்திச் சொல்லி யிருந்தார்கள்.

ஆனது பற்றி, இராக் காலத்தின் போது பாத்திமா நாயகியின் ஜனாஸா மதீனாவிலுள்ள ஜன்னத்துல் பக்கி என்னும் கபுருஸ்தானத்தி ற்குக் கொண்டு போகப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஜனாஸா தொழுகையைத் தொழவைத்தார்கள். இராக்காலத்தின் பொருட்டு ஜனாஸாவுக்குப் போதிய ஜனங்கள் வரக்கூடாமற் போயிற்று. ரசூல் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய தோழர்கள் இதைப்பற்றி மிகவும் வருந்தினர்.

குறிப்பு:-பாத்திமா நாயகி வபாத்தாய் விட்டசெய்தி ஹஜ்ரத் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சமயத்திலேயே கிடைத்துவிட்டதென்றும் அவர் (பாத்திமா) தம்முடைய ஜாகையில் அடக்கமாக வில்லை என்பதற்கு அவர் அவ் வாறு அடக்கமாயிருக்கும் பட்சத்தில் ஜனாஸாவின்பேரில் திரைபோ டும் படியான ஏற்பாடு அவசியமாய் இருந்திருக்கவில்லை என்பதும் நன் குவிளங்குகின்றன. இன்னு மோர் ரிவாயத்தில் பாத்திமா நாயகியின் ஜனாஸாவிற்காக வேண்டி ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் அப்பாஸ், ஸுபைற்,அப்துர் றஹ்மான்பின் ஒளப், றலியல்லாஹு அன்ஹும் முதலிய ஸஹாப்பாக்க ளெல்லாம் விஜயமா யிருந்தபோது ஹஜாத் அபூபக்கரினிஸ்ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களே நம் மெல்லோரினும் மேம்பட்டவர்க ளானதால் அவர்களே ஜனாஸா தொழுகையைத் தொழும்படி வைக்க வேண்டும் என ஹஜாத் அலி றலியல்லாஹு அன்ஹு கூறியதாகவும் அதுபோல் ஹஜாத் அபூபக்கரினிஸ் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களே தொழும்படி செய்வித்த தாகவும் கூறப் பட்டிருக்கிறது.

இமாம் ஜலாலுத்தீன் சுயூத்தீ அவர்கள் கஸாயஸெ குப்ராவில் எழுதுகிறார்கள்:— ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமாயிருப்பதாவது:- கியாமத் நாளில் எல்லோருக்கும் முந்தி நானே ஸிராத்துடைய பாலத்தைக் கடப்பேன். அடுத்தாற்போல் "ஓ மஹ்ஷர் மைதானத்திலுள்ள ஜனங்களே! எல்லோரும் உங்கள் கண்களை மூடிக் கொள்ளுங்கள். ஏனெனில் முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய புதல்வியாராகிய பாத்திமா நாடகிவரப் போகிறார்கள்" என்ற சப்தம் முழங்கும். அப்படியே ஜனங்கள் தங்கள் கண்களை மூடிக் கொண்டதும் பாத்திமா நாயகி இரண்டு பச்சைப்போர்வைகளை உடுத்திக் கொண்டு ஸிராத் உடைய பாலத்தைக்கடந்து போவார் என்று திருவுளமானார்கள்.

முஸ்லிம் றலியல்லாஹு அன்ஹு அனஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவுளமாயிருப்பதாவது:—எல்லோருக்கும் முதலாவதாக நானே சுவர்க்கத்தின் கதவைத் தட்டி அதைத் திறக்கவைப்பேன். சுவர்க்கத்தின் பொக்கிஷதாரர் நான் கதவைத் தட்டியவுடன் "நீங்கள் யார்?" என்று கேட்பார். நான்:—முஹம்மத், என்று பதிலளிப்பேன். அப்போது அவர் அப்படியானால் "நான் திறக்கிறேன். ஏனெனில் முதல் முதலாக, தங்களுக்காகவே கதவு திறக்கும்படி எனக்குக் கட்டளை யிடப்பட்டிருக்கிறது" என்பார்.

அபூஹுறைறாவுடைய ரிவாயத்திற்கிணங்க, ரசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அடுத்தபடி பாத்திமா நாயகித்தான் ஸ்வர்க்கத்தில் பிரவேசிப்பார்கள் என்றுவந்திருக்கிறது.

———o———

## 16-வது அத்தியாயம்

### பாத்திமா நாயகியின் மூதுரைகள்

ஒரு தடவை பாத்திமா நாயகியின் தோழியொருவர் பாத்திமா நாயகியைப் பார்த்து "ஒருவரிடம் 40-ஒட்டகங்களிருக்குமானால் அவற்றிற்கு எத்தகைய ஜகாத்துக் கொடுக்கவேண்டும்" என வினவியதற்கு பாத்திமாநாயகி "உங்களுக்காக 40-ஒட்டகங்களுக்கு ஓர் ஒட்டகமும் எனக்காக 40-ஒட்டகங்களுக்கு 40-ஒட்டகங்கள் வீதமுமே ஜகாத்து ஏற்படுவதாகும்" என்றார்கள். அவர்கள் கூறிய பதிலாவது ஹஜ்ரத் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பதிலைப்போன்றதேயாகும். அதாவது ஒருபோது ஹஜரத் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் சொத்து சுதந்திரங்கள் யாவற்றையும் ஏழைகளுக்குத் தானம் செய்துவிட்டு றசூலுல்லா பால் வந்தபோது ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அபூபக்கர்

றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி, "நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்காக என்ன விட்டுவந்தீர்கள்" எனக்கேட்டபோது அவர்கள்:--"அல்லாவுடைய ரசூலே! நான்என் பிள்ளைகளின் சம்ரக்ஷணைக்காக அல்லாவையும் அவனுடைய ரசூலையும் மீதியாகவிட்டு வந்திருக்கிறேன்" எனப்பதிலளித்தார்கள்.

ஒருதடவை, பாத்திமா நாயகி நோயாயிருந்துவந்த நிலைமையிலும் இராமுழுதும் ஆண்டவனுடைய இபாதத்திலேயே கழித்துக் காலைத் தொழுகைக்காக வேண்டி நோத்தோடே எழுந்திருந்து தம் கணவனார் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பள்ளிவாசலுக்குப் போகவிட்டுத் தானும் தொழுகையில் அமர்ந்துகொண்டார்கள். அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பள்ளிவாசலினின்றும் திரும்பி விட்டிற்கு வந்தபோது பாத்திமா நாயகி திரிகை அரைத்துக்கொண்டிருப்பதைக்கண்டு"ஓ! ரசூலுடைய அருமைப்புதல்வியாரே!தேக அசௌக்கிய மேற்பட்டிருக்கையில் இளைப்பாறுவதற்குப் பதிலாக அதிக வேலைவெட்டிகளைச் செய்யாதீர்! ஏனெனில் இச்சந்தர்ப்பத்தில் அதிக வேலை அதிக அசௌக்கியத்தை யுண்டுபண்ணத் தக்கதாகும்" எனக் கூறியபோது பாத்திமா நாயகி அலியாருக்கு அளித்த பதிலாவது:—"நான் செய்யும் இரண்டு வேலைகளில் ஒன்றுகிலும் வியாதியை அதிகரிக்கக் கூடியதல்ல. எப்படியெனில் இறைவனுடைய வணக்கமும் கணவருடைய சேவையும் வியாதியை நிவர்த்திப்பதற்கு இன்றியமையாத சிகிச்சையாகும்: ஒருகால் அப்படியே அந்த இரண்டு சேவைகளோ அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றோ என் வியாதியை அதிகரிக்கச்செய்து அதனின்றும் எனக்கு மரண மேற்படுமானால் அதைவிடப் பெரும்பதவியும், மேற்கொண்ட ஆவலும் எனக்குக் கிடையாது. ஆயிரக் கணக்கான உலக வாழ்க்கைகளை அத்தகைய மரணத்திற்காக அர்ப்பணம் செய்யத்தகும்" என்றார்கள்.

ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மக்கத்தை வெற்றியடையுமுன், ஒரு நாள் மதீனா முனவ்வறாவின்கண், அபூசுபியானுடைய மகள் உம்மெ ஹபீபா, தன்னுடைய தகப்பன் ரசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய முஸல்லாவில் உட்காரப் போவதைக்கண்டு "நீர் இவ்விடம் உட்காருவதற்குத் தகுதியற்றவராவீர்; ஏனெனில் இதுவோ கடைசி காலத்தின் திருநபியார் தொழுதுகொள்ளும் ஸ்தானமாகும்; காபிரான உம்முடைய அசுசியான தேகம் இவ்விடம் படலாகாது" என்று கண்டித்துச் சொல்லியபோது அபூசுபியான், மன முறிவுகொண்டு பாத்திமா நாயகியுடைய வீட்டிற்குப்போய் ஹஸனைத்தூக்கித் தம்மடியில் வைத்துக்கொண்டு "பிள்ளாய்! நீ என்னை ஆதரித்துக்கொள்" என்றார்.

அதைக்கேட்ட பாத்திமா நாயகி அபூசுபியானுக்கு "ரசூலுல்லாவுடைய பிரியத்திற்கு விரோதமாக இன்று மதீனாவுக்குள் ஒருவராவது உம்மை ஆதரிக்க முடியாதாகையால் நீர் இதைவிட்டும் போய்விடும். உம்முடைய பாதுகாப்புக்குரிய கவலை உமக்கிருக்கும் பட்சத்தில் ஹஜரத்அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆலோசனையின் பேரில் நபிகள் நாயகம்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடத்திற்குப்போய் முறையிட்டுக் கொள்ளுங்கள்'' என்றார்கள். (அல்ஹஷாமீ)

## 17-வது அத்தியாயம்

### பாத்திமா நாயகியுடைய ஜீவியசரித்திரத்தால் நம் சகோதரிகளுக்கு போதனைகள்

சகோதர சகோதரிகளே! நீங்கள் இது வரையில் படித்து வந்த விஷயங்களி னின்றும் பாத்திமா நாயகியின் சாதாரண வாழ்க்கையைப் பற்றிய விவரத்தைத் தெரிந்துக்கொண்டீர்கள். அவர்கள் தங்கள் கைப் படவே வீட்டின் சகல வேலைகளையும் செய்து வருவார்கள் என்பதற் கிணங்க திருகை யரைத்தல், ரொட்டி சுடுதல், குழந்தைகளைப் பரிபாலித்தல் முதலிய எல்லாக் காரியங்களையும் அவர்களே செய்து வருவார்கள். தம் குழந்தைகள் அறிவிற்கு எட்டிய உடன் சமூகா அபிமானத்தையும், தேசாபிமானத்தையும் அவர்களுக்குத்தக்க அளவில் போதித்து ஓர்வித ஊக்கத்தை யுண்டுபண்ணி வந்தார்கள். தங்களுக் குரிய அவசியங்களைப் பிறர் உதவியின்றித் தாங்களே நிறைவேற்றிக் கொள்ளவேண்டுமென்ற ஊக்கத்தையும் தங்கள் குழந்தைகளுக்கு உண்டுபண்ணிக்கொண்டு வந்தார்கள்.

அந்தோ! தற்காலத்திய நம் சகோதரிகளில் பெரும்பான்மையோர் தங்கள் வீடுகளில் செய்யும் வேலை என்ன என்பதைக் கவனிப்போமானால் தங்கள் வீட்டு வேலைகளையே தங்கள் கைப்படச் செய்வதில்லை என்பது ஒருபுற மிருக்கத் தாங்கள் ஈன்றெடுத்த குழந்தைகளுக்குத் தங்கள் கைப்பட சம்ரக்ஷணை செய்வதையும் கடினமான காரியமென எண்ணுகிறார்கள். தங்களை அலங்கரித்துக்கொள்ளும் காரியம் ஒன்றைமட்டும் தங்களுடைய வேலை கடமை என்று கருதிவிடுகிறார்கள். இந்த நிலைமையில் அவர்கள் அல்லாவுக்கும் அவனுடைய றசூலுக்கும் வழிபட்டுத் தாங்கள் செய்யவேண்டிய கடமைகள் இன்னின்ன வென்று உணருகிறார்களில்லை.

சர்வ வல்லமையுள்ள இறைவன் தன் அடியார்களைச் சீர்படுத்துவதற்குப் பிரதியட்சமாகச் சுன்னத் என்ற கொள்கையைப் பின்பற்றி நடக்கும் படியாகக் கட்டளையிட்டிருக்கிறான். அதாவது இறைவன் தன்னுடைய அடியார்களை நேர்வழிக்குக் கொண்டுவர வேண்டுமென

விரும்புகிறுன். தன்னுல் ஒப்புக்கொள்ளப் பட்ட யாதொரு நல்லடியாரைத் தீர்க்கதரிசி (நபி) யாக்கி உலகத்தின்கண் தோன்றச் செய்கிறுன்.

அதாவது:—அவன் அத்தீர்க்கதரிசியை ஒரு நமூனுவாக உலகத்தில் கொண்டுவருகிறுன். இதற்கொப்ப உலக ஸ்திரீகள் தங்களுடைய சீர்திருத்தத்திற்காக வேண்டி எவ்வித நமூனுவாகிலும் வேண்டுமென விரும்பும் பட்சத்தில், இதோ அவர்கள் றசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களது அருமைப் புதல்வியாராகிய பாத்திமா நாயகியின் நல்லொழுக்கங்களையும் அவர்களின் ஜீவிய சரித்திர விஷயங்களையும் செவ்வனே உணர்ந்து அவைகளையே பின்பற்றி நடக்க வேண்டும்.

பாத்திமா நாயகியுடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் நம் பெண்மணிகள் அடையவேண்டிய போதனைகளெல்லாம் அமைந்திருக்கின்றன. பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் அல்லாவுடைய ரசூலுக்குப்புதல்வியாராக விருந்தும் தம் வாழ்நாள் பரியந்தம் பல விதமான கொடிய சிரமங்களை யடைந்தே வந்தார்கள். அவர்கள், தாமே வீட்டு வேலைகள் யாவையும் செய்வார்கள். அப்படியிருக்க, நாமும் நம்முடைய பிரயாசையின் பேரில் விட்டுக் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதும் ஏனென்றுல் ரசூலுல்லாவுடைய அருமைப் புதல்வியாரைக் காட்டிலும் நம்முடைய பதவி உயர்ந்திருக்கவில்லை என்பதும், அவர்கள் ஹலாலான உணவை உட்கொண்டு வந்தார்கள் என்பதற்கு நிகராக நாமும் உயிரோடிருக்கையில் உயிரற்ற பிணத்தைப்போல் வேலை செய்யாமல் கிடக்கலாகாது என்பதும், நாம் வேலைசெய்யவேண்டிய கால(உயிரோடிருக்கையில்)த்தில் ஒய்வு அடைந்திருக்கக்கூடாது என்பதும் பாத்திமா நாயகி சிற்சில சமயங்களில் இரண்டிரண்டு நாளுக்கு வேளைகளுக்குரிய ஆகாரமும் கிடைக்காது வருந்திவந்தார்களாயினும் அவர்கள் இறைவனுடைய ஸந்நிதானத்தில் பொறுமையுடன் நன்றிபாராட்டி வந்தார்களாதலால் நாமும் கஷ்டவேளைகளிலும் பொறுமையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்பதும், நீதிவாய்ந்த நம் சகோதரிகள் பாத்திமாநாயகியின் கிஸ்ஸாவிலிருந்து போதனை அடைந்து கொள்வார்களென்றே நம்புகின்றேம். மேலும் பாத்திமா நாயகி வறுமையால் வருந்தி வந்தார்க ளாயினும் தம்மிடத்திற்கு வரப்பட்ட ஏழைகளுக்கும் தேவையுள்ளவர்களுக்கும் தம்மாலியன்ற தர்மத்தைச்செய்து பக்ஷமாய் ஆதரித்து வருவார்கள். அவர்களுடைய வீட்டு வாயிற்படிக்கு வந்த எந்த முஸாபர் பக்கிரியையும், அவர்கள் ஏதேனும் கொடாது வெறுங்கையாக அனுப்ப மாட்டார்கள். ஆகையால், நாமும் தர்ம சிந்தையைக் கடைப் பிடித்து ஏழை

யதீம்களுக்கு உதவி ஒத்தாசைகளைச் செய்யவேண்டுமென்பதையும் அவ்வேழைகள் நம்மிடம் கோரும் யாதொரு கிரமமான தேவைகளை நம்மால் கூடியவரையில் பூர்த்தி செய்து வைக்க வேண்டுமென்பதும் நம்முடைய கடமை என உணர்ந்து கொள்ளவேண்டும்.

பாத்திமா நாயகியுடைய நிக்காஹ் காரியம் ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் மிகவும் சாதாரண விதமாய் நடத்தி வைக்கப்பட்டது. எவ்விதத்திலும் வீண் செலவு ஏற்படவில்லை. அதனின்றும் நாமும் கலியாண காரியங்களில் செய்ய[illegible]யும் பலவிதமான வீண் செலவுகளை அகற்றிக் கூடியமட்டில் அத்தகைய வீண் செலவுகளை விட்டும் தப்பியிருக்க முயற்சிக்க வேண்டும். பாத்திமா நாயகியுடைய கணவராகிய ஹஜ்ரத் அலி றலியல்லாஹு அன்ஹு பரம ஏழை மிஸ்கீனாகியும் பாத்திமா நாயகியின் தந்தையாராகிய ஹஜ்ரத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் கீழ்ப்படிந்தவர்களாயுமிருந்து வந்தார்களாயினும் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் தம் கணவரைக் கிஞ்சித்தும் கேவலமாகக் கருதாது எந்நேரமும் எச்சமயத்தும் அவர்களுடைய ஊழியத்தைச் சிரமேற்கொண்டு வந்தார்கள். எனவே, நம் முஸ்லிம் சகோதரிகளே! நீங்கள் தத்தம் கணவருக்குக் கீழ்ப்படிந்து அவர்களுடைய உத்தரவுகளுக்குச் சிறிதும் விகற்பமாக நடந்துகொள்ளக் கூடாத முறையைக் கடைபிடிக்க வேண்டியது. பாத்திமா நாயகி, எல்லோரையும் பசியாற்றிய பின்னரே தாம் பசியாறுவார்களாதலால் நீங்களும் அவ்வாறே செய்யவேண்டும்.

ஆண்டவனுடைய வணக்கத்திலும் அவனைத் தியானிப்பதிலும் அவனுடைய பக்தி விசுவாசத்திலும் பாத்திமா நாயகி, அரும் பெருந்தக்வா வாய்ந்திருந்தார்கள் நம் சகோதரிகளில் அநேகரோவெனில் பர்லான தொழுகைகளையும் கூட நிறைவேற்றி வைக்கக் காணோம். அந்தோ! இவ்வாறு அசட்டையாயும் அலக்ஷியமாயுமிருந்து வரும் நம் சகோதரிகள் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் இபாதத்தில் எத்தகைய சிரத்தை மேற்கொண்டிருந்தார்கள் என்பதை யுணர்ந்து அதன் மூலமாய் போதனையடைவார்களாக. சுருக்கிச் சொல்லின், பாத்திமா நாயகியின் ஜீவிய சரித்திரத்தின் ஒவ்வொரு அம்சமுங் கூட உலக ஸ்திரீகளுக்காக வேண்டிப் போதுமான உரோஷத்தையும் உபதேசத்தையும் உணர்த்தக் கூடியதாகும். நாம் நம்முடைய ஆழ்ந்த அறிவைக்கொண்டு, அதைக் கிரமமாகச் சிந்தித்துப் பார்ப்பது இன்றியமையாத கடமையாம்.

வஸல்லல்லாஹு தஆலா வஸல்லம வபாறக் அலா கைரி கல்கிஹி செய்யிதினா முஹம்மதின் வஅலா ஆலிஹி வஅஸ்ஹாபிஹி அஜ்மயீன். வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

பாத்திமா நாயகி ஜீவிய சரித்திரம் முற்றிற்று.

சீறதுல் குப்ரா
என்னும்

# கதீஜா நாயகி (றலி) ஜீவிய சரித்திரம்

இச்சரித்திரமானது, எவரும் எஜமானியாக ஏற்று பின் பற்றத் தக்க நாயகியான மஹா சங்கை பொருந்திய ஓர் பெருமாட்டியின் ஜீவ விருத்தாந்தமாகும். இம்மங்கையர் தமது வடிவாம் சங்களில் உலகப் பெண்கள் எல்லாரினும் மீக்குற்றவர்; அன்றியும், நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய நம்பிராட்டிகள் எல்லாரினும், பிரதம பிராட்டியார் என்ற பெருமை அவருக்கு வாய்த்திருந்தது. அவரது வாழ்க்கை சம்பந்தமான சரித்திரமோ அனைவரும் கண்டு அனுஷ்டிக்கத் தக்கதாயிருக்கிறது.

இதில் கதீஜா நாயகியின் வமிச பரம்பரையும், முதற் கலியாணங்களும் அவர்களின் வர்த்தகச் செல்வமும், றசூல் நாயகம் ஷாம்மிஸர் தேசங்களுக்கு யாத்திரை போய் வந்ததும், கதீஜா பெருமாட்டிக்கும் நபிகள் பெருமானார்க்கும் திருக்கலியாணம் முடிந்ததும், கதீஜா பெருமாட்டி தமது உரிமையை கணவருக் கர்ப்பணஞ் செய்தல், நபி பெருமானார்க்கு வஹி இறங்குதல், நபிபட்டந் தரித்தல், நபிகள் பெருமானார்க்கு கதீஜா பெருமாட்டியின் உதவி, கதீஜா பெருமாட்டியின் மௌத் முதலியன அடங்கியிருக்கின்றன. இச்சரிதையால் நம் முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கு அளவற்ற போதனைகள் நிறைந்திருக்கின்றன.

இதன் விலை அணா. 0—12—0

ஹஸரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்
அவர்களின் அருமைப் புதல்வியாகிய,

# பாத்திமா நாயகி (றலி) ஜீவிய சரித்திரம்

இச்சரித்திரத்தில் ஹஸரத் பாத்திமா நாயகி அவர்களின் மாதாவாகிய உம்முல் முஃமினீன் கதீஜா நாயகி அவர்களின் வமிச பரம்பரையும் அவர்களின் பிறப்பும், பாத்திமா நாயகியின் பிறப்பும், சிறுபாலிய அறிவும், பரஸ்பர அன்பும், நாயகியின் திருக்கலியாணமும், அவர்கள் தன் வீட்டில் குடித்தனம் நடத்திவரும் ஒழுங்கும், தனது பத்தாவாகிய அலியாருக்கு ஒற்று நடக்கும் அழகும், அவர்களின் தயாள சிந்தனையும் உழைப்பும், ஆண்டவனின் மீது பக்தியும் வணக்கமும், கபூலாக்கப்பட்ட துஆவும், றசூலுல்லாவுக்கு பாத்திமா நாயகியின்பால் இருந்து வந்த அன்பும், நாயகிக்கு தம் தந்தையின் பால் இருந்து வந்த பிரியமும், அவர்களின் நாணம், அடக்கம், அச்சம் முதலிய ஒழுக்கங்களும், இமாம் ஹஸன் ஹுஸன் றலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் மேம்பாடும், நாயகியின் வபாத்தும், இந்நாயகியின் ஜீவிய சரித்திரத்தால் நம் சகோதர சகோதரிகளுக்கு அரிய போதனைகளும், அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு முஸ்லிமும் இச்சரிதையை வாசித்துணரவேண்டியது மிக்க அவசியமாகும்.

இதன் விலை ரூ. 1—0—0

பெற்றுக்கொள்ளுமிடம்:—

எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
ஹமீதிய்யா பில்டிங்க்ஸ், நெ. 20, ஹைரோட்,
திருவல்லிக்கேணி, மதறாஸ்.